விலை சதம் 25

சுதந்திரன்
SUTANTIRAN

திருவள்ளுவர் ஆண்டு 1998 ஆடி திங்கள் 20-ம் நாள் (5—8—67) சனிக்கிழமை ரபி.ஆகி 27 | புத்தகம் 22
194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12. தொலை பேசி எண்-3411 த. பெ. 1183 | இதழ் 1

சுதந்திரன்

பரபரப்பு இல்லை. ஆனால்.....

தேசிய அரசாங்கத்தின் 3வது வரவு செலவுத்திட்டத்தின் மீது விவாதம் பாராளுமன்றத்தில் இவ்வாரம் ஆரம்பமாகியுள்ளது. இத்திட்டத்தில் பரபரப்பு எதுவுமில்லை. ஆனால் வாழ்க்கைச் செலவைப் பாதிக்கும் தாக்கம் அதில் அடங்கியுள்ளது. அத்தியாவசியமற்ற பொருட்களின் விலை வரிகள் உயருவதற்கு இடமுண்டு. அரசாங்க ஊழியர்களில் குறைந்த ஊதியம் பெறுபவர்களுக்குச் சம்பள உயர்வு வழங்கப்பட்டிருப்பதால் வாழ்க்கைச் செலவு உயர்வு அவர்களைப் பெருமளவு பாதிக்காது. இச்சம்பள உயர்வு தனியார் துறையிலும் எதிரொலிக்கும். அதனால் தனியார் துறை ஊழியர்களுக்கும், இதர அரசாங்கஊழியர்களுக்கும் சம்பள உயர்வு வழங்க வேண்டிய ஒரு நிலை உருவாகலாம்.

தேசிய அரசாங்கம் எதிர்பார்த்த அளவுக்கு வெளி நாட்டு உதவி கிடைக்கவில்லை என்பது உண்மையே! அதற்காக கண்ணை மூடிக் கொண்டு வரிகளை உயர்த்தி விடவுமில்லை. நிதி அமைச்சர், செல்வந்தர்கள் மீது வரிப் பளுவை சுமத்துவதற்கு அமைச்சர்தவறிவிட்டார் என்று சிலர் ஏசுகின்றனர் இது வெறும் விதண்டவாதம்!

பொன் முட்டையிடும் வாத்தைக் கொன்று விட்டால் அந்த முட்டையை எப்படி பெற முடியும்? இதனை அமைச்சர் உணர்ந்துள்ளார் என்பதைக் காட்டுகிறது அவரது வரவு செலவுத் திட்டம். உத்வேக உணவு உற்பத்தித் திட்டத்துக்கு அமைச்சர் பெரிதும் ஊக்கமளித்திருக்கிறார் இதன் பலன் வடபகுதி கமக்காரர்களுக்கும் கிடைத்தல் வேண்டும்.

உணவில் நாடு தன்னிறைவு பெற யாழ். விவசாயிகளை எதிர்பார்த்திருப்பதாக அமைச்சர்கள் அடிக்கடி கூறுகின்றனர். அந்த விவசாயிகளுக்கு உதவும் பொருட்டு வரவு செலவுத் திட்டம் பயன்படுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

தமிழ்ப் பகுதிகளின் அபிவிருத்தித் திட்டங்களின்பால் வரவு—செலவுத் திட்டம் ஓரளவு கவனம் செலுத்தியுள்ளது. காங்கேசன்துறை துறைமுகத்தில் இறங்கு துறை அமைத்தல், மயிலிட்டியில் மீன் பிடித்துறைமுகம் அமைத்தல், காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையை விஸ்தரித்தல், திருமலைத்துறைமுகத்தில் இறங்குதுறை அமைத்தல் முதலியவைகளுக்குத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன், யாழ்ப்பாணத்தில் தொழில் பேட்டை அமைத்தலும் திட்டத்தில் இடம் பெற்றுள்ளது.

அங்கு கனிஷ்ட பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கப்படும் என்றும் வரவு—செலவுத் திட்டம் கூறுகிறது. ஆனால் கிழக்கு மாகாணத்தில் கனிஷ்ட பல்கலைக் கழகம் அமைப்பது பற்றி திட்டம் மௌனம் சாதிக்கிறது.

முன்னாள் அரசாங்கங்களால் புறக்கணிக்கப்பட்ட தமிழ் பகுதிகளின் பொருளாதார அபிவிருத்தியில் இந்த அளவுக்காவது அக்கறை செலுத்தியதற்காக நிதி அமைச்சரைப் பாராட்டுகின்றோம். ஆயினும் எதிர்பார்த்த அளவுக்கு அவரது வரவு—செலவுத் திட்டம் நம்பிக்கை அளிப்பதாயில்லை என்பதையும் சுட்டிக்காட்டுகின்றோம்.

மலையக மக்களுக்கு சிற்றரசு எச்சரிக்கை

கஷ்டப்பட தயாராக வருக! அங்கு பாலும் தேனும் ஓடவில்லை

"இந்தியாவில் பாலும் தேனும் ஓடுவதாகவும் அங்கு வந்தால் இலங்கையைவிட அதிக சௌகரியங்களுடன் வாழலாமென்றும் கூறப்படுவதைக் கேட்டு தோட்டத் தொழிலாளர்கள் ஏமாந்துவிடக்கூடாது. இன்று பொதுவாக இந்தியாவுக்கும்சரி, குறிப்பாகத் தமிழகத்துக்கும்சரி பல நெருக்கடிகள் உள்ளன. அங்கும் வேலையில்லாத் திண்டாட்டமும் ஏனைய கஷ்டங்களும் தாராளமாக உள்ளன. பர்மாவிலிருந்து வந்த தமிழர்கள் கஷ்டமடைந்தது போலவே ஈழத்திலிருந்து வரும் தமிழர்களும் கஷ்டமடைய நேரிடலாம். எனவே இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இந்தியா வர விரும்பும் தோட்டத் தொழிலாளர்கள் அங்குள்ள கஷ்டப்படும் மக்களுடன் சேர்ந்து கஷ்டப்பட தயாராகவே வரவேண்டும்." இவ்வாறு ஈழத்துக்கு வருகை தந்துள்ள தி. மு. க. தலைவர்களில் ஒருவரும், அறிஞர் அண்ணாவின் நெருங்கிய நண்பரும் சென்னை மேல் சபை உறுப்பினருமான சிந்தனைச் சிற்பி திரு சி. பி. சிற்றரசு சுதந்திரன் நிருபருக்களித்த விசேட பேட்டியொன்றின்போது கூறினார்.

திரு. சிற்றரசு கடந்தவாரம் ஈழத்துக்கு விஜயம் செய்து தற்போது நாட்டின் பலபாகங்களையும் சுற்றிப்பார்த்து வருகிறார்.

சுதந்திரன் நிருபருக்கு பேட்டியளிக்க முழு மகிழ்ச்சியுடன் அவர் ஒப்புக்கொண்டார். தமது விஜயத்தில் அரசியல் நோக்கம் எதுவுமில்லையென்றும் இலங்கையைச் சுற்றிப் பார்த்துவிட்டுப் போகவே வந்ததாகவும் திரு. சிற்றரசு தெரிவித்தார்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இங்குள்ள தோட்டத் தொழிலாளர்களை இந்தியாவுக்கு 'விரட்டியடிப்பதற்காக' இந்தியாவில் பாலும் தேனும் ஓடுவதாக இங்குள்ள தமிழ் தினசரிகளும், சில தலைவர்களும் கூறி வருவதையும், தி. மு. க. தலைவர்களின் பேச்சுக்களைத் தினசரிகள் திரித்து வெளியிடுவதையும் திரு. சிற்றரசுவின் கவனத்துக்கு நமது நிருபர் கொண்டுவந்தபோது, திரு. சிற்றரசு கூறியதாவது:-

'இந்தியாவில் பாலும் ஓடவில்லை. தேனும் ஓடவில்லை. இந்தியாவுக்கு வேலையில்லா நெருக்கடி, உணவு நெருக்கடி போன்ற பல தொல்லைகள் இருக்கின்றன. இந்த நெருக்கடியினால் அங்குள்ள மக்கள் கஷ்டமடைகிறார்கள். இந்தப் பிரசாரத்தைமட்டும் நம்பி தோட்டத் தொழிலாளர்கள் ஏமாந்துவிடக் கூடாது.'

(5ம் பக்கம் பார்க்க)

பித்தலாட்ட பிரசாரம்

ஜனாப் மசூர் மவுலானா சென்ட்ராகத் தெரிவு செய்யப்பட்டதை, செய்திகளைத் திரிப்பதில் கைதேர்ந்த சில

(9-ம் பக்கம் பார்க்க)

புதிய தமிழரசு சென்ட்டர்

தமிழரசுக் கட்சியின் சார்பில் கட்சியின் பழம் பெரும் உறுப்பினரும் கரவாகு வடக்கு கிராம சபைத் தலைவருமான ஜனாப்-மசூர் மவுலானா திரு. மாணிக்கத்தின் ராஜினாமாவால் காலியான மூதூவை உறுப்பினர் ஸ்தானத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஜனாப் மவுலானா கடந்த தேர்தலில்கல்முனைத் தொகுதியில் தமிழரசுக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு 490 வாக்குகளால் வெற்றிக்கான வாய்ப்பை இழந்தவர் என்பது தெரிந்ததே.

தன் கூற்று தன்னை விரட்டுகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேனாட்டு விருந்தும் மேவாத உள்ளமும்

(9)

காதலை ஆரம்பிப்பது எவ்வளவு சுலபம் என்பதையும் அதை நிலைநிறுத்துவது எவ்வளவு கடினம் என்பதையும் அப்போது தான் நாதனும் தேன் மொழியும் உணர்ந்தார்கள். காதல் என்கிற உணர்ச்சி வளர்வதற்கு ஒரு ஆணும் ஒரு பெண்ணும் போதுமாயினும் அது திருமணம் என்னும் வடிவம் பெறுவதற்கு பெற்றோர் முதல் சுற்றம் — சமூகம் என்கின்ற எத்தனையோ தடைகள் விடைகொடுக்க வேண்டும். விடைகள் கொடுக்கப்படாமல் இருப்பதற்கு பழைய பகைமை சுயநலம், பொறாமை, இவைகளே பெரும்பாலும் காரணமாக இருக்கும். ஆயினும் காதலை தடுப்பவர்கள் பெற்றோர்கள் என்றால் அதற்குக் காரணம் நல்ல நோக்கமாகத் தான் இருக்க முடியும்

எந்தத் தடையையும்தாண்டுவதற்கு ஆயத்தமாக இருந்தான் நாதன். தந்தையினுடைய அன்பு மழையில் வளர்ந்த தேன் மொழி தந்தையின் விருப்பத்துக்கு மாறாக நடக்க முடியாதவளாயும் நாதனின் காதலைத் தவிர்க்க முடியாதவளாயும் தவித்தாள். நீண்ட நேர உரையாடலின் பின் 'உங்களுக்காக எவ்வளவு காலமும் நான் காத்திருப்பேன்' என்று தேன் மொழி முன்பு தொடக்கம் சொல்லும் முடிபையே அப்போதும் கேட்டு அவளின் அன்பின் உறுதியை நினைத்து மகிழ்ந்தான். தனக்காக எவரையும் கைவிட ஆயத்தமாக இருக்கிறாளே நாதன் என்று உள்ளூற எண்ணி மகிழ்ந்தாள் தேன்மொழி.

பலவகையான குழப்பங்கள் நிறைந்த மனத்தோடு தேன் மொழியும் நாதனும் வீடு திரும்பினர்.

●

சின்னையரும் நாதனும் தங்கி இருந்த அறைக்கு விஞ்ஞான ஆசிரியர் விசுவராசன ஒரு கடிதத்துடன் வந்தார்.

'டொக்டர் கண்டு' இதை உங்களிடம் கொடுக்கும்படி ஒருவனிடம் அனுப்பியிருக்கிறார்.

'டொக்டர் கண்டுவா' எனக்குத் தெரியாதே என்றார் சின்னையர்.

'அவருடைய முழுப்பெயர் மார்க்கண்டு. என்னுடைய மனைவி லீலா பெயர்களைச் சுருக்கிக் கூப்பிடுபவள் ஆதலால் மார்க்கண்டு வைக், கண்டு என்றே கூறுவாள். அவளின் பழக்கம் எனக்கும் வந்து விட்டது. 'மனைவியின் பழக்கத்தைக் கணவன் பின்பற்றுவதிலும் கணவனின் பழக்கத்தை மனைவி பின்பற்றுவது தான் நல்லது என்றார் சின்னையர் விசுவராசன் அடக்கமும் பணிவும் உள்ளமேதை ஆதலால் இந்த விஷயத்தில் இருந்து சின்னையரின் கவனத்தைத் திருப்புவதற்காக 'இன்று மாலை எங்கள் வீட்டில் விருந்து ஒன்று நடைபெற இருக்கிறது. சங்களச் சகோதரர்களும் ஆங்கிலச் ரீமான்களும் கலந்து கொள்ளுகிறார்கள். எல்லாம் மேனாட்டு முறையில் நீங்கள் இதே போல் விருந்தில் முன்பு கலந்திருக்க மாட்டீர்கள். இன்று இந்த விருந்தில் கலந்து கொள்ளுங்கள்.' என்று' கேட்டார்.

'தம்பி நீங்கள் என்னை அன்போடைகேட்டதுக்கு நன்றியுள்ளவனாய் இருக்கிறேன். இந்தக் காலத்திலே மனிசன் செய்யிற பெரிய பிழை தன்னை நிலையை அறியாமல் தான் நடந்து கொள்ளுறது தான். என்னை உடுப்புக்கும் என்னை பழக்க வழக்கங்களும் மேனாட்டு முறையிலே நடக்கிற விருந்துக்கும் வெகு தூரம், ஆனபடியால் நான் வரேல்லே' என்றார் சின்னையர். 'சரி' என்று விசுவராசன் போய் விட்டார்.

'அப்பு! நல்ல வேளை நீ மறுத்தது. இவர் நல்ல மனிதன். நீ விருந்துக்குப் போயிருந்தால் இவருடைய மனைவி இவருக்குத் தான் தொந்தரவு கொடுத்திருப்பாள்' என்றான் நாதன். 'நீ எனக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டாமெடா. ஒரு முறை பார்த்தாலே எனக்கு எல்லாமே விளங்குமடா உன்னையும் விளங்குமடா,' என்றார் சின்னையர்.

மாலை ஏழு மணிக்குவிருந்து ஆரம்பமாகியது. ஆங்கில வாத்திய ஒலி ஓலித்துக் கொண்டிருந்தது. மேனாட்டு முறையில் நடந்த விருந்தில் மதுபானமும் இருந்தது என்பது சொல்லாமலே தெரிய வேண்டிய ஒன்று அல்லவா?

கணவனுக்குப் பக்கத்தில் மனைவி இருக்க வேண்டும் என்ற ஒழுங்கு இத்தகைய விருந்துகளில் கடைப்பிடிக்கப்படுவதில்லை. ஒரு ஆணுக்குப் பக்கத்திலே ஒரு பெண். பேச்சுத்துணைக்கு இருக்க வேண்டும்; அது, யாராகவும் இருக்கலாம். சந்தோஷமாக உணவைச் சுவைத்துக் கொண்டே உரையாடிக் கொண்டிருப்பார்கள். நகைச்சுவையான செய்தியை யாராவது ஒருவர் சொன்னால் அதைச் சாட்டாக வைத்துப் பக்கத்தில் இருப்பவரின் முதுகில் தட்டிச் சிரிப்பவர் சிலரும் அந்த விருந்தில் இருந்தார்கள். நாதனின் அறையில் இருந்து இதனைக் கவனித்த சின்னையர், 'இதற்குப் பெயர் விருந்தா' என்று ஒரு முறை தன்னைத்தானே கேட்டுக் கொண்டார்.

(அடுத்த இதழில் முடியும்)

சங்கப் பலகை

நூல்: குழந்தை வளர்ப்புக் கலை
ஆசிரியர்: திருமதி ரங்கநாயகி ரங்கராஜன்
வெளியீடு: தி லிட்டில் பிளவர் கம்பெனி
தியாகராச நகர், சென்னை-17.
விலை, ரூபா 2—60.

வாழும் பிள்ளையை மண்விளையாட்டிலே தெரியும் என்று கூறுவார்கள். ஒரு குழந்தை வளரும் பருவத்தில், எத்தகைய சூழலில் வளர்க்கப்படுகிறதோ, அதைப் பொறுத்துத்தான் அதன் பிற்கால முன்னேற்றம் காணப்படும். சமூகத்தில், திருடர்களும், பொய்யர்களும் புரட்டர்களும் தோன்றுவதற்குக் காரணம், அவர்கள் குழந்தைப்பருவத்தில் நல்ல சூழ்நிலையில், நல்ல போதனைகளுடன் வளர்க்கப்படாமையே என்று கூறலாம்.

குழந்தை வளர்ப்பு என்பது ஒருகலை. சரியாகப் பேசத் தெரியாத குழந்தை தனது தேவைகளையும் ஆவல்களையும் சைகைமூலமும் மழலைமூலமும் வெளியிடுகின்றது. அவற்றையறிந்து குழந்தைகளை வளர்ப்பதே சரியான முறை. உலகின் ஒவ்வொரு அதிசயத்தையும் காணும் குழந்தை அதுபற்றி ஆராய்ந்தறிய முயலுகிறது. இது குழந்தைகளின் சுபாவம். குழந்தைகளின் இந்த ஆவலை எந்தப் பெற்றோரும் தடைசெய்யக் கூடாது.

நவநாரிகச் சூழலில் திரியும் இன்றைய பெண்களுக்கு குழந்தை வளர்ப்பு என்பது புரியாத புதிராக இருக்கலாமென்றெண்ணிப் போலும் குழந்தை வளர்ப்பு பற்றி மிக அருமையாக விளக்கியுள்ளார் இதன் ஆசிரியர். குழந்தையின் உணவு முறை, விளையாட்டு, குழந்தைகளுக்கு வரும் சுரவீனம், அவற்றுக்கு மாற்று மருந்து போன்ற பல்வேறு விஷயங்களையும் விளக்கமாகக் கூறியுள்ளார்.

பெண்கள் ஒவ்வொருவரும் அவசியம் இருக்கவேண்டியது இந்நூல்.

புதிய நிர்வாகிகள் தெரிவு

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி பெற்றோர் ஆசிரிய சங்க வருடாந்தக் கூட்டம் கல்லூரி அதிபர் பிரம்மஸ்ரீ. சீ. ஸ்ரீநிவாசன் அவர்கள் தலைமையில் 14-7-67 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்றது.

புது வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

போஷகர்கள்: திரு. சி.கதிரவேற்பிள்ளை, திரு. அ. கணபதிப்பிள்ளை.

தலைவர்: பிரம்மஸ்ரீ. சீ.ஸ்ரீநிவாசன்.

உபதலைவர்கள்: திரு. த. நடேசராசன், திரு. ந. இராமலிங்கம்.

செயலாளர்: திரு. ம. க. நடராசா.

பொருளாளர்: திரு. வை. [illegible] தெரிவுசெய்யப்பட்டது.

தமிழ் பகுதிகளிலே..

★ அகில இலங்கையிலும் முதற் தடவையாக படித்த இளம் பெண்கள் 50பேர் மிருசுவில் விவசாயக் குடியேற்றத் திட்டத்தில் ஆகஸ்டு 6ல் குடியேற்றப்படுவர் என்று தெரிகிறது.

★ திருமலை பொது வாசிகசாலையில் நல்ல தமிழ் நூல்கள் இல்லாதிருப்பதால் திருமலை உயர்தர வகுப்பு மாணவர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

★ யாழ் பிரதேச கலா மன்றத்தினரால் நடாத்தப் பட்ட யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையான ஆங்கில நாடகப்போட்டியில் யாழ்ப்பாணம் கன்னியாஸ்திரிகள் மடத்தின் பாடசாலை பரிசு பெற்றது.

★ சங்கானையிலிருந்து பிராம்பற்றை ஊடாகப் பண்டத்தரிப்பு செல்லும் விதி போக்கு வரத்து செய்ய முடியாத அளவுக்கு சீர்கேடு அடைந்து விட்டது. கடந்த 6ஆண்டுகளாக இது திருத்தப்படவில்லை.

★ தரமான மேல்நாட்டு உள்நாட்டு மரகறிவகைகள வவுனியாக்கச்சேரியில் விற்கப்படவிருக்கின்றன.

★ 'வடமாகாணத்தின் சிலபகுதிகளில் தமது சகோதரர்களின் சிகை அலங்கரிப்பு நிலையங்கள் திடீர் திடீரென மூடப்படுவதை வன்மையாகக் கண்டித்து வடமாகாண சிகை அலங்கரிப்பாளர் சங்கம் ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

★ சுன்னாகத்தில் 8 வட்டாரங்களிலுளள 14 தெருக்களுக்கு மின்சார வெளிச்சம் அளிக்கப்படவிருக்கிறது. இதற்காக அரசாங்கம் ரூ. 104,000 கடன் கொடுத்துள்ளது.

★ தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகத்தின் முயற்சியின் மீது விளான் உப தபாற்கந்தோருக்கு டெலிபோன் சேவை கிடைத்துள்ளது.

★ அண்மையில் பட்டின சபை அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்ட உரும்பிராய் பட்டின சபையின் காரியாலயம் அரசினர் டிஸ்பென்சரியுள்ள கட்டிடத்தில் இயங்குமென்று தெரிகிறது.

★ நெல்லியடிப் பட்டினத்தில் விரைவில் ரூ. 200,000 செலவில் மின்சாரம் விநியோகிக்கவும், நவீன சந்தை அமைக்கவும் முடிவு செய்யப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

★ யாழ்ப்பாணம்பாடசாலை மகளிர் விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடத்தப்பட்ட 11வது விளையாட்டுப்போட்டியில் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி இம்முறையும் சாம்பியன் பட்டத்தைத் தட்டிக் கொண்டு போயிற்று.

★ யாழ்ப்பாணம் அர்ச்.சந்தியோகுமையோர் ஆலயத்துக்கு 25. 7. 67ந் திகதியுடன் 106 வருடம் நிறைவு பெற்றது

★ யாழ்ப்பாணம் பகுதியிலிருந்து பிற மாகாணங்களுக்கு இடமாற்றம் செய்யப்படவிருக்கும் ஆசிரியர்களின் மாற்றல் உத்தரவுகள் யாழ். கல்விக் கந்தோருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

★ அண்மையில பிரதமர் அடிக்கல் நாட்டிய திருக்கோணமலை நகராண்மைக்கழகப் புதிய வாசிகசாலை அடிக்கல்லன மேலுள்ள எழுத்துக்கள் ஆங்கிலத்தில் மட்டுமே பொறக்கப்பட்டுள்ளன.

★ திருக்கோணமலை காரியாதிகாரி அலுவலகத்தில் தமிழ் மக்களுக்கு கொடுக்கும் வாடாங்கப் படிவங்கள் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டுமே அச்சிடப்பட்டுள்ளன. இதனால் இங்கு தமிழர் திணறுகின்றனர்.

★ அடுத்த ஜனவரியில் அமுல் நடத்தப்பட விருக்கும் பாடசாலைத் தரம் பிரித்தலினால் மூதூர் பகுதியிலுள்ள அநேக பாடசாலைகள் வெகுவாகப் பாதிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

★ மட்டக்களப்பு மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபராக திரு. ஏ. இரத்தினவேல் நியமிக்கப் பட்டிருக்கிறார்.

★ அகில இலங்கை தேசிய கிரிக்கெட் பயிற்சியாளர் திரு. டடி அவுட்ஸ்ரோன் யாழ்ப்பாணம் வந்து கிரிக்கெட் விளையாட்டு வீரர்களுக்குப் பயிற்சி அளிக்கிறார்.

★ வடக்கில் புதிதாக 6 பொலீஸ் நிலையங்களை நிறுவ வேண்டுமென்று பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலெரிக் அபே குணவர்த்தனா அரசாங்கத்துக்கு சிபார்சு செய்துள்ளார். இதற்காக அவர் 2 லட்சத்து 87 ஆயிரம் ரூபாவை கேட்டுள்ளார்.

★ மலையக மக்களுக்கு மாவட்ட சபைகளினால் நன்மைகள் விளையுமென்று கண்டிப் பிரதேச கிராமச் சங்கத் தலைவர்கள் மாநாட்டில் அமைச்சர் திருச்செல்வம் தெரிவித்தார்.

★ வடமாகாணத்தில் சில பகுதிகளிலுள்ள சிகையலங்காப்பு நிலையங்களை முடப்படுவதை சிகை அலங்கரிப்பாளர் மன்றம் கண்டித்துள்ளது.

★ யாழ்ப்பாணத்தில் நவீன முறையில் புற்று நோய் ஆஸ்பத்திரி ஒன்று விரைவில் நிறுவப்படவிருப்பதாக சுகாதார அமைச்சர் எம். டி. எச். ஜெயவர்த்தனா தெரிவித்தார்.

★ சுன்னாகத்தில் நவீன வசதிகளுடன் பதினைந்தாயிரம் ரூபா செலவில் புதிய பஸ் நிலையம் நிறுவப்பட்டுள்ளது.

★ திருமலை தபாற்கந்தோரில் காசுக்கட்டளை தந்திக் கட்டளை முதலியவற்றுக்கு ரிய படிவங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

★ கல்லடி உப்போடை சிவானந்த வித்தியாலயத்திற்கும் அக்கரைப்பற்று மாவித்தியாலயத்துக்கும் போதிய பஸ் சேவையின்றி மக்கள் கஷ்டப்படுகின்றனர்.

★ மட்டக்களப்பு வாவியின் மேற்குப்பகுதியில் வெள்ளத்தடை கட்டுக்களை கட்டித் தருமாறு விவசாய இலாகாவையும சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் படுவாங்கரையைச் சேர்ந்த 14கிராமங்களின் பயிர்ச்செய்கைக் குழு கேட்டுள்ளது.

★ வேலணைப்பகுதியிலும், ஆலயப்பிரவேச இயக்கம் தோன்றியுள்ளது.

★ பசளை நிலையம் அண்மையில் இலலாததால் அட்டாளைச்சேனைப்பகுதி விவசாயிகள் கஷ்டமடைய நேரிட்டுள்ளது. அப்பகுதியிலுள்ள கூட்டுறவு சங்கங்களை பசளை பெற்றுத்தருமாறு விவசாயிகள் கோரியுள்ளனர்.

★ சின்னவெங்காயம், செத்தல் மிளகாய் போன்ற உப உணவுப் பொருட்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு நாடு முழுவதும் யாழ். மாவட்டத்தையே எதிர்பார்த்திருப்பதாக சுகாதார அமைச்சர் திரு. ஜயவர்தனா யாழ்ப்பாணத்தில் கூறினார்.

★ மூதூர் கொட்டியாபுரப் பற்றைச் சேர்ந்த சுமார் 40,000 மக்களுக்காக நடாத்தப்பட்டுவரும் பஸ் சேவை மிகவும் சீர்கேடு அடைந்துவிட்டது. இதனால் மக்கள் சிரமப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என். எஸ். ஆர். யோகராசா,
உனுப்பிட்டி.

கே: திரு. பொ. பிரதமர் பதவியை ஏற்றால், நம் நாட்டின் உணவுப் பஞ்சத்தைப் போக்குவாரா?

ப: அவருக்கு நெல் பயிரிடத் தெரியாதே!

ஃ

சி. எம். முருகையா,
கொழும்பு-14.

கே: இந்த பட்ஜெட் பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: வாழ்க்கைச் செலவுக்கு சிறகுகட்டியிருக்கிறார் நிதிமந்திரி.

ஃ

'யாழினி',
மன்னிங்பட்டினம்.

கே: பிரதமர் வெளிநாடு சென்றிருக்கும்போதும் அவரின் இல்லத்தைப் பொலீஸ் காவல் புரிவதேன்? திருடர்களுக்குப் பயந்தா?

ப: இல்லை! அது பிரதம மந்திரியின் வீடு என்று பிறர் அறிந்து கொள்வதற்காக.

ஃ

மாஜி. காங்கிரஸ்,
கரவெட்டி.

கே: தீண்டாமை ஒழிப்பில் திரு. பொன்னம்பலத்தின் நிலை என்ன? திரு. சிவசிதம்பரங்களின் நிலை என்ன?

ப: அவர்கள் தீண்டாமையைத்தீண்டமாட்டார்களாம்.

கே: திரு. பொன்னம்பலம் தமிழ்பேசும் மக்களுக்கு ஏதாவது நன்மை செய்ய முன்வரமாட்டாரா?

ப: வரமாட்டார் என்றுதான் கூறப்படுகிறது.

ஃ

சாந்திசின்னத்துரை,
கரவெட்டி.

கே: திரு. பொன்னம்பலம் தீண்டாமைக்கு சாதகமாகவோ பாதகமாகவோ தமிழர் மத்தியில் பிரசாரம் செய்யவில்லையே இதன் மர்மம் என்ன?

ப: 'வோட்டு வேட்டைக்கு' அது பாதகமாக இருக்கும் என்பதுதான் மர்மம்.

கே: சகல இந்துசமய மக்களும், இந்துசமய ஸ்தாபனங்களும் இந்துசமய போதனாபீடம் அடங்கிய முழுநிறையுள்ளதமிழ் பல்கலைக்கழகம் அமைக்க கோருகையில் திரு. ஜீ. ஜீ. மாத்திரம் எதிர்ப்பது ஏன்?

ப: பிறரின் கோரிக்கைகளை எதிர்த்து எதிர்த்துப் பழக்கமாகி விட்டதால்.

கே: திரு. சுந்தரலிங்கம் திரும்பவும் அரசியலுக்கு வந்தால் தமிழர் நிலை எப்படியிருக்கும்?

ப: ஏற்கனவே தமிழ் மக்களால்நிராகரிக்கப்பட்டவர்கள் மீண்டும் வருவதால் தமிழர் நிலையில் எதுவித மாறுதலும் ஏற்படப்போவதில்லை.

ஃ

ஆர். பாலகிருஷ்ணன்,
மாத்தளை.

கே: அடுத்தவர்களை 'காக்கா' பிடித்து முன்னேற நினைப்பவர்களைப்பற்றி குயுக்தியாரின் கருத்தென்ன?

ப: அவர்கள் கலைஞர்கள். காக்காப் பிடிப்பது ஒரு பெரும் கலை. எல்லாராலும் அதனைச் செய்துவிடமுடியாது.

கே: 'டொப்லஸ் ஆடை' என்றால் என்ன?

ப: இடைக்குக் கீழ் மட்டும் ஆடை.

ஃ

மெக்சி,
கருக்குப்பனை.

கே: ஏழுபிள்ளையின் தாய் 19 வயது வாலியன் ஒருவனை காதலித்தால் அந்தக் கணவனின் கதி என்ன?

ப: ஏழுபிள்ளையின் தந்தை 16 வயது இளம் பெண்ணைக் காதலித்தால் அந்த மனைவியின் கதி எதுவோ அதுதான் அந்தக் கணவனின் கதியும்.

ஃ

'தமிழ்மாறன்',
அக்கறைப்பற்று.

கே: மாவட்டசபை உள்ளடங்கிய சிம்மாசனப் பிரசங்கத்தை ஆதரிக்கும் திரு. பொன்னம்பலம் கோஷ்டியினர் 'மாவட்டசபை' மசோதாவை மட்டும் எதிர்ப்பது ஏன்?

ப: ஆதரிக்கும்போது ஆதரிப்பார்கள் எதிர்க்கும்போது எதிர்ப்பார்கள். ஒன்றை ஏககாலத்தில்ஆதரிக்கவும் எதிர்க்கவும் அவர்களால்தான் முடியும். காரணம் ஏககாலத்தில் எதிர்ப்பதற்கும் ஆதரிப்பதற்கும் செவிசாய்க்க ஒரு கும்பல் இருப்பதுதான்.

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194, ஏ பண்டாரநாயக்கா வீதி,
கொழும்பு-12

ஃ

தாழையூர் 'நாகராஜன்',
தாளங்குடா.

கே: தாயின்பாதத்தில் சுவர்க்கம் என்றால் காதலியின் பாதத்தில்?

ப: இன்பம்.

கே: காதலுக்கு காரணம் ஆண், பெண்ணா?

ப: ஆணின் காதலுக்குக் காரணம் பெண். பெண்ணின் காதலுக்குக் காரணம் ஆண்.

ஜே. ஈ. அரியரெத்தினம்,
இங்கினியாகலை.

கே: தமிழ்நாட்டில் தி. மு. க. வினர் ஏற்படுத்தியிருக்கும் கலப்புமணத்திற்குப் பரிசு கொடுக்கும் திட்டத்தை நீர் ஆதரிக்கிறீரா? சீக்கிரம் கூறும் பதிலை.

ப: ஏழைகளின் கலப்புமணத்திற்கு பரிசு வழங்கட்டும் அது அவர்களுக்குப் பயன்படும். கலப்புமணம் செய்யும் பணக்காரர்கள் அதை சட்டை செய்யப் போவதில்லை. எனவே அவர்களுக்கு பரிசு வழங்க வேண்டியதில்லை. கலப்புமணத்திற்கு ஊக்கமளிக்க உதவுவது மனமாற்றமே யன்றி பரிசுகள் அல்ல.

ஃ

ஆரையூர் சுந்தரம்,
ஆரையம்பதி.

கே: நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். அவளும் என்னைக் காதலிப்பதுபோல் தெரிகிறது. என்ன செய்யலாம்?

ப: தெரிந்தால் மட்டும் போதாது. காதலிக்கவும் வேண்டும். எனவே அதனை முதலில் ஊர்ஜிதம் செய்யுங்கள்.

ஃ

ஆர். பாலகிருஷ்ணன்,
மாத்தளை.

கே: தமிழகத்தில் வெளியாகும் பத்திரிகைகளுக்கும் ஈழத்தில் வெளியாகும் பத்திரிகைகளுக்கு முள்ள வித்தியாசமென்ன?

ப: அவை இங்கு இறக்குமதி யாகின்றன. இவை அங்கு ஏற்றுமதியாகின்றன.

கே: குயுக்தியாரே, நான் உங்களுக்கு 'கேள்வி பதில் மன்னன்' என்ற பட்டத்தைத்தர எண்ணியுள்ளேன்?

ப: கேள்விகள் என்னுடையவை அல்ல—எனவே 'பதில் மன்னன்' என்ற பட்டத்தை மட்டும் தாருங்கள்.

ஃ

சு. மனோகரன்,
இறத்தோட்டை.

கே: தமிழ் நாட்டில்பஸ்களைத் தேசியமயமாக்குவதால் நன்மையிலும், தீமைதான்அதிகமாமே, அப்படியிருக்க தி. மு. க. ஏன் பஸ் தேசியமயத்தில் இத்தனை தீவிரம் காட்டுகிறது?

ப: அதில் அரசு அதிக தீவிரம் காட்டவில்லையே! பஸ் கம்பெனிகளுக்கு நோகாமல்தான் அடிக்கிறது. இத் தேசியமயத்தால் 22 கோடி மூலதனத்துடன் நடைபெறும் மாபெரும் பஸ்கம்பெனி டி. வி. எஸ். கூட பாதிக்கப்பட வில்லையாமே! பஸ் தேசியமயத்தை அமுல் நடத்துவதற்கு அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறுவதற்கு பஸ் முதலாளிகளைக்கொண்ட ஆலோசனைக்குழு நியமிக்கப்படவிருப்பதிலிருந்து இது நிரூபணமாகிறது.

ஃ

யாழ் அரசி,
துன்னாலை.

கே: தேசிய அரசாங்கத்தின் மாவட்டசபை மசோதாவைத் திரு. பொன்னம்பலம் எதிர்த்த பின்னும், தொடர்ந்தும் தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிப்பாரா?

ப: தேசிய அரசாங்கத்திலிருந்து விலகி விடுவதாக பிரதமரிடம் கூறியிருக்கிறாராம். பாராளுமன்றத்திலிருந்து விலகிவிடுவதாக மக்களிடம் கூறியிருக்கிறார்.

கே: மாவட்டசபையை 1965ல் ஆதரித்த திரு.பொன்னம்பலம் இன்று எதிர்ப்பது ஏன்?

ப: ஈராண்டுகளுக்குப் பிறகுதானே எதிர்க்கிறார். ஆதரிக்கும்போதே எதிர்க்கக்கூடியவரல்லவா அவர்?

ஃ

வே. சிவலிங்கம்,
காரைதீவு.

கே: இப்போது சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் வரவு செலவுத் திட்டத்தால் புகையிலை விளைவிப்போருக்கு நன்மையா? தீமையா?

ப: ஓரளவு நன்மை உண்டு உற்பத்திவரி குறைந்திருப்பதால்.

கே: மாவட்டசபைகள் அமைக்கப்படும்போது, குடியேற்றம், கல்வி சம்பந்தமான முக்கிய அதிகாரங்கள் அவைகளுக்குக் கொடுக்கப்படுமா?

ப: ஆரம்பத்தில் இல்லாதிருக்கலாம். படிப்படியாக நாளடைவில் அதிக அதிகாரம் கிடைக்கலாம்.

ஃ

'தமிழ்ப்பித்தன்',
நீர்கொழும்பு.

கே: எட்டப்பர் கூட்டத்தைச் சேர்ந்த ஒருவர், நீர்கொழும்புத் தேர்தல் பிரசார வேலைகளில் ஈடுபட்டிருந்த தமிழரசுத் தலைவர்களுக்குப் பின்னால் திரியக் காணப்பட்டார். திடீர் மன மாற்றம் ஏற்பட்டு விட்டதோ?

ப: இல்லை. எட்டப்பர்கள் எட்டப்பர்கள்தான். அவர்களிடம் மனமாற்றத்துக்கு இடமில்லை.

ஃ

தேவி,
திருமலை.

கே: நான் பல காலமாக ஒருவரைகாதலித்து வந்தேன். அவரும் என்னை காதலித்து பல கடிதங்களும் தந்தார். இப்போது கடிதம் தருவதில்லை, காதலிப்பதாகவும் தெரியவில்லை. இதற்கு ஒரு வழி கூறுங்கள்.

ப: உங்களின் காதல் ஒரு முச்சந்தியில் நிற்கிறது. அதில் பழைய பாதையும் மற்றிரு புதிய பாதைகளும் சந்திக்கின்றன. பழைய (காதல்) பாதையைக் கைவிட்டு புதிய பாதைகளில் ஒன்றில் செல்லுங்கள். அவற்றில் ஒன்று காதலையே கைகழுவுவது, மற்றது புதிய காதலுக்கு அழைத்துச்செல்லுவது.

அனுதாபம் எப்படி பெறுவது

சிறுபான்மை மக்கள் உரிமைகளைப்பெற பெரும்பான்மை மக்களின் அனுதாபம் அவசியம்.

—ஜீ. ஜீ.

—பெரும் பான்மை யினரின் அனுதாபத்தைப்பெறுவதற்கு அவர்களின் காலில் வீழ்ந்து வணங்குவதில் தவறில்லையென்கிறாரோ?

வெற்றி பெற்ற இரகசியம்

தேயிலைத் தோட்டங்களில் காய்கறி உற்பத்தி இயக்கம் வெற்றியடைந்துள்ளது.

—செய்தி.

—தேயிலைத் தோட்டத்தில் எதைப் போட்டாலும் விளையுமே! அந்த மண்ணில் தானே தமிழத் தொழிலாளியின் இரத்தமும் வியர்வையும் உரமாகி கிடக்கின்றன

செய்மதியில் இது வருமா?

இலங்கைக்கு செய்மதி மூலம் செய்திகள் அனுப்பப்படும்.

—செய்தி.

—அதில் திரிப்புச் செய்திகளும், சோடினைச் செய்திகளும் கூட வருமோ? என்று கேட்கிறார் ஒரு தமிழ் தினசரியின் ஆசிரியர்

ஏற்றுமதியும் இறக்குமதியும்

மாடுகள் இறக்குமதி தடை செய்யப்படும்.

—செய்தி.

மனிதர்களை ஏற்றுமதி செய்யவிருக்கும் போது மாடுகளை இறக்குமதி செய்வது 'பண்புக் குறைவான செயல் என்று அமைச்சு முடிவு செய்திருக்கலாம்.

கல்லில் தன்னிறைவு?

கூர்லனறுவை, மின்னேரியாப் பகுதி விவசாயிகள் விவசாயத்திலீடுபடுவதைக் கைவிட்டு இரத்தினக் கல் தேடுகிறார்கள்.

—செய்தி.

—அரசனை நம்பி புருஷனைக் கைவிட்ட கதை அவர்களுக்கு தெரியாது போலும்!

மன்னிப்பும் ஆணவமும்

டெல்லி லோகசபையில் செருப்பைக் காட்டிய பாராளுமன்ற உறுப்பினர் மன்னிப்பு கோரினார்.

செய்தி.

—இந்நாட்டில் செருப்பைக் காட்டியவர் மன்னிப்பு கேட்காமல் ஆணவத்துடன் உலாவி வருகிறாரே!

கலப்பற்ற உயர்தர அலுமினியம்
மங்காத பிரகாசம் * நீடிய உழைப்பு
இவற்றிற்கு

டொலர்
அலுமினியப் பாத்திரங்கள்
டொலர் கோப்ரேசன்
14,டாம் வீதி, கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எதிரிகளுக்காகப் பொதுமக்கள் நிதி!"

அதற்கும் வழக்குக்கும் சம்பந்தமில்லை

—நீதியரசர்

நீலநிற, சிவப்பு நிறக் கைக்குட்டைகளைச் சுற்றிச் சுழலும் போப் துரை, கொலை வழக்கு விசாரணை இறுதிக் கட்டத்தில் நீதியரசர் சூட்ஸ் அவர்கள் ஜூரிகளுக்கு உரை நிகழ்த்தினர்.

பலம் பொருந்திய ஒரு ஸ்தாபனம் இந்த எதிரிகளுக்குப் பண உதவி செய்கிறதென்பது பற்றியோ, பொது மக்களிடமிருந்து நன்கொடை வசூல் செய்து எதிரிகள் சார்பில் வழக்குரைஞர்கள் அமர்த்தப்பட்டு வாதாடப்படுகிறதென்பது பற்றியோ, நீங்கள் கவலை கொள்ள வேண்டியதில்லை என்று நீதியரசர் ஜூரர்களிடம் கூறினர்-

நீதியரசர் திரு. சூட்ஸ் அவர்கள் தமது உரையை நிகழ்த்தத் தொடங்கினர்.

'ஜூரர் சபையின் கனவான்களே,

பலம் பொருந்திய ஒரு ஸ்தாபனம் இந்த எதிரிகளுக்குப் பண உதவி செய்கிறதென்பதைப் பற்றியோ, பொது மக்களிடம் நன்கொடை வசூல் செய்து எதிரிகள் சார்பில் வழக்கில் வாதாடப்படுகிறது என்பதைப் பற்றியோ நீங்கள் சிரத்தை காட்டவேண்டிய

எதிரிகள்

(1) விராசாமி

(2) வேலாயுதன்

(3) ஐயன் பெருமாள்

(4) ரெங்கசாமி

(5) முனியாண்டி

(6) மாரிமுத்து வேலாயுதன்

தில்லை. ஏனெனில் அவைகளுக்கும் இந்த வழக்குக்கும் கடுகளவும் சம்பந்தம் கிடையாது.

ஒரு மனிதன் மற்றொரு மனிதனை வேண்டுமென்றே தாக்கி காயப்படுத்தினால், அந்தத் தாக்குதல் மரணத்தை ஏற்படுத்த போதுமானதாகஇருந்தால், 'நான் அடித்தது உண்மை—ஆனால் கொலை செய்யும் நோக்கம் எனக்கு இருக்கவில்லை — ஆகவே கொலைக்குற்றத்தை நான் செய்யவில்லை' என்று அவன் கூறமுடியாது.

பின்னர் சாட்சிகள் (கொடுத்த வாக்கு மூலங்களை நீதியரசர் ஜூரர்களுக்கு விளக்கிக்கூறினர்.)

ஒப்புதல் வாக்குமூலங்கள்

நீதியரசர் தொடர்ந்துகுறிப்பிட்டாவது:—

'இந்த எதிரிகளில் சிலர் பலவந்தப்படுத்தாமலோ, கட்டாயப்படுத்தாமலோ ஒப்புதல் வாக்கு மூலம் அளிக்கவேண்டிய அவசியம் என்ன இருக்கிறது என்று எதிரிகளின் வழக்குரைஞர் வினவினர். ஒப்புதல் வாக்கு மூலமளிப்பது கட்டாயப்படுத்தினால் அல்லது பலவந்தப்படுத்தினால் மட்டுமா? அநேகர் பல்வேறு நோக்கங்களின் மீது ஒப்புதல் வாக்கு மூலமளிக்கிறார்கள். ஒரு ஒப்புதல் வாக்கு மூலம் மறுதலித்த காரணத்தால், அந்த வாக்கு மூலம் கட்டாயத்தின் மீது கொடுக்கப்பட்டது என்பது அர்த்தமல்ல.

இந்த சந்தர்ப்பங்களையெல்லாம் நீங்கள் பரிசீலனை செய்யும் போது 2 வதுஎதிரி வேலாயுதன் நீதவானிடம் ஒப்புதல் வாக்கு மூலம் கொடுத்தது கட்டாயப் படுத்தப்பட்டதின் மீதா என்று நீங்கள் உண்மையிலேயே கூறமுடியுமா?

குப்புசாமி, இரசக்கவுண்டன் மற்றும்சாட்சிகள் தோத்டத்தொழிலாளர்கள் என்பது உங்களுக்குத் தெரியும். எதிரிகளைப் போலவே அவர்களும் தொழிலாளர்கள். தேசிய உணர்ச்சி வகுப்பு உணர்ச்சி, சாதி உணர்ச்சி போன்றவை இருப்பது இயற்கையே. அவர்கள் எல்லோரும் பொது இணைப்பில் பிணைந்துள்ளனர். அவர்களின் சாட்சியங்களை நீங்கள் ஆராயும் போது, அது பற்றி குறிப்பாகக் கவனம் செலுத்தவேண்டும்.

பொய்ச் சாட்சியம்

குப்புசாமியை ஒரு நம்பிக்கையான சாட்சியாகக் கருதும்படி உங்களை நான் கேட்டுக் கொள்ளமாட்டேன். அவர் பொய் சாட்சியம் கூறியுள்ளார். அவருடைய சாட்சியத்தை நிராகரிக்கும்படி உங்களைக் கேட்டுக்கொள்வதற்கு எனக்கு உரிமை கிடையாது. அவரது சாட்சியம் இங்கு இருக்கிறது. அந்த சாட்சியத்துக்கு எவ்வளவு மதிப்பளிக்க வேண்டுமென்பதை நீங்கள் தான் கூறவேண்டும்.

போப்துரை கொல்லப்பட்ட தினத்தன்று ஒரு சிகப்புக்கைக் குட்டையும் அதன் முனையில் இணைக்கப்பட்ட ஒரு சாவியும் கண்டுபிடிக்கப்பட்டன. காவற்காரர் காசிம் அதனைக் கண்டெடுத்திருக்கிறார். அடுத்த நாள் காலையில் அந்தச் சாவியை முதல் எதிரியின் வீட்டுப் பூட்டுக்குப் போட்டுப் பார்த்தபோது பொருத்தமாக இருந்தது. மெய்யப்பன் வீடு, மற்றும்

நீதியரசர் சூட்ஸ் அவர்கள்

லையின் வீடுகளிலுள்ள பூட்டுகளுக்கு அது பொருந்தவில்லை. எல்லாப் பூட்டுகளிலும், இன்ஸ்பெக்டர் தோரதெனிய இந்தச் சாவியைப் போட்டுப் பார்த்திருக்கிறார்.

அப்படிச்செய்ய முடியுமா

கண்டு பிடிக்கப்பட்ட சாவி இதுவாகவும் இருக்கலாம் வேறு சாவியாகவும் இருக்

லாம் என்று கருத்து தெரிவிக்கப்பட்டது. செல்லையாவை அனுப்பி முதல் எதிரியின் வீட்டுக் கதவிலிருந்த பூட்டை உடைத்தெறிந்து விட்டு, இந்தச் சாவியால் திறக்கக் கூடிய பூட்டு ஒன்று அந்தக் கதவில் பூட்டப்பட்டதாக ஒரு கருத்து இங்கு தெரிவிக்கப்பட்டது.

காலையில் 3 மணிக்கும் 6 மணிக்குமிடையே போப்துரை இறந்து கிடக்கும்போது அல்லது பங்களாவில் இறந்து கொண்டிருக்கும் போது இந்தச்சாவிக்குப் பொருத்தமான பூட்டைத் தேடிப்பிடித்து அதனைக் கொண்டு போய் முதல் எதிரி வீட்டுக்கதவில் போட்டு பூட்டியிருக்கிறார்கள். இம்மாதிரி, கோர்ட்டைத் தவிர வேறு எங்கு கூறினாலும் அக்கூற்றை யாரும் கவனத்திற்கு எடுத்துக் கொள்ள மாட்டார்கள்.

1 வது 2வது எதிரிகளுக்கான வழக்கையும், இதர எதிரிகளின் வழக்கையும் பிரித்துப் பார்க்கவேண்டும்.

மெய்யப்பனுடன் 1வது எதிரியின் நட்பு, அவர் கண்டிக்குச் சென்றது, மே 8ந் திகதி அவர் தோட்டத்துக்குத்திரும்பியது, 9ந் திகதி அவர் தோட்டத்தில் அங்கும் இங்கும் காணப்பட்டது, போப்துரை மரணத்துக்குப் பின் அவர் தோட்டத்தில் காணப்பட்டது, அடுத்த நாள் அவர் கலஹாவில் பிரத்தியேக முறையில் தலை முடி வெட்டிக் கொண்டு, ஒரு சாரமும் தைத்துக்கொண்டது, மே 11ந்திகதி அவர் கண்டியில் தோட்டத்தொழிலாளர், சங்கத்துக்கு சென்றது, சம்பவம் நடந்த இடத்தில் அவருடைய கைக்குட்டை கண்டெடுக்கப்பட்டது ஆகியவை 1வது எதிரி பற்றிய விஷயங்களை எடுத்துக் காட்டுகின்றன.

2வது எதிரியைப்பொறுத்த வரையில் அவர் மெய்யப்பனின் நண்பன். மெய்யப்பனுடன் சுதர்சாமம் சென்றிருந்

தில் இருந்திருக்கிறார். 10ந் திகதி அவர் மீது குற்றஞ் சாட்டப்படாமலிருக்கும் போதே தோட்டத்திலிருந்து தலை மறைவாகி விட்டார். இடையில் 5, 6 நாட்களாக அவர் காணப்படவில்லை. பின்னர் அவர் கைது செய்யப்பட்டார் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் அந்த வாக்கு மூலத்தை மறுதலித்தார்.

சந்தேகத்தின் பலன் எதிரிகளுக்கு

3வது 4வது எதிரிகளைப் பொறுத்தவரையில், அவர்களுக்கெதிரான சாட்சியங்கள் அவர்களுக் கெதிராக உள்ள குற்றச் சாட்டுக்கு தண்டனையளிப்பதற்குக் கூடியதாக இல்லை என்பதை உங்களின் ஆலோசனைக்காகத் தெரிவிக்கிறேன். இது

பற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள் என்பது எனக்குத்தெரியாது. நியாயமான சந்தேகம் இதில் உங்களுக்கு ஏற்படுமானால், அச்சந்தேகத்தின் பலனை கைதிகளுக்கு அளியுங்கள்.

5வது 6வது கைதிகளைப் பொறுத்த வரையில் அவர்களின் ஒப்புதல் வாக்கு மூலங்கள் இருக்கின்றன. 6வது எதிரியின் வீட்டிலே இரத்தக்கறையுள்ள ஒரு துணி கண்டெடுக்கப்பட்டுள்ளது.

ஜூரி சபையின் கனவான்களே, சட்டம் பற்றிய பிரச்சினையில் நான் உங்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்று சட்டம் கூறுகிறது. என்னால் முடிந்த அளவு வழிகாட்டியுள்ளேன். இந்த வழக்கில் ஒரு சரியான முடிவைச் செய்வதற்காக உங்களுக்கு உதவும் பொருட்டு என்னால் முடிந்தவற்றைச் செய்துள்ளேன். இப்பொழுது பொறுப்பு உங்களிடம் மட்டுமே விடப்பட்டுள்ளது. தீர்ப்பு பற்றி ஆலோசிப்பதற்காக உங்களின் அறைக்குச் செல்லவேண்டிய வேளை வந்து விட்டது. 200மைலுக்கு அப்பாலுள்ள சம்பவம் நடந்த இடத்துக்கும் நீங்கள் சென்று பார்வையிட்டீர்கள்.

இப்பொழுது, தீர்ப்பு பற்றி நீங்கள் ஆலோசிக்கும் போது என்னிடம் ஏதேனும் கேள்விகள் கேட்க வேண்டுமானால் கேட்கலாம். நான் உங்களுக்கு உதவி புரிய தயாராயிருக்கிறேன்.

ஆதலின் கனவான்களே, தீர்ப்பைப் பற்றி ஆலோசிக்கும்படி உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நீலக் கைக் குட்டை தேவை

உங்களின் தீர்ப்பைப் பற்றி ஆலோசிப்பதற்காக அறைக்குச் செல்ல முன்பு வழக்கு சம்பந்தப்பட்ட பொருட்கள் தாஸ்தாவேஜூக்கள் ஏதேனும் எடுத்துச் செல்ல நீங்கள் விரும்பினால்அவற்றைக்கேளுங்கள் — அவை உங்களுக்குக் கொடுக்கப்படும்.

வேறு என்ன விஷயம் இருக்கிறது?

ஜூரிசபையின் போர்மன்:— அந்த நீலநிறக் கைக்குட்டை தேவை! அவ்வளவுதான்.

கோர்ட்டகர்:— உங்களின் அறைக்கு அது அனுப்பி வைக்கப்படும்.

ஜூரர்கள் தங்களின் தீர்ப்பை ஆலோசிப்பதற்காக பிற்பகல் 1-18 மணிக்கு அறைக்குச் சென்றனர்.

(தீர்ப்பு அடுத்த வாரம்.)

முன்னேஸ்வரம் திருவிழா

சிலாபம், ஸ்ரீ முன்னேஸ்வரம் வருடாந்த உற்சவம் ஆரம்பமாகியுள்ளது.

நடேசர் திருவிழா இம்மாதம் 16ந் திகதியும் வேட்டைத் திருவிழா 17ந் திகதியும், தேர்த்திருவிழா 18ந் திகதியும் தீர்த்தத் திருவிழா 19ந்திகதியும் நடைபெறவிருக்கின்றன.

புதுமுறைக் கவி அரங்கு-(2)

புதுமுறைக் கவி அரங்கிற்குத் தெரிவு செய்யப்பட்ட கவிதைகளும் பரிசு பெற்ற கவிதையும் 13-8-67 சுதந்திரனில் வெளிவரும்.

இந்து வாலிபர் சங்க ஆண்டு விழா

நீர்கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தின் 35வது வருடாந்தக் கூட்டம் 27—7—67 நடைபெற்றது. திரு. தா. சண்முகநாதன் தலைமை தாங்கினர். ஆண்டு அறிக்கையும் வரவு செலவு விபரங்களும் சமர்ப்பிக்கப் பெற்றபின் நடப்பு வருட உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப் பெற்றனர்.

காப்பாளர்:- திரு. த. நீதிராசா.

வேண்டாம் சிங்கள ஆசிரியர்

மண்டைதீவு மகாவித்தியாலய பெற்றார் ஆசிரியர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் 19—7—67 நடைபெற்றது.

இக்கூட்டத்தில் 2ம் வட்டார உறுப்பினரும் முன்னாள் கிராமசபைத் தலைவருமான திரு. க. க. கைலாசபிள்ளை இப்பாடசாலைக்கு சிங்கள ஆசிரியர் நியமிக்க வேண்டுமென ஒரு தீர்மானத்தைப் பிரேரித்தார். இத்தீர்மானத்தை எதிர்த்து 6ம்வட்டார உறுப்பினரும் இளைப்பாறிய ஆசிரியருமான திரு. இ. கனகசுந்திரம் அவர்கள் பேசினர்கள். சிங்கள ஆசிரியர் வேண்டுமென்ற தீர்மானம் அனுமதிக்க எவருமின்றிநிராகரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருவினைகள் நீக்கும் மாவைத் திருமுருகன்

சைவசமயிகள் பலரும் சென்று வழிபடும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் வரலாறுத் தொன்மையும், பெருமையும், புகழும் வாய்ந்தது. இப்போது திருவிழா ஆரம்பித்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதனை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

'மூவிரு முகங்கள் போற்றி
முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற
இராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள்
மலரடி போற்றி அன்னான்
சேவலுமயிலும் போற்றி
திருக்கைவேல் போற்றி போற்றி'

அழகமைந்த சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்து, ஏனைய சிறப்புக்கள் எல்லாம் பொலிந்து, வானுற உயர்ந்து, காண்போர் கண்களுக்கு முருகனின் பெருமையை—அவன் பெருங்கருணையை விளக்க நிற்கிறேன் என்று கூறுவது போல நின்று சிறப்புச் செய்யும் பீடமைந்த கோபுரம், கோவிலை வழிபட வரும் பக்தர்களின் கண்களுக்கு — அவர்கள் வெகு தூரத்தில் வரும் போதே புலப்படுகின்றது.

மாவை முருகனின் மேலை வீதியில் விளங்கும் அந்தக் கோபுரத்தை வெகு தொலைவில் வரும் போதே காணும் பக்தர்கள் மனதாரத் தாம் நினைத்து வந்த முருகனின் திருநாமத்தை' 'முருகா! முருகா!!' என்று வாயாரவும் வாழ்த்துகின்றனர்.

மாவை முருகனை நாடிச் சிறுவர்களும் வருகிறார்கள், வாலிபர்களும் வருகிறார்கள், நடுத்தர வயதினரும் வருகிறார்கள், முதியவர்களும், தாய்மார்களும், வருகிறார்கள். அவர்களுடைய எண்ணங்கள் — வழிபடும் முறைகள்— வேண்டும் வரங்கள் வேறு வேறாக இருக்கலாம். ஆயின் அவர்கள் உள்ளத்திலும் நாவிலும் ஒலித்துக் கொண்டிருக்கும் திருநாமம் ஒன்றுதான். அந்தத் திருநாமம் 'முருகா! முருகா!'

தேர்த்திருவிழாவின் அன்று அலங்கரிக்கப்பட்ட அழகிய ஐந்து தேர்களையும், தேர்களில் விளங்கும் தெய்வப் பெருவடிவங்களையும், திருநீறும் திலகமும் விளங்கும் நெற்றியுடன் தேரைப் புடைசூழும் பக்தர்களையும் காணும் இன்பமும், மங்கள வாத்திய ஒலியும், கூட்டுப் பிரார்த்தனை இசையும், ஒலித்துக் கொண்டே இருக்கும் கோவில் மணி ஓசையும் கேட்கும் இன்பமும் உயிர் முன் செய் நல்வினையால் அடையும் இன்பங்கள் அன்றோ?

கோவிலுக்கு வெகுதூரத்தில் செல்லும் போதே காவடிகள் கூட்டம் கூட்டமாகச் செல்வதும் — ஆட்டக்காவடிகள் நின்று ஆடுவதும்—சிறுவர்கள் பட்டுவேட்டி கட்டி—இடையில் சிறிய சால்வையை இறுகக் கட்டி மார்பில் சந்தனமணிந்து காவடியாட்டத்துக்கு ஏற்பத் தலையசைப்பதும் — சிறுமியர் பட்டுப் பாவாடை பட்டுச் சட்டை குங்கும திலகம் இவற்றுடன் தமது பிஞ்சு மொழியில் 'முருகா! முருகா!' என்றவாறு பார்ப்பதும் காண்போர் நெஞ்சத்தில் மேலும் பக்தியைப் பெருக்குங் காட்சிகளாகும்.

பக்தர்கள் காலை எழுந்து ராடி—தீதுய உள்ளமும்தூய உடலும் தூயஉடையும்உடையோராய் பொன்போல் மினுக்கப்பட்ட தட்டுக்களில் பழவகைகளும் மலர்வகைகளும் ஏந்திசெம்புகளில் பாலும் கொண்டு செல்லும் காட்சி காண்போர்க்குப் பக்தியையும் இன்பத்தையும் ஊட்டுவனவாகும்.

திரள் திரளாகச் செல்லும் பக்தர்களுக்கு முருகன் வேண்டிய வரம் அளிப்பான். அவர் தம் நோய்களை நீக்குவான். அவர்க்கு நல் வாழ்வும் ஈற்றில் வீடுபேறும் ஈவான்.

முருகனை வழிபடுவோர்க்கு —முருகனிடம் ஞானயுதம் பெற்றோர்க்கு வல்வினையை வெல்வது மாத்திரமன்று எமனையும் வெல்லல் இயலும் என்கிறது கந்தரலங்காரம்.

'பிரணவப் பொருள் என்ன என்று சிவ பெருமான் கேட்ட அந்தக் காலத்தில் தன்னுடைய தந்தையார்கு ஒப்பற்ற ஞானமாகிய ஒன்றினை உபதேசித்த அறுமுகக் கடவுள் அடியேனைத் தெளிவித்த பின்னர் எமன் வெகுண்டு வந்து இப்போது என்னை என்ன செய்ய முடியும்? அந்தக் குருநாதன் அருளால் நான் பெற்ற ஞான சக்தியாகிய வாள் ஒன்றினால் சிதறுமாறு அடங்குவதற்கு அருமையான அவனுடைய முத்தலைச் சூலத்தை துணிப்பேன்'

தந்தைக்கு முன்னந் தனிஞானவாளொன்று சாதித்தருள் கந்தச் சுவாமி யெனைத்தேற்றியபின்னர்க் காலன் வெம்பி
வந்திப் பொழுதென்னை யென்செய
லாஞ்சத்தி வாளொன்றினாற்
சிந்தத் துணிப்பன் றணிப்பருங்
கோபத்தி சூலத்தையே [னாற்

மாவை முருகன் நோய் நீக்கியதாக வரலாறு உண்டு. சோழ மன்னனின் மகள் மாருதப் பிரவல்லி குன்ம நோயினால் துன்புற்றாள். அவள் முகம் அழகிழந்து குதிரை முகமாய்த் தோற்றியது.

அவள் கிரிமலை என்னும் புண்ணிய தீர்த்தத்தில் நீராடினாள். நீராடிய பின்னர் மாவிட்டபுரத்துக்கு வந்த போது அவளது நோய் நீங்கியது. குதிரை முகம் மாறியது. அதனால் அந்த இடம் மா—குதிரை, விட்ட—அகன்ற, புரம்—ஸ்தலம், என—மாவிட்டபுரம் எனப் பெயர் பெற்றது.

மாருதப்பிரவல்லி தனது நோய் நீங்கிய இடத்தில் கோவில் கட்டுவித்தாள். அதுவே மாவை முருகன் கோவில்.

இப்போது மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் திருவிழா ஆரம்பித்து நடைபெற்று வருகிறது. 4 8 67ல் தேர்த்திருவிழா. ஒல்வொரு திருவிழாவுக்கும் பக்தர்கள் ஆயிரக் கணக்கில் செல்வார்கள். தேர்த் திருவிழாவுக்குப் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் ஈழத்தின் பல பாகங்களிலிருந்தும் செல்வார்கள்.

வேண்டியார்க்கு வேண்டிய ஈயும் மாவை முருகனது திருவிழாவிற்குச் செல்வோர் விழாக்காணும் பேரின்பம் அடைதலுடன் அவன் பெருங்கருணையினால் தமது நோயும், வறுமையும், துயர்களும் தீர்தலும் இயலும்.

அவனை நோக்கி 'எட்டுக்குல பர்வதங்களும் அந்தப் பாதி பாகங்களாய்ப் பிளந்து விழவும் மேருகிரி அதிரவும் தேவர்கள் பிழைக்கவும் சப்பாணி கொட்டிய பன்னிரு திருக்கரங்களையுடைய ஆறுமுகனே பூமியில் ஆசை பொருந்திய உலக வாழ்க்கையின் உள்ளே கூத்தாடுபவனும் பஞ்சேந்திரியங்களினால் சுழற்சியடைந்தவனுமாகிய இந்தப்பற்றுக் கொண்ட மனத்தை உடையவனை ஈடேற்றுவாய்' என்று வழிபட்டு உய்வோமாக.

குப்பாச வாழ்க்கையுட் கூத்தாடு
மைவரிற் கொட்ப டைந்த
இப்பாச நெஞ்சனை யீடேற்று
வாயிரு நான்கு வெற்பு
மப்பாதி யாய்விழ மேருங்
குலுங்க
விண்ணுரு மூய்யச்
சப்பாணி கொட்டிய கையா
நிரண்டுடைச் சண்முகனே.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காங்கிரஸ் ஆட்சியால் விளைந்த கேடுகள்

தமிழகத்தில் தி. மு. க. ஆட்சியேற்பட்ட பின்னர், தொழில் வளமும், கஷ்டங்களும் நீங்கிவிட்டதாகவும், தமிழகம் சென்று சிறப்புடன் வாழலாம் என்று தோட்டத் தொழிலாளர்களில் ஒருசாரார் நிடையே கருத்து நிலவுகிறதே அதுபற்றி என்ன கூறுகிறீர்கள் என்று கேட்டபோது சிற்றரசு சொன்னதாவது:-

'தி. மு. க. ஆட்சிக்கு வந்தவுடன் ஒரே இரவில் நாட்டைத் திருத்திவிட முடியாது. 20 நீண்ட ஆண்டுகளாக காங்கிரஸ் ஆட்சிசெய்து நாட்டை கெடுத்து வைத்திருக்கிறது. காங்கிரஸ் ஆட்சியால் ஏற்பட்ட கெடுதல்களை திருத்தியமைத்து நாட்டைச் சீர் செய்யவே எமக்கு இன்னும் ஒரு 20 வருடங்கள் தேவைப்படலாம். ஆகவே தி. மு. க. ஆட்சியேற்பட்டவுடன் தமிழகத்தின் பிரச்சினைகளை யெல்லாம் தீர்த்து விடுவதற்கு நாங்கள் மந்திரவாதிகளல்ல.

வேறு வழியின்றி ஏற்கின்றோம்

"இந்த நிலையில்தான் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின்கீழ் தமிழகம் திரும்பிவரக்கூடியவர்களை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. இலங்கையும்இந்தியாவும்செய்து கொண்டஒப்பந்தத்தின் பலாபலனாக,வேறுவழியின்றி தமிழகம் திரும்புபவர்களை, நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. தமிழகமும் ஏற்றுக்கொள்ள மறுத்தால், அவர்களை வேறு யார் ஏற்றுக்கொள்வது? ஆனால் அப்படி வருபவர்கள் தமிழகத்தில் தங்கமும் மணியும் கொட்டிக் கிடப்பதாக நினைத்துக் கொண்டு வரக்கூடாது. அங்குள்ள மக்களுடன்சேர்ந்துகஷ்டப்படத் தயாராகவே வரவேண்டும். பர்மாவிலிருந்து விரட்டியடிக்கப்பட்டதமிழர்கள் பட்ட கஷ்டங்களையும் மறந்து விடக்கூடாது."

டெல்லியின் திட்டங்களை நம்பலாமா?

இலங்கையிலிருந்து திரும்புவோருக்கு டெல்லி மத்திய அரசு புனர்வாழ்வுத் திட்டங்களை உருவாக்குவதாகக் கூறப்படுகிறதே என்று கேட்டபோது 'டெல்லியின் சொல்லை எப்படி நம்புவது? பர்மா அகதிகளுக்குத்தான் உதவுவதாக கூறினார்கள். ஆனால் நடந்ததுதான் தெரியுமே' என்று கூறிய சிற்றரசு மேலும் சொன்னதாவது:-

'மலாயா, பிஜிபோன்ற நாடுகளில் சென்று குடியேறிய தமிழர்கள் அந்நாடுகளில் குடியுரிமை வழங்கப்பட்டு அந்நாட்டு மக்களாக ஏற்கப்பட்டுவிட்டார்கள்.

இதுபோன்ற கொடுமை இல்லை!

'இங்கிலாந்தில் ஏழுவருடங்கள் தொடர்ந்து வசித்தால் அந்நாட்டுக்குடியுரிமை கிடைக்கிறது. ஆனால் இலங்கையில் மட்டும் பல தலைமுறைகளாக வாழ்ந்துவரும் தோட்டத் தொழிலாளர்களின் உழைப்பு உறிஞ்சப்படும் அதே நேரத்தில் அவர்கள் நாடற்றவர்களாக்கப்பட்டு விட்டார்கள். இதுபோன்ற கொடுமை வேறு எதுவும் இல்லை' என்று உணர்ச்சி பொங்கக் கூறினார்.

பணபலம் எம்மிடம் கிடையாது

அடுத்து தமிழகத்தில் அறிஞர் அண்ணாவின் ஆட்சிபற்றி கேட்டபோது திரு. சிற்றரசு அளித்த பதில்:-

'தி. மு. க. பணபலத்தை நம்பி இயங்கும் கட்சியல்ல. பிரசாரமே எமது முக்கிய ஆயுதம். பிரசாரத்தின் மூலமே கழகம் ஆட்சியைக் கைப்பற்ற முடிந்தது.

'கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர், தேர்தல் சமயத்தில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை ஒவ்வொன்றாக நிறைவேற்றி வருகிறது. ரூபாய்க்கு ஒருபடி அரிசிபோடுவோம் என்று கூறினோம். இன்று அதை அமுல்நடத்துகிறோம். பஸ்போக்குவரத்தை தேசியமயமாக்கவும் நடவடிக்கையெடுக்கப்பட்டு வருகிறது. ஏழைகள்படும் கஷ்டங்களை ஒவ்வொன்றாக, படிப்படியாக தீர்த்து வைக்க தி. மு. க. அரசு முயன்றுவருகிறது.

ஸ்டுடியோ தியேட்டர் தேசியமய மாகும்

தேசியமயம் தி. மு. க. வின் ஒரு முக்கியமான கொள்கை. தமிழ் நாட்டிலுள்ள சகல தியேட்டர்களும், ஸ்டுடியோக்களும் விரைவில் தேசியமயமாக்கப்படவிருக்கிறது. இதன் மூலம் கிடைக்கும் பணத்தைக் கொண்டு ரூபாய்க்கு ஒருபடி போடுவதால் ஏற்படும் நிதி நெருக்கடியைஈடுசெய்வோம்.

'தி. மு. க. ஆட்சியேற்பட்ட பின்னர், அரசாங்கத்தின் சகல துறைகளிலும் தமிழுக்கு முதன்மையான ஸ்தானம் அளித்து வருகிறது. வடமொழிச் சொற்களும், இந்திச் சொற்களும் ஆங்கிலச் சொற்களும் ஏனைய பிறமொழிச் சொற்களும் நீக்கப்பட்டு எங்கும் ஆட்சி தமிழ் ஆட்சி நடத்து கிறது.

அண்ணா ஆட்சியில் தமிழ்

'காங்கிரஸ் ஆட்சியினர், மொழிப்பற்றில்லாமலோ அல்லது டெல்லியிடம் நல்ல பிள்ளைக்கு நடக்கும் ஆசையாலோ,அரசுத்துறையில்நல்ல தமிழைப் புகுத்தாமல் புறக்கணித்து வந்தனர். ஆனால் மூவேந்தர் ஆட்சியின்கீழ்தமிழ் பெற்றிருந்தஇடத்தை இன்று அண்ணாவின் ஆட்சியின் கீழ் மீண்டும் பெற்றுவிட்டது'.

தி. மு. க. படையெடுப்பு

இலங்கைமீது தி. மு. க. படையெடுக்கப் போவதாக எதிர்க்கட்சியினரால்பிரசாரம் செய்யப்படுவதுபற்றி கேட்டபோது சிரித்துக்கொண்டே பின்வருமாறு சிற்றரசு கூறினார்.

'அர்த்தமற்ற பயம் அது. அரசியல் தெளிவற்ற தன்மையினாலோ அல்லது சிங்களமக்களிடம் வாக்குப் பெறுவதற்காகவோ அப்படிப்பட்ட பிரசாரம் நடைபெறுவதாகக் கருதுகிறேன். இப்படிக் கூறுபவர்களுக்கு இந்திய அரசியல் சட்டம் சரிவரத் தெரியாது போலும். இந்தியாவிலுள்ள 17 ராஜ்யங்களில்,தமிழ்நாடும் ஒன்று. தமிழ்நாட்டில் ஆட்சி புரியும் நாம் எப்படி இலங்கை மீது படையெடுக்க முடியும்? அதுமட்டுமல்ல, இலங்கையின் தனிந்தன்மையையும் இறைமையையும் தி. மு. க. மதிக்கிறது. இலங்கையைப் பிடிக்க வேண்டும் என்ற எண்ணம் தி. மு. க. வுக்கு கிடையவேகிடையாது.

'நம்மீது அபாண்டமாகப்பழி சுமத்துகிறவர்கள், இந்தியஅரசியல் சட்டத்தைப்படித்து அதில் டெல்லியரசுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது நமக்கு (தமிழ்நாட்டுக்கு) என்ன அதிகாரம் இருக்கிறது என்பதை அறிந்துகொள்ளட்டும்.'

—(பேட்டி கண்டவர்
—கோவை மகேசன்.)

நெரியெல்லைத் தோட்டம் 'சாம்பியன்'

இலங்கையில் தேயிலைப்பயிர் செய்கையின் நூறுவது ஆண்டுப் பூர்த்தியைக் கொண்டாடு முகமாக இலங்கைத் தேயிலைத் தோட்டங்களுக்கிடையில் ஆன, விளையாட்டுப்போட்டி, கொழுந்துபறித்தல் முதலியவற்றை துரைமார் சங்கம் நடாத்துவது தெரிந்ததே. இதில் தோட்டச் சிப்பந்திகளுக்கிடையிலான கரபந்தாட்டப் போட்டியில் இரத்தினபுரி நெரியெல்லைத் தோட்டச் சிப்பந்திகள் கோஷ்டியினர் சப்பிரகாம மாகாணச் 'சாம்பியன்' களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். இதற்கான சுற்றுப் போட்டி காவத்தையிலுள்ள ஒப்பாவத்தைத்தோட்டவிளையாட்டு மைதானத்தில் சில நாட்கள் நடைபெற்றது. நெரியெல்லைத் தோட்டக் குழுவினர் தங்களை எதிர்த்த எல்லாக் கோஷ்டியினரையும் இலகுவாகத் தோற்கடித்து வெற்றிவீரர்கள் என்ற பெயரைத் தட்டிக் கொண்டனர். ஏனைய மாகாணச் 'சாம்பியன்' களுக்கும் இவர்களுக்குமிடையில் கண்டியில் நடைபெற விருக்கும் போட்டியில் கலந்துகொள்வதற்குத் தயாராக இருக்கிறார்கள்.

திரு. த. கயிலாயபிள்ளை தலைமை வகிக்கும் இக்குழுவினரில் திரு. ஆ. கணேசன் என்பவரின் ஆட்டம் எல்லோராலும் பாராட்டப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தபால் மாஅதிபரின் சிபார்சுக்கு திறைசேரி எதிர்ப்பு

தபால் திணைக்களத்தின் சின்னத்தில் பொறிக்கப்பட்டுள்ள சிவனடிபாத மலையின் சித்திரத்தையும் அகற்றிவிட்டு—அத்துடன் சிங்களத்தில் மட்டும் பொறிக்கப்பட்டுள்ள 'இலங்கைத் தபால் சேவை' என்னும் வசனத்தையும் நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக தபால் பெட்டி, டெலிபோன் கம்பம் ஆகியவற்றின் சின்னங்களையும் திணைக்களத்தின் பெயரை மும்மொழிகளிலும் பொறிக்கப்பட்ட புதிய சின்னமொன்றைத் தயாரிக்க வேண்டுமென்று தபால் திணைக்களத்தின் மா அதிபர் செய்துள்ள சிபார்சுக்கு திறைசேரி எதிர்ப்பு தெரிவித்துள்ளது.' என்று 'போதா எத்த' (29-7-67) ஒரு செய்தியைப் பிரசுரித்துள்ளது.

இந்தச் சிபார்சை அமுல் நடத்துவதற்கு அரசாங்க அச்சகத்துக்கு அவசியமான பிளொக்குகள் செய்வதற்கு 200 பவுனுக்கு மேல் அன்னிய செலவாணி தேவைப்படுமென்றும், அரசாங்க அச்சக அதிபர் சுட்டிக்காட்டியிருப்பதுடன், திணைக்களத்தின் எல்லாப் பகுதிகளிலும், தபால் சுந்தோர் காரியாலயங்களிலும், தபால் ரயில் பெட்டியிலும் புதிய சின்னத்தைப் பொறிப்பதற்கு ஆயிரக் கணக்கில் செலவாவாகும் என்று திறைசேரி கணக்குப் பார்த்துள்ளது.

ஆகவே இந்த சிபார்சுக்குத் தபால் அமைச்சின் அங்கீகாரத்தை பெறும்படி திறைசேரி தபால் மா அதிபருக்கு அறிவித்துள்ளது. இது சம்பந்தமாகதபால் அமைச்சர் திரு. மொன்டேகு ஜயவிக்கிரமாவின் அனுமதி கிடைக்குமென்றுதபால்மாஅதிகாரிகூறுகிறார்ராம் என்று 'போதா எத்த' மேலும் கூறியுள்ளது.

காலி நகர சபை தகராறு

'காலி மாநகரசபையைக் கலைத்து விடும்படி அமைச்சர் டாக்டர் தகாநாயக்கா உள்ளூராட்சி அமைச்சர் திரு. திருச்செல்வத்திடம் கேட்டுக் கொண்டிருக்கிறார் என்று அறியப்படுகிறது.'

இவ்வாறு ஒரு செய்தி எத்த (28-7-67) பிரசுரித்துள்ளது.

எழுத்து மூலம் டாக்டர் தகநாயக்கா விடுத்துள்ள இந்த, வேண்டுகோளை திரு. திருச்செல்வம் விசேடமாகப் பரிசீலனை செய்வதாகத் தெரிகிறது.

இது சம்பந்தமாக காலி மேயர் திரு. டப்ளியூ டி. எஸ். அபேகுணவர்த்தனா பிரதமரைச் சந்தித்துப் பேசினார் என்று அறியப்படுகிறது.

கடந்த வாரத்தில் காலியில் நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் ஆண்டுவிழாவுக்கு மேயர் அபேகுணவர்தனா ஒத்துழைப்பு அளித்ததாகத் தெரியவருவதால் டாக்டர் தகநாயகா ஆத்திரமடைந்து நகரசபையைக் கலைத்துவிட நடவடிக்கை எடுப்பதாக அரசியல் வட்டாரத்தில் தெரிவிக்கப் படுகிறது.' என்று 'எத்த' மேலும் எழுதியுள்ளது.

திரு. இரியகொல்லைக்கு உள் நாட்டு அமைச்சு

கல்வி மந்திரி திரு. இரியகொல்லவை அந்தப் பதவியிலிருந்து அகற்றுவதாக நீர்கொழும்பு இடைத்தேர்தலுக்கு முன்பு கத்தோலிக்க திருச்சபைக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் தயாராகிறது.

மந்திரி சபையில் மாற்றம் ஏற்படுத்துவதின் மூலம் இதனைச் செய்ய ஏற்பாடு செய்யப்படுகிறது.

உள் நாட்டு விவகார அமைச்சை திரு. இரியகொல்லக்கு கொடுத்துவிட்டு டாக்டர் தகநாயக்காவை, கல்வி மந்திரி பதவிக்கு நியமனம் செய்வதற்கு அரசாங்கம் ஆலோசிப்பதாகத் தெரிகிறது. ஆனால் திரு. இரியகொல்ல கல்வி அமைச்சர் பதவியைத் தவிர வேறு எந்தப் பதவியையும் ஏற்பதற்கு விரும்பவில்லை என்று அறியப்படுகிறது.

கல்வி அமைச்சர் பதவியிலிருந்து அகற்றப்பட்டால் மந்திரி சபையிலிருந்து விலகுவது பற்றி தான் ஆலோசிக்க கூடுமென்று அவர் தனது நண்பர்களிடம் கூறியிருப்பதாகத் தெரிகிறது.

மந்திரிசபையில் மற்றும் சில மாறுதல்கள் ஏற்படலாம். வர்த்தக அமைச்சை திரு. எம். டி. எச். ஜயவர்தனவுக்கும் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் சர்நிகுலஸ் அட்டிக்கலைக்கு சுகாதார அமைச்சையும் கொடுக்க உத்தேசித்திருப்பதாகத் தெரிகிறது. விஞ்ஞான ஆராய்ச்சி அமைச்சு என்ற பெயரில் ஒரு புதிய அமைச்சு உருவாக்கப்பட்டு டாக்டர் எம். வி. பி. பீரிசுக்குக் கொடுக்கப்படுமாம்.

மந்திரிசபையில் கத்தோலிக்கர் ஒருவர் அமைச்சராக இல்லாதிருக்கும் விஷயம் பற்றியும் பிரதமர் பரிசீலனை செய்கிறார் என்று தெரிகிறது.'

மேற்கண்டவாறு ஒரு செய்தியை எத்த (31-7-67) வெளியிட்டுள்ளது.

சிங்கள இதழ்களில்...

கலகங்கள் தோன்ற வழிவகுக்காதீர்கள்!

ஆலயப்பிரவேசத்தை விரும்புகின்றோம், ஆதரிப்போம், ஆனால் பலாத்காரம் செய்ய முனைவதை வெறுக்கின்றோம். இது ஒரு நல்ல காரியம். அது படிப்படியாக செய்யப்பட்டு வருகின்ற நேரத்தில் இதில் பலாத்காரம் செய்து நல்ல காரியத்தைக் கெடுத்து விடாதிருக்கும்படி சிறுபான்மைத் தமிழர் எனக் கருதப்பட்டு வருபவர்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றோம். பலாத்கார பிரவேசத்தை தமிழரசு வாலிப முன்னணி விரும்பவில்லை.

இந்து சிறுபான்மைத் தமிழர்கள் இந்து சைவ ஆலயங்களுக்கு சென்றுவழிபடுவதற்கு பூரண உரிமை உண்டு இதை நாங்கள் முழு மனதுடன் ஆதரிக்கின்றோம், ஆதரித்தோம்.

பல நூற்றாண்டுகளாக தமிழர் மத்தியில் வேரூன்றியிருக்கும் தீண்டாமை என்னும் துள் சென்று வழிபட உரிமையுண்டென உறுதியாயிருக்க வேண்டுமே தவிர உயர்சாதித் தமிழர்களுடன் மோதுவதோ, வன் முறைகளில் ஈடுபடுவதோ நல்லதுமல்ல பயன்தரமாட்டாது, என்றும் கூறலாம்.

சமயப் பெரியார்களுடன் கலந்துரையாடுவதன் மூலம், அவர்களின் ஒத்துழைப்பையும் மற்றும் கோவில்களுக்குரிய பொதுமக்களது ஒத்துழைப்பையும் பெற்று அவர்களது நல்ல மனதுடனே ஆலயங்களுக்குள் செல்லக்கூடியகாலம் வந்துகொண்டிருக்கின்றது.

இந்த நிலையில் தீண்டாமை யொழிப்பை நாங்களும் செய்கின்றோம், என்று கூறுவதற்காக, இந்நாட்டிலுள்ள தமிழ் பேசும் மக்களை பல கூறுகப் பிரித்து சிறுபான்மைத் தமிழ் மக்களையும், உயர்சாதித்தமிழ் மக்களையும் தரம்காட்டிப்

உலக தமிழ் மாநாட்டின்போது திரு வி. க: சிலை நிறுவவேண்டுகோள்

இந்திய உபகண்டத்தில் முதன் முதலில் தொழிற்சங்கத்தை நிறுவிய பெருந்தகையும், தேசிய விடுதலைக்கு உறுதுணையாய் இருந்த பெருமகனும் நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை எழுதியதுடன், எளியவாழ்க்கை வாழ்ந்து வழிகாட்டிய செம்மலும் சமரச சன்மார்க்கத் தூதுவருமான தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்களைத் தமிழகம் மறந்தது வேதனைக்குரியதாகும்.

தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்களின் சொல், செயல் எழுத்து எல்லாம் தமிழகத்தைத் தலைநிமிரச் செய்ததை நாம் மறக்கலாமா? பார்வை இழந்தும் பைந்தமிழை மறக்காத மாபெரும்மேதை திரு. வி. க. என்றால் மிகையாகாது.

வறுமையில் வாடிய போதிலும் பிறர் உதவியை விரும்பாத விடிவெள்ளி, தனக்கென்றும் தன் குடும்பத்திற்கென்றும் வாழாத தனிப்பெரும் தலைவர். கடைசி காலத்தில் 'நான் செய்ய வேண்டிய பணிகளை எல்லாம் எனது அருமை நண்பர் ஈ. வே. ரா. அவர்கள் செய்து வருகிறார் என்று அறியும் போது அகமகிழ்வு கொள்கிறேன்.' என்று சுயமரியாதைக் கொள்கைகளை வற்புறுத்திய விவேகியைத் தமிழ சமும் தமிழ் மக்களும் மறக்கலாமா?

திருக்குறளை இந்துமா சமுத்திரத்திற்கு ஒப்பிட்டால் தமிழ்ப் பெரியார் எழுதிய 'பெண்ணின் பெருமை' என்ற நூலை வங்காள விரிகுடா கடலுக்கு ஒப்பிடக் கூடிய நூலாகும் என்பதை ஆராய்ச்சியாளர்கள் உணராதது விந்தையல்லவா?

தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்க டாக்டர் மு. வ. அவர்களும் முத்தமிழ்காவலர் கி. ஆ பெ. விசுவநாதனும் தவிர மற்றவர்கள் எண்ணிப் பார்த்ததுண்டா? உலகத்தமிழர் மாநாடு தமிழகத்தின் தலைநகரமாம் சென்னையில் நடக்கும்போது தமிழ்த்தென்றல் திரு. வி. க. அவர்களுக்குச் சிலை வைக்க தமிழக அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்று திரு. வி. க. நினைவுப் பள்ளி சார்பாகவும் ஈழம்வாழ் மக்கள் சார்பாகவும் இவ்வேண்டுகோளைப் பணிவுடன் தமிழக முதல்வரான அறிஞர் அண்ணா அவர்கட்கும் உலகத் தமிழர் மாநாட்டுக் குழுவினருக்கும் உலக தமிழ் மக்களுக்கும் விடுக்கின்றேன்.

எம். எஸ். அருள்
அதிபர்,
திரு. வி. க. நினைவுப்பள்ளி
கொழும்பு.

புத்தகங்கள் உதவுக

வடசுமாத்திராவில் தமிழ் அறியாத தமிழ்க் குழந்தைகளுக்குத் தமிழ்கற்பிக்க முயற்சி செய்கின்ற அன்பர்க்கு உதவி கிடைக்கவில்லை! மலேசியத் தமிழர் உதவியை நம்பியிருக்கின்ற அன்பர் தமிழ்ப் புத்தகங்கள் தந்துதவுமாறு இந்தியத் தூதுவராலயத்தை தினமும் கேட்டும் கிடைக்கவில்லை. தமிழார்வமிக்க இவ்வன்பர்க்கு உதவி தேவையென எமக்குத் தகவல் கிட்டியுள்ளது. தங்கள சுதந்திரன் பத்திரிகையின் வாசகர்கள் உதவுவார்கள் என்று நம்புகிறேன். தமிழ்ப் புத்தகங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

V. NITHIANATHAN,
33, JALAN TEWUKU
OMAR
MEDAN
INDONESIA.

உலகத் தமிழ் நண்பர்
கழகத்திற்காக
நா. தர்மலிங்கம்
வெளிமடை.

மக்கள் குரல்

நோயை இரவோடிரவாக மாற்றிவிட முடியாது. இதனால் பிரச்சினை வளர்ந்து வேரூன்றுமே தவிர தீர்க்கப்பட்டு விடும் என்று நாம் கருத முடியாது. மிக நீண்ட காலமாக நிலைத்துள்ள இத் தீண்டாமை என்னும் சாபத்தீடுநம் சமூகத்தில் இருந்துகொண்டேயிருக்கின்றது.

இச் சாபத்தீட்டை நீக்குவதற்கு பல காலமாக சில சமயப் பெரியார்களும் அரசியல் தலைவர்களும் பாடுபட்டுத் தான் வருகின்றனர். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில் இதற்குச் சமாதானமான பிரச்சாரங்கள் மூலமும், மாநாடுகள் மூலமும் ஒற்றுமை மூலமும் உயர்சாதியெனப் படுகின்ற தமிழர்களின் மனதை பெரும்பாலும் மாற்றினோம். வெற்றியும் கண்டோம். அவற்றைத் தொடர்ந்தும் படிப்படியாகச் செய்ய சந்தர்ப்பம் தருங்கள் என்று கேட்கவிரும்புகின்றோம்.

எனவே, சிறுபான்மைத் தமிழர்களும், தாங்கள் ஆலயத்பிரித்து மோதவிட்டு கலகத்தைக் கிளப்புவதன்மூலம் தங்களது அரசியல் வளர்ச்சியை உற்பத்தியாக்க முனைகிறார்கள் இடதுசாரி இயக்கத்தினர். இதிலிருந்தே அவர்களதுநோக்கம் தெளிவுபடுகின்றது.

ஆகவே, சிறுபான்மைத் தமிழர் எனக் கருதப்பட்டு வந்த மக்களை இடதுசாரிகளின் சூழ்ச்சி வலையில் சிக்கி அவர்களது பாதையில் தீண்டாமை ஒழித்துவிடலாம் என்று எண்ணி கலகத்தை உண்டு பண்ண வழிவகுக்காதீர்கள் எனப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இது விடயத்தில் ஏற்படுகின்ற எந்தப் பலாத்காரச் சம்பவங்களுக்கும் எமது இயக்கமோ, இ. த. அ. வா. முன்னணியோ சம்பந்தப்படவில்லையென்பதை பொதுமக்களுக்கு அறியத்தருகின்றேன்.

ந. அருணாசலம்
செயலாளர்,
இலங்கைத் தமிழரசு வாலிப முன்னணி,
யாழ்ப்பாணம்.

பவரின்
காய்கறிப் போரை
ஏ. பவர்
அனுமதிபெற்ற விநியோகம்
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மார்க்சீய வாதிகளின் மாயவலையில் சிறுபான்மைத் தமிழர்கள் சிக்கக்கூடாது

—கோப்பாய் எம். பி.

"வழிபாடு ஒரு ஆத்மீக இயக்கம். அதனை உரிமை இயக்கமாக மாற்றுவது ஒரு படி இறங்குவதாகும். வழிபாட்டிற்காக பலவந்தம் செய்வது அதர்மமாகும். வழிபாட்டைப் பொறுத்த மட்டில், ஆலயப் பிரவேசம் மறுக்கப் பட்டவர்கள் மிக்க அமைதியாக ஆத்மீகப் பண்போடு இயங்க வேண்டும். சிந்தனையில், சொல்லில், செயலில் பலாத்காரத்தை அறவே தவிர்க்க வேண்டும். கலவர நிலைகளை உருவாக்க விரும்பும் கடவுள் நம்பிக்கை இல்லாத, சமயத்தை அபின் மயக்கமென்று கூறுகின்ற, மார்க்சீய வாதிகளுடைய சொல்லைக்கேட்டு இயங்குவது மிக்க ஆபத்தானது. அதனால் உரிமைகள் நிலைபெறாமல் கலவரமே உருவாகும். ஆகவே அன்பு வழியில் ஊர் மக்கள், கோயில் பரிபாலனப் பெரியார்கள் ஆகியோருடைய ஒத்தாசையுடன் சம்மதம்பெற்று ஆலய வழிபாடு செய்வதே நல்ல வழி. எனவே ஆலய வழிபாட்டில் தடையும் வேண்டாம், பலவந்தமும் வேண்டாம் என்று வலியுறுத்துகிறோம்." இவ்வாறு கோப்பாய் பா. உ. திரு. சி. சுதிரவேற்பிள்ளை ஆலயப்பிரவேச இயக்கம்பற்றி சுதந்திரனுக்கு விடுத்துள்ள ஓர் அறிக்கையில் கூறியுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் கூறுவதாவது:—

'தெய்வவழிபாடு இயல்பாக நிகழும் ஆத்மீக இயக்கம். இவ்வழிபாட்டை சமயம் ஒரு கடமையாக வகுத்துள்ளது. சமுதாயம் இதனை உரிமையாகக் கணிக்கிறது. வழிபாட்டிற்காக ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்று ஆத்மீக இயக்கத்தில் நல்லியல்பையும், இன்றியமையாமையையும் நம்முன்னோர் கூறிவைத்தார்கள். இந்த ஆத்மீக இயக்கத்தை, சமயக் கடமையை, அடிப்படை உரிமையை, சாதி காரணமாகத் தடை செய்வது பெருங் குற்றமாகும். இத்தகைய தடை ஆத்மீக இயக்கத்திற்கு இடையூறாகும். சாதிச் செருக்கு ஆணவத்தின் இயக்கம். ஆணவம் ஆத்மீகத்தைத் தடை செய்வது குற்றமாகும்.

'சாதித்தடை ஆன்ம நேய ஒருமைப்பாட்டுக்கு பாதகம் செய்வதால் மனிதகுலம் ஒரே ஆத்மீக சமுதாயமாக இயங்குவதற்கு சாதி வேற்றுமை ஒரு தடையாகிறது. வழிபாட்டிலே சாதித் தடை அன்பு வழிக்கு மாறானது. இன்னும் அறிவு விளக்கத்துக்கும் மாறானது. இத்தகைய சாதி வேற்றுமைகள் அறியாமையின் இயக்கமாகும். வழிபாட்டில் சாதித் தடையை வைத்திருப்பது சமய தத்துவங்களுக்கும், சன்மார்க்க வாழ்விற்கும் பொருந்தாத செயலாகும். மேலும் சைவ சமயத்திற்கே இத்தகைய சாதித் தடை புறம்பானது.

சைவ சமயம் ஏற்கும் சாஸ்திரங்களில் கூட இந்தச் சாதித் தடைக்கு தக்க ஆதாரம் இல்லை. நாம் ஆலயங்களிலிருந்து வெளியே தடை செய்து நிறுத்தும் சாதியார் வேதத்தில் சொல்லப்படவில்லை. அவர்கள் கோயில்களுக்குள் பிரவேசிக்கக் கூடாதென்று வேதத்தில் கூறப்படவில்லை. ஆகமங்களில் கூட வேளாளர், கோவியர், நளவர், பள்ளர், பறையர், என்ற பல சாதிகள் சொல்லப்படவில்லை. இவர்களைப் பற்றி ஆலயத்தில் பிரவேசிக்கப்படாதென்ற திடமான விதியில்லை

மேலும் ஆலயங்களில்சாதித் தடை சமூக ஒற்றுமையைக் குலைக்கும் துரோகமாகும். இன்னும் இச் சாதித்தடை அடிப்படை மனித உரிமைப் பிரகடனத்திலுள்ள உரிமைகளான சமத்துவம், வழிபாட்டுச் சுதந்திரம் ஆகிய இரண்டிற்கும் மாறு. இன்று இச் சாதித் தடை சட்டத்திலும் தண்டிக்கப்படக் கூடிய குற்றமாக இருக்கிறது. மேற்சொல்லப்பட்ட பல காரணங்களுக்காக ஆலய வழிபாட்டில் சாதித்தடை வேண்டாம் என்று நாம் வற்புறுத்துகிறோம்.

''சாதித் தடைக்கு சாஸ்திரங்கள் ஆதாரமென்று கூறுவார்க்கு அப்பர் சுவாமிகளுடைய மறுமொழியை நினைவுறுத்துகிறோம். ''சாத்திரங்கள் பல பேசும் சழக்கர்காள் கோத்திரமும் குலமும் கொண்டென் செய்வீர்''

உரிமைகளைக் கேட்குமுன் கொடுப்பது உத்தமம். கேட்டபின் கொடுப்பதுமத்திமம். கேட்டபின்னும் கொடாதிருப்பது அதமம்.

"விவசாயிகளின் கஷ்டங்களை நீக்குவதற்கு முன்வருக"

பட்டிருப்பு எம். பி. வேண்டுகோள்

"கிழக்கு மாகாணத்திலுள்ள விவசாயிகள் இன்று போதிய நீர்ப்பாசன வசதிகளின்றிக் கஷ்டமடைகிறார்கள். போக்குவரத்துக்களுக்கும் வீதிகள் அமைத்துக் கொடுக்கப்படவில்லை. ஆகவே இந்நாடு உணவில் தன்னிறைவு காணவேண்டுமானால் கிழக்கு மாகாண விவசாயிகளுக்கு வேண்டிய உதவிகளை உடனடியாகச் செய்து கொடுக்க அரசாங்கம் முன் வரவேண்டும்" இவ்வாறு பாராளுமன்றத்தில் சிம்மாசனப் பிரசங்கத்தின் மீது உரையாற்றிய பட்டிருப்பு எம். பி. திரு. சி. மூ. இராசமாணிக்கம் வேண்டுகோள் விடுத்தார்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

'இந்நாட்டின் நெற்களஞ்சியமான கிழக்கு மாகாணத்தின் சார்பில் பேசுவதற்கு நான் முழு உரிமை படைத்தவன். கிழக்கு மாகாணத்திலுள்ள மக்களில் 90 வீதமான மக்கள் வேளாண்மையில் ஈடுபட்டிருக்கிறார்கள். உத்தரவாத விலைத் திட்டத்துக்கு அவர்கள் வருடா வருடம் ஏராளமான நெல்லை அளிக்கிறார்கள். ஆனால், கிழக்கு மாகாணத்து விவசாயி இன்று நெருக்கடி மிகுந்த தொல்லைகளுக்கு மத்தியில் உழைக்க வேண்டியுள்ளது.

விவசாயிக்கு ஏற்படும் தொல்லைகளினால், நெல் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. விவசாயிகளுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுத்தால் இந்நாடு அதற்குத் தேவையான அளவு நெல் உற்பத்தியைப் பெருக்க முடியும் என்று நான் திடமாக நம்புகிறேன். எங்களிடம் நிலம் உண்டு, நீர் உண்டு; எனினும் இவைகளை உரிய முறையில் பயன்படுத்துகிறோமா? விவசாயிக்கு சரியான பாதையைக் காட்டுகிறோமா? உணவுற்பத்தியில் சுயந்தேவையைப் பூர்த்தி செய்வதற்காக நாங்கள் ஒரு தேசிய மக்களாக இயங்குகிறோமா? இவைகளை நாம் ஆராயவேண்டியவைகள்.

போதிய வசதிகள் கிடையாது

''கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் குடியேற்றத் திட்டங்களுக்கு செய்து கொடுக்கும் வசதிகள் ஏனைய விவசாயிகளுக்குச் செய்து கொடுக்கப்படுவதில்லை. புதிய குடியேற்றத் திட்டங்களுக்கு மட்டும்தான் நீர்ப்பாசன வசதிகளும் ரோட்டு வசதிகளும் அளிக்கப்படுகின்றன. ஆனால் பல தலைமுறைகளாக, நெல் விளையும் பூமியாக இருந்து வரும் இடங்களுக்கு போதிய வசதி செய்து கொடுப்பதில் அக்கறை காட்டப்படவில்லை. அவர்களுக்கு கால்வாய் வசதிகள் செய்துதரப்படவில்லை. ரோட்டு வசதிகள் இல்லை. தேவையான தண்ணீரைச் சேமித்து வைக்க முடியாது. நூறு வருடங்களுக்கு முந்திய நிலையிலேயே அவர்கள் இன்றும் இருக்கிறார்கள். அவர்கள் விஷயத்தில் சிறிதும் கவனம் செலுத்தப்படவில்லை. இவ்விஷயத்தை பிரதமர் அண்மையில் கிழக்கிலங்கைக்கு வருகை புரிந்த போது எடுத்துக்கூறியிருந்தேன்.

''ஆகவே, அரசாங்கம் செய்யவேண்டிய முதல் காரியம் ஏற்கெனவே பயிர் செய்யப்பட்டுவரும் நிலத்துக்குப் போதிய நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுப்பதே. பரம்பரை பரம்பரையாக விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் விவசாயிக்கு, எல்லா வகையான வசதிகளும் செய்து தரப்படவேண்டும்.

வீதிகள்தான் ஒரு பகுதியின் முன்னேற்றத்துக்கு அடிப்படையானது. எனது மாகாணத்தைப் பொறுத்த வரை போக்குவரத்து பாதைகள் மிகவும்குறைவாகஇருக்கிறது. இதனால் விவசாயிகள் படும் கஷ்டம் சொல்லுந் தரமன்று. ஆகவே போதுமான அளவில் தெருக்கள் அமைத்துக் கொடுக்கவேண்டும்.

கமத்தொழிற் குழுக்கள் சீர்கேடு

''கமத்தொழிற் குழு பற்றியும் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். நெற்காணிச் சட்டத்தின் கீழ், எனது பகுதியில் விவசாய மேற்பார்வை இப்பொழுது கமத்தொழிற் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தக் கமத்தொழிற் குழு, நிலச் சொந்தக்காரர்களையும், விவசாயிகளையும் கொண்டது. இந்தக் கமத்தொழிற் குழுக்கள் திறமையுடன் இயங்கத் தவறிவிடுகின்றன. இவ்வகையில் இக்கமத்தொழிற் குழுக்கள் தோல்வி

(14-ம் பக்கம் பார்க்க)

கூட்டு ஒப்பந்தத்தை பரிசீலனைசெய்ய உபகுழு

'ரூந்நாப் பணத்தை செக்ரோலில் கழித்தெடுப்பது தொழிற்சங்க வளர்ச்சிக்கு மிகநல்லநிலையை உருவாக்கும்என்றாலும் எந்த விதத்திலும் தொழிலாளரை பாதிக்காமல் இருக்க வேண்டும். ஆகவேதான் நான் இந்த கூட்டு உடன்படிக்கையில் குறிக்கப்பட்டிருக்கும் ஒப்பந்தத்தில் உள்ள சகல திட்டங்களையும் நன்கு பரிசிலிக்க வேண்டுமென வேண்டுகிறேன். குறிப்பிடப்பட்டிருக்கும் திட்டங்களில் எது தொழிலாளரைப் பாதிக்கும்அவர்களுக்கு எந்த திட்டத்தால் ஊறுவிளையும் என்பதை நமது செயற்குழு தீர ஆலோசித்து முடிவு செய்ய வேண்டும்.'

இவ்வாறு 20-7-67ல் இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் விசேட செயற்குழு கூட்டம் கழகத்தின் தலைமை அலுவலகத்தில் (அட்டனில்) நடைபெற்றபோது மேற்படி கூட்டத்திற்கு தலைமை வகித்த கழகத்தின் தலைவர் திரு. வி. என். நவரத்தினம் பா. உ. அவர்கள் கூறினார்.

இந்த செயற்குழு கூட்டத்திலும் நீண்ட நேரம் இப் பிரச்சினை பற்றி ஆராயப்பட்டு இப் பிரச்சினையை செயற்குழுவில் தேர்ந்தெடுக்கப்பட்ட உபகுழுவின் முடிவிற்கு விடப்பட்டுள்ளது. இக்குழுவின் முடிவு இறுதி முடிவாக இருக்கும்.

பத்துசத உயர்வு பற்றியும் முதலாளிமார் சம்மேளனத்திற்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்குமிடையே ஏற்பட்ட உடன்படிக்கைபற்றி கழகத்தின் பொதுச் செயலாளர் திரு. செ. கலியபெருமாள் நீண்டதொரு அறிக்கை சமர்ப்பித்தார். அவ்வறிக்கைமேலும் இவ்வுபகுழுவின் முடிவிற்கும் பரிசிலனைக்கும் விடப்பட்டுள்ளது. இவ்வுபகுழு கூடிய விரைவில் கூடி மேலும் இவ்வொப்பந்தம்பற்றியும்கழகம் கடைப்பிடிக்கவேண்டிய நிலைபற்றியும் முடிவெடுக்கும்.

முடிவு செய்யுங்கள் கட்சி உதவி புரியும்

'மலைநாட்டு சகோதரர்களே இந்தியாவுக்குச் செல்லாதீர்கள் என்று ஒருசிலதலைவர்கள் சொல்கிறார்கள். இந்தியாவில் பாலும், தேனும்ஓடுகிறதுஅங்கே செல்லுங்கள் என்று ஒருசில தலைவர்கள் கூறுகிறார்கள். இப்படி பல பல காரணங்களைக் கூறி இன்று இலங்கைவாழ் இந்திய வம்சாவழிமக்களைப் பலதொந்தரவான சூழ்நிலைக்கு உள்ளாக்கிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் நாங்கள் சொல்வது இலங்கையில் ஒரு காலும் இந்தியாவில் ஒரு காலும் வைத்துக் கொண்டிராமல் உங்களது சூழ்நிலைக்கேற்ப நீங்கள் எந்த நாட்டின் பிரஜையாக வேண்டும் என்பதை தீர்மானித்துக் கொள்ளுங்கள். அதற்குவேண்டியஉதவிகளைக்கட்சியும்கழகமும் செய்ய எந்த நேரமும் காத்துக்கொண்டிருக்கின்றது.'

இவ்வாறு 21-7-67ல் அக்கரபத்தனையைச் சேர்ந்த அல்பியன் தோட்டத்தில் நடந்த இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் தோட்டத் தேர்தல் கூட்டத்தில் உரையாற்றிய உடுவில் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் அவர்கள் கூறினார். மாவட்டத் தலைவர் திரு. பி. சாமன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசும் போது 'ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தத்தை எதிர்த்த நாம் இன்று ஆதரிக்கிறோம். அதற்கு காரணம் அன்று பலாத்காரம், கட்டாய நாடுகடத்தல் போன்ற அம்சங்கள் இடம்பெற்றிருந்தன. ஆனால் இன்று அதை அமுல் நடத்தப்போகும்தேசிய அரசாங்கத்திடம் நாம்விடுத்த வேண்டுகோளுக்கிணங்க பரிசிலிக்கப்பட்ட அந்த ஒப்பந்த அமுல் சட்டதிட்டத்தின்படி அதில் கட்டாய நாடுகடத்தல் என்பதற்கு இடமே இல்லை ஆகவேதான் அதை ஆதரிக்கிறோம்.

'தனிஒரு நபரும்தான் விரும்பும் நாட்டை தேர்ந்தெடுத்துக்கொள்ளக்கூடியசுதந்திரம் இன்று அமுல் செய்யப்படவிருக்கும் ஒப்பந்த அமுல் சட்டத்தில் இடமிருக்கிறது. ஆகவே தங்கள் தங்கள் சொந்த விருப்பமிருப்பின் அவரவர்களுக்குதக்கநாட்டை தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். அதற்கான சகல ஒத்துழைப்பையும் உதவிகளையும் கழகம் செய்ய தயாராக இருக்கிறது' என்றுகூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனம் பொருள் ஆராய்ச்சி நிலைய

நிதி எங்கே?

தேசிய அரசாங்கத்தின் மூன்றாவது வரவு செலவுத் திட்டம் சென்ற வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இவ் வரவு செலவுத் திட்டத்தின் உள்ளடக்கம், இந் நாட்டு எதிர்க்கட்சியினர் போட்டிருந்த திட்டங்களை யெல்லாம் தவிடுபொடியாக்கிவிட்டது.

அரசாங்க ஊழியர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கையை முன்வைத்து ஒரு பொது வேலை நிறுத்தத்தை தூண்டிவிட எதிர்க்கட்சிகள் முயன்று வந்தன. அந்தத் திட்டம் அரோகரா வாகிவிட்டது. இதனால் இன்று எதிர்க்கட்சித் தலைவர்கள் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவிக்க வேண்டிய ஒரு நிலையேற்பட்டு விட்டது. இப்படியொரு நிலையில் எதிர்க்கட்சியினரைச் சிக்கவைத்த நிதியமைச்சருக்கு ஒரு சபாஷ்' இந்த வரவு செலவுத் திட்டத்தைப் பொறுத்த அளவில் தமிழ் பிரதேசங்களின் அபிவிருத்திக்கென சில பல திட்டங்களைக் கொண்டிருக்கிறது. கடந்த பல ஆண்டுகளாக எதுவித அபிவிருத்தித் திட்டங்களுமின்றி புறக்கணிக்கப்பட்டு வடக்கும் கிழக்கும் ஓரளவுக்கு தேசிய அரசாங்கத்தின் கவனத்துக்கு வந்திருப்பது குறித்து தமிழ் பேசும் மக்கள் மகிழ்ச்சியடைகிறார்கள்.

1956ம் ஆண்டிலிருந்து 1964ம் ஆண்டுவரை ஏறத்தாழ 9 வருடங்கள் வடக்கும் கிழக்கும் அபிவிருத்தித்துறையில் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கிறது. அப்போது ஆட்சி புரிந்த அரசாங்கங்கள் இலங்கையில் ஆக ஏழு மாகாணங்களே உள்ளன என்று கருதியிருந்தது போலும். குறுகிய வகுப்புவாதக் கண்ணோட்டத்துடன் பண்டாரநாயகா அரசாங்கங்கள் ஆட்சி புரிந்து வந்ததால், தமிழ் பேசும் பிரதேசம் புறக்கணிக்கப்பட்டு வந்தது.

தமிழரசாரின் ஆதரவுடன் தேசிய அரசாங்கம் நிறுவப்பட்ட பின்னர்தான், வடக்கும் கிழக்கு இலங்கையின் ஒரு பகுதி என்ற எண்ணம் நாட்டில் ஏற்பட்டது. வடக்கும் கிழக்கும் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டுவந்ததை தேசிய அரசாங்கம் உணர்ந்து, அவற்றின் அபிவிருத்தித்திட்டங்களை உருவாக்குவதில் தனது கவனத்தைத் திருப்பியது.

இராசாங்க அமைச்சர் அலரிமாளிகையில் வடக்கு கிழக்கு எம். பீக்களின் மாநாடு கூட்டினார். அம் மாநாட்டில் தமிழரசார் பல அபிவிருத்தித் திட்டங்களை சமர்ப்பித்திருந்தனர். அவற்றில் சிலவே நிதியமைச்சரின் வரவு செலவுத்திட்டத்தில் காணப்படுகிறது.

காங்கேசன்துறைமுக அபிவிருத்தித் திட்டத்தை பூரணப்படுத்தி அதை ஒரு துறைமுகமாக்கி விடவேண்டுமென்று பல காலமாகவே கோரப்பட்டு வருகிறது.

சுதந்திரன் அரசியல் விமர்சகர்

நாமும் இப்பத்திகளில் இதன் அவசியத்தைக் குறித்து சில வாரங்களுக்கு முன்னம் எழுதியிருந்தோம். இப்போது 40 லட்சம் ரூபாவை காங்கேசன் துறைமுகத்தில் இறங்கு துறை அமைப்பதற்கு அரசாங்கம் ஒதுக்கியிருக்கிறது.

காங்கேசன்துறையில் இறங்கு துறை அமைத்தால் மட்டும் போதாது அதை ஒரு பூரணமான துறைமுகமாக மாற்றவேண்டும். அதற்கு வேண்டிய முழுத்தொகையையும் அரசாங்கம் ஒதுக்கியிருந்திருக்க வேண்டும். ஆனால் தவறிவிட்டது.

காங்கேசன்துறைத் துறைமுக அபிவிருத்தியை முழு அளவில் நிறைவேற்றி வைக்க

வரவுசெலவுத்திட்டம் ஒரு கண்ணோட்டம்

வேண்டுமென்று தமிழ் பேசும் மக்கள் எதிர்பார்க்கிறார்கள் 1968ம் ஆண்டில் காங்கேசன் துறைமுகம் எல்லா வசதிகளும் கொண்ட ஒரு பூரண துறைமுகமாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென்பதை நிதியமைச்சரிடம் வலியுறுத்த விரும்புகிறோம்.

காங்கேசன்துறைத் சீமந்துத் தொழிற்சாலை விஸ்தரிக்கப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. இது வரவேற்கப்படக் கூடியது.

காங்கேசன் சீமந்து' உலகின் வேறு எந்த நாட்டுச் சீமந்துக்கும். குறைந்ததல்ல. இத் தொழிற்சாலை லாபகரமாக நடைபெறுகிறதுர தொழிற்சாலை விஸ்தரிக்கப்பட்டதும், உற்பத்திபெருக வாய்ப்பு ஏற்படும். அதே வேளையில் பலருக்கு வேலை வாய்ப்புக்களும் ஏற்படும்.

மயிலிட்டியில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது.

இலங்கையில் மூன்றில் இரண்டு பங்கு கடற்கரை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தான் உள்ளது. ஆகவே இப்பிரதேசங்களில் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கு வேண்டிய வசதிகளை மீனவர்க

தென் அமெரிக்காவைத் திரும்பிப்பார்! வேற்று மொழிக் கல்வியின் விளைவு தெரியும்

—இ. அப்பாத்துரை, சங்கானை.—

மனித வாழ்வில் ஆடம்பரப் பொருளாக இருந்த கல்வி இன்று அத்தியாவசிய பொருளாக அமைந்துவிட்டது. சமுதாய மதிப்பை நோக்கிக் கற்கப்பட்ட கல்வி, இன்று ஆட்சி அதிகாரம், சமூக நடவடிக்கை, வாழ்க்கைத் தொழில் போன்ற இன்னோரன்ன பலவற்றையும்இயக்கும் கருவியாக மாறியுளது. இத்தகைய வாழ்வில் இன்றியமையாத இடம்பெற்ற கல்வியை தகுந்த மொழியிலே பெற்றால் தான் சிறந்த பயனை அடைய முடியும்.

மொழி வெறும் கருவியல்ல

வாழ்வில் கல்வி எவ்வளவு முக்கியத்துவம் பெற்றுள்ளதோ, அத்துணை முக்கியத்துவத்தைக் கல்வியில் போதனு மொழி பெற்றுள்ளது. உலகின் பல இனமக்களின் நாகரீக கலாச்சார, பாரம்பரிய, கல்வி, கலைகளது எழுச்சி, வீழ்ச்சி, ஆக்க அழிவுகளுக்கு அவ்வினங்கள் கைக்கொண்ட போதனு மொழிக்கொள்கைகளே முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

'மொழி' என்பது வெறும் உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் வெளிப்படுத்தும் கருவியாக இல்லாது மேற்கூறிய நாகரீகம் முதலிய அம்சங்களையும் பாதிக்கும் கருவியாக இருப்பதுதான் போதனு மொழி இத்துணை முக்கியத்துவம் பெறக் காரணமாயுள்ளது.

இன்று உலகின் முக்கிய போதனு மொழியாகும் தகுதி கொண்டது குழந்தையின் தாய் மொழியேயாகும். தாய் மொழி என்பது 'குழந்தை தொட்டில் தொட்டு சுடுகாடு வரை குழந்தை இயல்பாகவும் பேசியும் எழுதியும் வரும் மொழியாகும்.' குழந்தை தனது பிஞ்சு உள்ளத்தில் உடலசைவு மூலம் தனது மன எழுச்சிகளைத் தாய்க்குப் புலப்படுத்திக் கொள்கிறது. குழந்தைக்குத் தாயால் நாளடைவில் பயிற்றப்படும் மொழி பிஞ்சு உள்ளத்திலே முதல் பாடமாக அமைகிறது. எனவே குழந்தையது கல்வியின் முதல் ஆசானாகத் தாய் அமைந்து கொள்கிறாள். இத்தாய் கற்றுக்கொடுக்கும் மொழிதான் குழந்தையின் உள்ளத்தில் அசையாத இடம்பெறும்முதற் பாடமாக அமைகிறது.

இத்தாய்மொழியேபோதனு மொழியாக இருக்கவேண்டும் என்பது கல்வியாளர் கருத்தோடு உளவியலாளரதும் (Psychologist) விஞ்ஞான ரீதியான முடிபாகும்.

தாய்மொழியே போதனு மொழி எனக் கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டாலும் கூட நடைமுறையில் பல நாடுகளில் வேற்று மொழிகளே போதனு மொழிகளாக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாகப் பின் தங்கிய லத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்க, தென் ஆசிய நாடுகள் பலவற்றிலும் இத்தகைய மாற்றத்தைக் காணலாம்.

மத்தீன் அமெரிக்க நாடுகளின் மறு பெயர் தென் அமெரிக்கா. இந்நாடுகள் ஸ்பானிய போர்த்துகீச ஆதிக்கத்துள் கடந்த 400 வருடம் இருந்தன. இந்நாடுகள் தேசிய மொழிகளைக் கைவிட்டு ஸ்பப்னிய போர்த்துக்கீசமொழிகளை போதனு மொழிகளாக்கின. இன்று இந்நாடுகள் சுயமொழியைக் கைவிட்டதன் பயனாக தமது சீரிய பண்பையும், கலாச்சாரச் சிறப்பையும், தனித்துவத்தையும் இழந்து பலவகையிலும் ஒதுக்கப்பட்டுள்ளன. இதுவே வேற்று மொழிக் கல்வியின் வேதனையான விளைவு.

இலங்கையின் நிலை

இலங்கையின் இன்றைய அரசாங்க வெள்ளை அறிக்கையில் போதனுமொழித் தேர்வு குழந்தையின் பெற்றோரிடம் விடப்பட்டுள்ளது. இதிலிருந்து 'தாய்மொழி மட்டும்தான் போதனுமொழியாக இருக்க வேண்டும் என்ற தத்துவம் தளர்த்தப்பட்டு இன்றைய இந்நாட்டின்மொழிகளில் எதுவானாலும் பெற்றோர் தெரியும் மொழியே போதனு மொழியாக இருக்கத் தகுதி உடையது' என்னும் புதிய தத்துவம் உருவாகியுள்ளது.

இப்புதிய தத்துவ கீழ் இலங்கைத் தமிழ் பெற்றோர் போதனு மொழிகளாகச் சிபார்சு செய்ய விரும்பும் மொழிகள்.

(1) உத்தியோக மொழியான சிங்களம்.

(2) 'உலகமொழி' எனப்படும் ஆங்கிலம்.

(3) தாய்மொழியானதமிழ்.

உத்தியோக மொழியான சிங்களத்தை போதனு மொழியாக்க எவ்வித நியாயமுமில்லை. 'சிங்களத்தில் கற்பதால் உத்தியோகம் பெறுவது இலது' என்பதே சிங்களமொழியைத் தேர்வோர் வாதம்.

சிங்கள மொழி உத்தியோகம் தரும் என்பதற்கும் கல்விக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. சிங்கள மொழி சற்றபின் உத்தியோகத்தை சிலவேளை தரு

விஞ்ஞானம் போதிக்க தமிழ் தகுதியில்லையா?

மேலோங்கிய, கற்பதற்கு வசதி என்று கூறமுடியாது. உயர்ந்த கல்வி பொருத்தமான மொழியில் தங்கியுள்ளதால், எமக்குப் பொருத்தமற்ற சிங்களப் போதனுமொழி எமது உயர் கல்வி, ஆக்கச் சிந்தனையை மட்டுப் படுத்தி காலகதியில் எம்மைப் பின் தங்கிய இன மாக்கி விடுகிறது.

ஆங்கிலமும் பொருத்தமற்றது

'உலக மொழிகளில் ஒன்றாகக் கருதப்படும்' ஆங்கிலம் அறிவுச் செல்வங்களை அதிகம் கொண்டிருப்பதால் அதனைப் போதனு மொழியாகக் கொள்ள வேண்டும், என்பது மறு புறத்தார் வாதம்.

ஆங்கில மக்களின் முன்னேற்றத்திற்குக் காரணம் ஆங்கிலம் என்னும் மொழியைப் போதனு மொழியாகக் கொண்டதல்ல. தாய் மொழி என்னும் ஆங்கிலத்தை போதனு மொழியாகக் கொண்டதே. உலகில் முன்னேறிய நாடுகள் யாவும் தமது தாய் மொழி மூலம் முன்னேற்றம் அடைந்துள்ளதே தவிர, ஆங்கிலம் எனும் மொழியை போதனு மொழியாகக் கொண்டல்ல.

எந்த வகையிலும் எத்துறையிலும் முன் நிற்கும் யப்பான தனது முன்னேற்றத்தை, அதற்கான கல்வியைத் தாய் மொழியிலேதான் ஊட்டுகிறது. உலகில் பிரமிக்கத்தக்க முன்னேற்றம் கொண்ட ருசிய நாட்டில் அந்நாட்டின் மொழிகளே போதனு மொழிகள். ருசிய நாட்டில் 30க்கு மேற்பட்ட மொழிகள் போதனு

(8-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லயம் நிறுவ



28-7-67-ல் கோண்டாவிலுக்கு விஜயம் செய்த சுகாதார அமைச்சர் திரு. எம். டீ. எச். ஜயவர்த்தனுவை நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஈ. எம். வி. நாகநாதன் வரவேற்றுப் பேசினுர்.

ளுக்கு செய்து கொடுக்க வேண்டியதவசியம்.

வடக்கு, கிழக்கு மீனவர்களுக்கு போதிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டால் இலங்கையின் மீன் தேவையின் பெரும் பகுதியை ஈடுசெய்வதோடு வெளிநாடுகளுக்குடின் மீன்களை நிறைந்தளவில் ஏற்றுமதி செய்ய முடியும். இதனுல் வெளிநாட்டு நாணயம் நமக்கு கிடைக்கவும் வழியேற்படும். ஆகவே தேசிய அரசாங்கத்துக்கு நாம் கூறுவது இதுதான். மயிலிட்டியில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படுவதை வரவேற்கிருேம். அனுல் இதனுடன் இருந்து விடக்கூடாது. வடக்கு, கிழக்கில் எத்தனை மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்கமுடியுமோ அத்தனை துறைமுகங்களை அமைக்கப்பட வேண்டும். மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்வதால் மட்டுமே இந்நாட்டுக்கு பல லட்சம் வெளி நாட்டு நாணயம் கிடைக்க வழிபிறக்கும்.

யாழ்ப்பாணத்தில் ஒரு 'லக்சல'வும் கைத்தொழிற் பேட்டையொன்றும் அமைக்கப்படவிருக்கிறது. இதனுல் யாழ்ப்பாண மக்களுக்கு பல நன்மைகள் கிடைக்கும். உள்ளூரில் உற்பத்திசெய்யப்படும் கைத்தொழிற்பொருட்களை லக்சல மூலம் விற்பனை செய்யலாம். இதனுல் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கம் ஏற்படவும் வழிபிறக்கும்

வடமாகாணத்தில் சிறு கைத்தொழில்களில் ஈடுபடக்கூடிய ஆர்வமும், திறமையும் இருந்தும் வசதி வாய்ப்பு இல்லா காரணத்தால் பலர் அவதிப்படுகிருர்கள். இப்பட்டிப் பட்டவர்கள் தொழிற் துறையில் ஈடுபடுவதற்கு, கைத் தொழிற் பேட்டை ஒரு வரப்பிரசாதமாகவிருக்கும்.

பலாலியில் கனிஷ்ட பல்கலைக் கழகம் நிறுவ நிதியொதுக்கப்பட்டிருக்கிறது. கிழக்கு மாகாணத்திலும் ஒரு கனிஷ்ட பல்கலைக்கழகம் நிறுவப்பட வேண்டுமென்ற சோரிச்சையை கல்வியமைச்சர் சவனித்ததாகத் தெரியவில்லை.

கிழக்கு மாகாணத்தில் கனிஷ்டபல்கலைக் கழகத்தின் அவசியத்தை தமிழரசு பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏனையோரும் பல தடவைகள் எடுத்துக் கூறியுள்ளார்கள் தேசிய அரசாங்கத்தின் கல்வியமைச்சர் அதற்கு செவிசாய்க்க மறுத்ததை பலமாக கண்டிக்கிருேம்;

இப்பொழுது 5கனிஷ்ட பல்கலைக் கழகங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிறுவப்பட விருக்கிறது. 6வது கனிஸ்ட பல்கலைக்கழகம் கிழக்கு மாகாணத்தில் நிறுவப்பட வேண்டுமென்பதை இங்கு வலியுறுத்த விரும்புகிருேம்.

திருமலையில் இறங்கு துறையும், மூதூரில் ஒரு இறங்கு துறையும் அமைப்பதற்கு நிதியொதுக்கப்பட்டிருப்பதை வரவேற்கிருேம்

யாழ்ப்பாணத்தின் சற்பகதரு என்று கூறப்படுவது. பனைமரம். இந்தப் பனையிலிருந்து கிடைக்கும் பனம் பொருட்களை ஆராய்ச்சி செய்வதற்கு ஒரு ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட வேண்டுமென்று வடமாகாண எம். பீக்கள் கோரி வருகிருர்கள். இதன் அவசியத்தை பருத்தித்துறை பாராளுமன்ற உறுப்பினர் திரு. துரைரத்தினம் பல முறை பாராளுமன்றத்தில் எடுத்து விளக்கியுள்ளார். அப்படியிருந்தும், பனம் பொருள் அபிவிருத்தி நிலையம் நிறுவப்படுவதற்கு வேண்டிய பணம் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படாதது வருத்தத்துக்குரியது. பனம் பொருள் ஆராய்ச்சி நிலையமொன்றை நிறுவ அரசாங்கம் முன்வர வேண்டுமென்று வலியுறுத்துகிருேம்.

5-ம் கலத் தொடர்ச்சி)

மொழியாக இருக்கின்றன. அந்நாட்டின் அரசாங்க மொழியான ருசிய மொழியை ருசிய மொழி பேசாத ருசிய மக்கள் போதனு மொழியாகச் சிபார்சு செய்வதில்லை.

'ஆஉகில மொழிக் கல்வி இலங்கை இந்தியா போன்ற பல இனங்கள் வாழும் நாட்டில் இன ஒற்றுமையை ஏற்படுத்தித்தரும்' எனப்படுகிறது. ஆங்கிலம் எமது நாட்டில் படித்த இரு இனத்தின் மிகச் சிறு பகுதியினரை ஒன்று சேர்க்கும் அதே வேளை ஆங்கிலப் படிப்பற்ற பெருந் தொகைப் பாமரமக்களுடன் படித்தோருக்கிருந்த தொடர்பைத் துண்டிக்கிறது. இதன் விளைவு கல்வி என்பது சமுதாயக் கலாச்சாரத்தோடு இணையாத வெறும் ஏட்டுச் சுரக்காய் என்பதாக அமைந்து விடும். இதனுலே தான் கல்வி அறிஞர் வைட் கெட் (White-Head)' கல்வி என்பது அறிவும் கலாச்சாரமும் இணைந்ததாக அமைய வேண்டும்' என்ருர்.

ஆங்கில மொழியின் தோற்றம், வளர்ச்சி, சவாச்சாரம், பாரம் பரியம், இலக்கண அமைப்பு ஆதியபலவும் எமது மொழியமைப்பிலிருந்து பெரிதும் வேறுபட்டது. வேறுபட்டமொழியில்கற்பது இயற்கைக்கு முரணுனது. 'இயற்கைக்கு முரணுன கல்வி சிறந்த பயனை தராது' என்பது கல்வியாளர் ஏகோபித்த முடிபாகும்.

இதனையே காந்தியடிகள்

'குழந்தையின் உடலுக்குத் தாய் பால் எப்படியோ, அப்படியே தாய்மொழிக் கல்வியும் இயற்கையானது' என அடிப்படைக்கல்வி(Basic Educatian) பற்றிக் குறிப்பிடுமிடத்துக் கூறியுள்ளார்.

உலகத்திலே உள்ள ஆங்கிலம் போன்ற பல மொழிகள் பலவிதமான சிறப்புக்களைக் கொண்டுள்ளன.

இதனை

வண. தனிநாயக அடிகள்

'ஆங்கிலம் வணிகத்தின் மொழி என்றும் இலத்தின் சட்டத்தின் மொழி என்றும், கிரேக்கம் இசையின் மொழி என்றும், ஜேர்மனி தத்துவத்தின் மொழி என்றும் பிரேஞ்சு தூதின் மொழி என்றும், இத்தாலியம் காதலின் மொழி என்றும் கூறுவது, ஒருபுடை ஒக்குமெனின் தமிழ் இரக்க மொழி என்பதும் பொருந்தும்' என்ருர்.

இங்கு குறிப்பிட்ட பல மொழிகளின் அத்தனை சிறப்புகளும் எமது வாழ்விற்கு இன்றியமையாதன, இதனுல் அத்தனை மொழிகளையும் போதனு மொழிகளாகக் கொள்ள முடியுமா? எனவே போதனு மொழியாகத் தாய்மொழி இருக்க வேண்டியதை மறுக்க வேண்டிய அவசியமில்லை.

விஞ்ஞான மொழி தமிழ்

'விஞ்ஞானம் போதிக்கத் தமிழ்தகுதி குறைந்தது' எனப்படுகிறது, சிலராலாகும். தமிழ் மொழியின் வளர்ச்சி புதிய துறைகளைப் போதிக்கப் போதியதல்ல, என்பது ஏற்கக் கூடியதல்ல. 12ம் 13ம் நூற்ருண்டுகளில் அரும்பி வளர்ந்த இந்தி மொழி இந்தியாவில் விஞ்ஞானம் போதிக்கும் தகுதி பெற்று விட்டது. இருபதாம் நூற்ருண்டின் ஆரம்பத்தில் சரியானஎழுத்து வடிவமற்றிருந்த வுஸ் பெக் (Vez beck) ருசியாவின் ஓர் பகுதியில் விஞ்ஞான போதனு மொழியாகி உளது. இரண்டாயிரமாண்டு பழமை மிக்க ஒரு தனிச்செம் மொழி எனப்படும்' தமிழ் மொழி தகுதி அற்றதென்பது எமது கோழைத்தனத்தைக் காட்டுகிறதே தவிர வேறல்ல.

அறிவியல் வளர்ச்சிக் கேற்ப பிறமொழிச் சொற்களை ஏற்பதில் தவறில்லை. இன்று உலகில் பிறகமாழிகலவாத மொழியே இல்லை. இதனையே 'பிற மொழிச் சொற்கள் முற்ருக இடம் பெருத மொழி ஒன்று மில்லை' என ஒட்டோ யெசுபேசன் (Otto Jesperson) கூறினுர்.

'தாய் மொழியில் கற்று கிணற்றுத்தவளை போல இருப்பதா?' எனும் கேள்வியும் கேட்கப்படுகிறது. வெளிநாடு சென்று சில நிபுணத்துவம் பெற்று வருவதற்காக சகலரையும் தாய் மொழியல்லாத பிறிது மொழியில் கற்க வைப்பது பொருத்தமற்றது. ஆங்கிலம் போன்ற மொழிகளைக் கற்க கூடாதென்பதல்ல தாய்மொழிக் கல்வி வாதம். தாய் மொழிக் கல்வியால் முன்னேறிய ருசியா, யப்பானில் சாதாரண மானவன் இரு மொழிகளுக்கு மேல் கற்கிருன். எனவே இரண்டாம் மொழிக் கல்வியும் தாய் மொழிக் கல்வியுடன் இணைந்ததாகும்;

தாய் மொழிக் கல்வியின் பயன்கள்

உளவியலாளர் கருத்துப்படி உயர் விளக்கம் (High understanding) நினைவாற்றல், அகக்காட்சி, மன எழுச்சி, அராயும் திறன், சிந்தனை, ஆக்கும் திறன் (Creative) ஆகிய யாவும் உயர்ந்த பயனைத் தாய்மொழியிலே தான் தரவல்லன.

பித்தலாட்ட.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் ஏடுகள் தங்களின் அரசியல் விஷமப் பிரசாரத்துக்கு பயன்படுத்தியுள்ளன.

ஏரிக்கரையின் சிங்கள ஏடான ''தினமினு' (2-8-67) இந்தச் செய்தியை முதற்பக்கத்தில் பிரசுரித்தது. அதற்கு 'ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் தெரிவு' என்று தலைப்பு கொடுத்துள்ளது.

இது சிங்கள வாசகர்களின் கண்ணில் மண்ணைத் தூவுவதற்காக செய்யப்பட்ட கீழ்த்தரமான முயற்சியாகும்.

'தினபதி, (2—8—67) இந்தச் செய்தியைத் தினத்தந்தி பாணியில் எழுதி திரு. தேவநாயகத்தின் படத்துடன் பிரசுரித்தினுது. சனட்டராகத் தெரிவு செய்யப்பட்டவர் மகூர் மவுலானுவேதவிர தேவநாயகம் அல்ல. எல்லா பத்திரிகைகளும் அந்தச் செய்தியுடன் மவுலானுவின் படத்தைப் பிரசுரித்திருக்க, ''தினபதி'' மட்டும் தேவநாயகத்தின் படத்தைப் பிரசுரித்ததேன்? இதுபத்திரிகா தர்மமா? விபசார தர்மமா?

''எத்த'' ஏடு (2—8—67) பிரசுரித்துள்ள மவுலானுவின் செய்திக்கு ''யானை செல்வாவிடம் மீண்டும் மண்டியிட்டது' என்று தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

'இந்த சனட்ஆசனத்திற்கு யு. என். பி. உறுப்பினர் ஒருவரை நியமனம் செய்யும்படி கோரிய யு. என். பி. பின்வரிசை எம். பிகளின் வேண்டுகோளை பிரதமரால் நிறைவேற்ற முடியாமல் போய் விட்டது. எனவே அவர்களின் முயற்சி தோல்வியுற்றது. 'என்று 'எத்த' இச் செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

எதிர்ப்பு ஒழிந்தது

"மாவட்ட சபைகள் பற்றி எதிர்க்கட்சியினர் சிங்கள மக்களிடையே நடத்தி வந்த பிரசாரம் பொய் என்பதை இன்று சிங்கள மக்கள் உணரத்தலைப் பட்டுள்ளார்கள். மாவட்ட சபை நாட்டைப் பிரிக்கும் ஒரு திட்டம் அல்ல என்பதையும், மாவட்டசபைகள் நிறுவப் படுவதால் நாட்டுக்கு நன்மையேதவிர தீமை கிடையாது என்பதையும் சிங்கள மக்கள் இன்று புரிந்து கொண்டு விட்டனர். மாவட்டசபை மசோதா சமர்ப்பிக்கப்பட்டதும், இன்று இருந்து வரும் கொஞ்ச நஞ்ச சந்தேகங்களும் தீர்ந்துவிடும்' இவ்வாறு சுதந்திரன் நிருபரிடம் உள்ளூராட்சி அமைச்சர் திரு. திருச்செல்வம் தெரிவித்தார்.

அண்மையில் கண்டியில் நடைபெற்ற கி. ச. தலைவர்களின் மாகாநாட்டில் கலந்து கொண்டு மாவட்ட சபை பற்றி கி, ச. தலைவர்களுக்கு விளக்கமளித்துப் பேசிவிட்டு அமைச்சர் கொழும்பு திரும்பியதும் சுதந்திரன் நிருபருக்கு அளித்த பேட்டியொன்றிலேயே மேற் கண்டவாறு அமைச்சர் தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது:—

மாவட்ட சபைபற்றி சிங்கள மக்கள் போதிய விளக்கமில்லாத காரணத்தால்தான் கருத்து வேற்றுமை கொண்டிருந்தார்கள். ஆனுல் இப்பொழுது மாவட்டசபை பற்றி அவர்களுக்கு எடுத்துக் கூறிய பின்னர் தெளிவு ஏற்பட்டிருக்கிறது.

''மாவட்ட சபைக்கு சிங்கள மக்களிடையே இன்று ஆதரவு பெருகி வருகிறது. மசோதா சமர்ப்பிக்கப்பட்டதும் எல்லோருடைய ஆதரவும் நிச்சயம் கிடைக்கும்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்தி

அவளால் எந்த விதமான முடிவுக்கும் வர முடியவில்லை.

அவள் செய்தது சரியானதுதானா? அவளுடைய செய்கையை இந்த உலகம் ஏற்றுக் கொள்ளப்போகிறதா? உலகம் ஏற்றுக்கொள்கிறதோ இல்லையோ அவள் உள்ளம் அதை ஏற்றுக் கொள்கிறதா? இப்படி நடந்துகொள்ள அவளுக்கு எப்படித் துணிவு வந்தது?

தலைமுறைதலைமுறையாக உடலுழைப்பைத் தர பழகிபோன ஒரு சமுதாயத்தில் பிறந்தமையால் அவளுக்கு இத்துணிவு ஏற்பட்டிருக்குமோ? இருக்கலாம்.

உழைத்துப் பிழைப்பதையே வாழ்க்கை நியதியாக ஏற்றுக்கொண்ட தோட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவளவள். ஆணோ பெண்ணோ, வாழ்க்கை நியதி ஒன்றுதான், ஒழிவில்லாது உழைக்கமுடிந்த ஆண் பிள்ளையின் வருவாய் நின்று விடுகிற சூழ்நிலை ஏற்பட்டாலும்கூட எந்தக் குடும்பமும் நிலை குலைந்து போய் விடுவதில்லை. அந்தக் குடும்பத்திலுள்ள பெண் அதை ஈடு செய்து விடுவாள்.

அவனுடையது வருந்தி செய்கிற உழைப்பு; உடலில் வலுவேண்டும் அதைச் செய்ய. பெண்ணின் உழைப்பு நளினமானது; நுட்பம் நிறைந்தது.

மலைச்சரிவுகளில் பரந்து விரிந்து கிடக்கிற தேயிலைத் துளிரனைத்தும் இயற்கை தந்த செல்வம். பெண்களின் கரம் படுவதால் துளிர்த்து துளிர்த்து நிறைகிற அதன் வனப்பே அவர்கள் வாழ்வில் வளமூட்டுகிறது. அந்தச் செடிகளுக்கு வளமூட்டுவதற்கென்றே அந்த வனிதைகள் உயிர் வாழ்கிறார்கள்; உடல்வளைத்து உழைக்கிறார்கள்.

அவள் உழைப்பையே வாழ்வாகக் கொண்டவள். இரண்டு தங்கைகளோடு பிறந்தவள். அந்த மூவரின் வருமானத்தில் தலையெடுத்ததுதான் அவர்களின் குடும்பம். அந்த ஒன்றுக்காகவே அவளை மருமகளாக்கிக் கொண்டனர் அவளது கணவனின் பெற்றோர்.

புகைத்தும் குடித்தும் பொழுதைக் கரைத்துக் கொண்டிருக்கும் தன் மகனின் வாழ்க்கை சீர்படவும் அவன் தலையெடுக்கவும் அவளின் துணை பயன்படும் என்று அவர்கள் நினைத்தார்கள். அவர்கள் எதிர்பார்த்ததில் தவறில்லை. அது சுயநலமான எதிர்பார்ப்புமல்ல. எந்த பெற்றோரும் இயல்பாக எதிர்பார்க்கக்கூடியதுதான்.

ஆனால், அதுநிறைவேறிட வேண்டுமென்ற அவசியமிருக்கிறதா? நிறைவேறினாலும், எதிர்பார்த்த முழு அளவில் என்ற கட்டாயமுண்டா? எதிர்பார்த்ததற்கு மாறாக எதுவும்நடந்து விடாமலிருக்க யாரால் உறுதி தர முடியும்?

அவளது கணவன் முன்னிலும் அதிகமாக குடித்தான். தனிக் குடித்தனம், முன்னிலும் கூடிய வருவாய், அவன் குடி கூடுவதற்கு யாரைக் கேட்க வேண்டும்?

திருமணமான ஆரம்ப நாட்களில், காதல் பருவத்தின் துடிப்பான நினைவுகளோடுகணவனுடன் வழாத் தொடங்கிய காலத்தில், தான் அத்தனை காலமும் நினைவுத்திரையில் வரைந்து வந்திருந்த வாழ்க்கைச் சித்திரத்தை ஆடவனொருத்தனோடு வாழ்ந்து சரிபார்க்க ஆரம்பித்தபோது அவள் அதைபற்றி அதிகம்கவலைப் படவில்லை; கால ஓட்டத்தில் அதை சரிபடுத்திவிடலாமென்று நினைத்தாள். அவள் நினைப்பும் பொய்யாகிவிட்டது.

அவள் கணவனை யாராலும் திருத்த முடியவில்லை.

கடும் உழைப்பாளி அவன்—அதனால் அவனை கடிந்துபேச யாருக்கும் வழி இல்லாமல் போய்விட்டது.

உழைத்து திரண்ட அவன் அங்கம் குடித்துக் கெட்டுக் கொண்டிருந்தது. கணவனின் அந்த நிலையை எந்த பெண்தான்அனுமதிப்பாள்?

அவர்களிருவராயிருந்த போது அவளால் ஓரளவுக்கேனும் பொறுத்துக் கொள்ளமுடிந்தது. ஆனால், குழந்தையொன்று பிறந்து அவர்களோடு வளரத் தொடங்கியபோது அவளால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

தாங்களிருவராக இருந்து கொஞ்சி குலாவிய நாட்களில், மாதா மாதம் குடித்தே அழிந்த நூறு ரூபாயை பற்றிய மதிப்பை இன்று அவள் அதிகம் உணர்ந்தாள்.

அந்த உணர்வு அவளுக்கு எப்படி வந்தது? குழந்தை பிறந்ததினாலா? தன் குழந்தையின் எதிர்காலம் குறித்துச் சிந்திக்கிற அளவுக்கு,

தோட்டத்துப் பெண்ணின் மனம் பக்குவமடைந்து விட்டதா?

கங்குல் மறைகிற காலை நேரத்தில், கதிரொளி தோன்றுகிறதை அவள் கவனித்திருக்கிறாள். ஆனால், மறைவையும் தோற்றத்தையும் மனதில் வாங்கி, எதனால் எது விளைகிறதென்றெண்ணி பார்க்க அவள் இது காறும் முனைந்ததில்லை.

அவள் அப்படிச் செய்யவில்லையென்பதற்காகஇரவு விடியாமலும்—பொழுது மறையாமலுமா இருந்து விடுகின்றன?

மனித சமுதாயத்தின் நாகரிக வளர்ச்சி எந்தெந்த உருவிலெல்லாமோ உலகின்

"சாரல் நாடன்"

மூலைமுடுக்கெல்லாம் பரவிக் கொண்டு வருகிறது. காலம் செல்லலாம், வேகம் குறையலாம். ஆனால், அதன் பரவுதல் ஏற்பட்டேதீரும்;

வெள்ளைக்காரனும் பறங்கியனும் வகித்த துரை வேலைக்குச் சிங்களவர்களும் தமிழரும் வந்து விட்டிருக்கிறதை அவள் நேரில் பார்த்திருக்கிறாள். எத்தகைய மாறுதல்? இப்படி ஒருநிலை வரும் என்று யார் நினைத்திருப்பார்கள்?

நகர்ப்புறக் கல்லூரிகளில் படித்துவிட்டு மேசோடும் சப்பாத்தும் அணிந்து வேலைபார்க்க ஆரம்பித்திருக்கும் 'சுப்பர் வைசர்களை அவள் நாளாந்தம் பார்த்திருக்கிறாள்? அவர்களில் பலரும் தோட்டச் சமுதாயத்தில் பிறந்து வளர்ந்தவர்கள்தாமே!

தொழிற்சாலையிலும் ஆபீஸிலும் உத்தியோகம் வகிப்பவர்களில் வாழ்க்கையின் அடிமட்டத்தில் நசுக்குண்டு கிடந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் யாரும் இல்லாமலா போய்விட்டார்கள்?

அவளுக்கு ஏன் இந்த நினைப்பெல்லாம்? தன் மகனையும் அப்படி ஒரு நிலைக்கு உயர்த்திவிட வேண்டும் என்று கனவு காணுகிறாளா? ஒரு தாய் காணக்கூடிய கனவு தானது. ஆனால், அது நிறைவேறிவிடுகிற சாத்தியமிருக்கிறதா? அவளது கணவன் குடிப்பழக்கத்தை நிறுத்தாத வரைக்கும்?

அவன் எங்கே நிறுத்த போகிறான்?

அவன் நிறுத்தவில்லை என்பதற்காக அவள் தன் ஆசையை மறந்து விடப் போகிறாளா?

அவள்தான் ஏன் தன் பழக்கத்தை மாற்றிக் கொள்ள வேண்டும்? அவள் மகன் படித்து உத்தியோகமா செய்யப் போகிறான்?

"போடி பயித்தியமே புதுசா என்னென்னமோ சொல்றியே, உன் மகன் படிச்சி உத்தியோகமா செய்யப் போகிறான்? அதுக்கெல்லாம் பொறந்து வரணுமுண்டி' அவன் அடித்துச் சொல்லிவிட்டான்.

"கத்தியும் மண்வெட்டியும், முள்ளும் கடப்பாரையும் அவர்களை நம்பியே தயாரிக்கப்படுகின்றனவாம் அவர்களின்கைகளிலிருக்கும் போதுதான் அவை மதிக்கப்படுகின்றனவாம்" தலைமுறை தலைமுறையாக இருந்துவரும் அந்தப்பழக்கத்தை மாற்ற நினைப்பது பைத்தியக்காரத் தனமல்லவா?

'உன் புத்தி உன்னை விட்டு எங்கபோகும்? என் புள்ளை படிச்சாகணும்" அவள் பிடிவாதம் செய்தாள்.

அவர்கள் குடும்ப வாழ்வில் புகைச்சல் ஆரம்பமாகி விட்டதுபொழுதோட வருமிரவு புகைச்சலையும் மழைத்துவரும்.

அப்படி ஒரு நிலைக்கா அவள் ஆசைப்பட்டாள்? அவள் நினைத்தது நடக்குமென்றால் அந்த நிலையையும் ஏற்று வாழ அவள் தயாராக இருந்தாள்.

ஆனால், அவள் விரும்பியது நடைபெறுமென்று தோன்றவில்லை. அதனால் அவளுக்கும் அப்படிச் செய்வதைத்தவிர வேறு வழியில்லாமல் போய்விட்டது.

அவளது ஆசையை ஆரம்பத்தில் பரிகசித்தவர்கள் அவளது தற்போதைய செயலைக்கண்டதும் பழிக்கவே ஆரம்பித்து விட்டனர். "ஒடுகாலி, குடும்ப பொண்ணு அவ" சமூகம் முழுக்க அவளைப் பழிக்க ஆரம்பித்தது.

அவள்தாய் அவளை ஏசினாள், அவளது தந்தை அவளைக் கண்டித்தார். அவளது ஆசை நியாயமானதுதான். அதற்காக அப்படியா நடந்து கொள்வது? அவளது நடத்தை தமிழ்ப் பெண் ஒருத்திக்கு பெருமை தரக்கூடியதுதானா?

யாருடைய ஏச்சையும் அவள் லட்சியம் செய்யவில்லை. யாருடைய பேச்சும் இனி அவளைகட்டுப்படுத்தப் போவதில்லை.

அவள் தீர்க்கமாக முடிவு செய்துவிட்டாள். அவள் மகன் படித்தே ஆகவேண்டும் அதற்காகவாழ்க்கையில் எந்ததுன்பத்தையும் ஏற்கத் தயாராவிட்டாள்.

இனி எந்தத் துன்பம் ஏற்பட்டு என்ன செய்ய? தன் மகனின் கல்விக்கு குறுக்கே நிற்கிற கணவனையே வேண்டாமென்று ஒதுக்கி வைத்து விட்ட அவளுக்கு இனி எந்த சுமையைத்தானேற்றுகொள்ள முடியாது?

நடைபெற முடியாத ஆசைகளுக்காக அவள் தன் வாழ்க்கையையே அழிந்துக் கொண்டாள் என்று சொல்வதில்இந்த உலகம் திருப்திப் படத் தொடங்கியது.

அவளுக்கும் திருப்திதான், புதிய வாழ்க்கைக்குத் தன்னைத் தயார் செய்து கொண்டதில்.

—(யாவும் கற்பனை)

எமது சிறுகதை

ஆட்டிப் படைக்கும் ஆஸ்த்மா

ஆஸ்துமா நோயால் மூச்சுத் திணறி அவதிப்படுவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டுதான் போகிறது. பெரும்பாலும் உணர்ச்சிவசப்படுவோர், புத்திக் கூர்மையுடையவர்கள் போன்ற மக்களே இந்நோயால் பீடிக்கப்படுகிறார்கள். இந்நோய் சில சில சமயங்களின் குடும்ப நோயாகவும் காணப்படுகிறது. இதனால் சிறு பிராயத்திலிருந்தே நோயின் அறிகுறிகள் ஆரம்பிக்கத் தொடங்கலாம்.

இந்த நோயின் தன்மையை ஊக்குவிக்க பல காரணங்கள் உதவுகின்றன. அவைமுறையே:

1. மனோ நிலை மாற்றம்-அதிர்ச்சி' துன்பம், உணர்ச்சிவசப்படுதல் போன்றவை. முதல் தடவை நோய் ஆரம்பிப்பதற்கும், சில சமயங்களில் நோயின் தன்மை வலுக்கவும் உதவுகின்றன.

2. ஒவ்வாமை—வேற்றுப் பொருள்களால் உடலின் உயிரணுத் திசுக்களில் மாறுதல்கள் ஏற்படலாம். இதை ஒவ்வாமை அல்லது அலெர்ஜி என்பர். இதை உண்டு பண்ணும் வேற்றுப் பொருள்கள்: (அ) உண்ணும் உணவிலுள்ள மீன், முட்டை, பால் போன்ற தாவரப் பொருள்களாகவோ இருக்கலாம். (ஆ) சுவாசித்தல் மூலம் தூசி, மரகந்தம், பிராணிகளின் உரோமம், சில வாசனைத் திரவியங்கள் முதலியனவும் ஒவ்வாமை ஏற்படுத்தலாம். ஆனால் தோலில் ஏற்படும் ஒவ்வாமைக்கும் ஆஸ்துமாவுக்கும் உள்ள சம்பந்தம் என்ன என்று மட்டும் சரிவர புரியவில்லை. சில சமயங்களில் மருந்துகளால், உதாரணமாக, ஆஸ்பிரின், அயோடைடு முதலியவற்றால் அனபிலாக்டிக் அதிர்ச்சியும், இதைத் தொடர்ந்து ஆஸ்துமாவும் உண்டாகலாம்.

3. நோய்கள்—மூச்சுக்கிளைக் குழல் அழற்சி போன்ற நோய்களினாலும் ஏற்படலாம்.

4. இதர காரணங்கள்-மூச்சுத் திணறல் அடிக்கடி ஏற்பட பல காரணங்கள் அடிப்படையாக அமைகின்றன. நிறை உணவு உண்ணுதல், அதிக வேலை செய்தல் போன்றவை நோயின் போக்கை வலுப்படுத்துகின்றன.

அறிகுறிகள்

மூச்சுத் திணறல் திடீரென ஆரம்பமாகும். மார்பகத்தை இறுக்குவது போன்ற உணர்வு தோன்றும். இவை இரண்டு மணி நேரம்வரை நீடிக்கலாம். மூச்சை உள் இழுப்பது சுலபமாகவும்; வெளிவிடுவது கடினமாகவும் இருக்கும். பொதுவாக நோயாளிகள் நேராக உட்காருவதையே விரும்புகின்றனர். இதைத் தொடர்ந்து, கோழை வெளியேற்றாத வறட்டு இருமலும், இதனால் மூச்சுத் திணறலும் மாறிமாறி வரலாம்.

நோயாளி நீலம் பூத்தும், சில சமயங்களில் வெளுத்தும் காணப்படுவார். கோழையை வெளியேற்றியதும், மூச்சுத் திணறல் சற்று குறையலாம். ஆனால் பல நாட்கள் வரை நீடித்தால், இதை நீண்ட நேர ஆஸ்துமா எனக் கூறுவர்.

நோய் நாடல்

நோயாளிகளிடமிருந்து இந்த நோய் சிறுவயதிலிருந்து தொடங்கியிருப்பதையும், குளிர் காலங்களில் அடிக்கடி வந்து போவதையும் கேட்டறியலாம். இருதய நோய் கண்டவர்களில் கூட ஆஸ்துமா போன்ற அறிகுறிகளைக் காணலாம். இதை இருதய ஆஸ்துமா என்பர். ஆகவே நோயாளியின் இருதயம், இரத்த அழுத்தம் முதலியவற்றைப் பரிசோதிக்க வேண்டும். இவற்றில் கோளாறு இல்லையென்றால் இதை மூச்சுக் கிளைக்குழல் ஆஸ்துமா எனக் கொள்ளலாம்.

1. இரத்தம்-மொத்த வெள்ளையணுக்கள் எண்ணிக்கையையும் ஒவ்வொரு வித வெள்ளையணுக்களின் சதவீதத்தையும் அறிய வேண்டும். இதில் இயோசினோபில் என்ற அணுவின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படும்.

2. சளி—கூடிய நோய்க்கிருமிகள் இருக்கின்றனவா வென்று பரிசோதித்தல் நலம்.

3. எக்ஸ் கதிர் சோதனை—இதனால் ஆஸ்துமாவைக்கண்டு

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்காவில் இனக்கலவரங்கள் கட்டுக்கடங்காமல் பரவி வருகின்றன. நீக்ரோக்கள் அகிம்சா முறையைக் கைவிட்டு பலாத்காரத்தில் இறங்கியுள்ளனர். இதனால் மார்டின் லூதர் சிங் போன்ற தலைவர்களின் செல்வாக்கு மங்கிவருகிறது. "கறுப்பு அமெரிக்கா" 'வெள்ளை அமெரிக்கா' என்று நாட்டைப் பிரிக்குமாறு நீக்ரோக்கள் கோருகின்றனர்.

'சுதந்திர நீக்ரோஸ்தான்' கோரிக்கை

அமெரிக்காவில் கறுப்பர்களின் புரட்சி

உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு என்று வர்ணிக்கப்படும் அமெரிக்காவில் நடைபெற்றுவரும் கலவரங்கள் அந்நாட்டின் கௌவரத்துக்கும் சிறப்புக்கும் ஒரு பெருங்களங்கத்தை ஏற்படுத்திவிட்டன, அடிமைத்தனத்தை அறுத்தெறிவதற்கென்றே பிறந்த ஆபிரகாம் லிங்கனும், அவர் வழி வந்த கென்னடியும் பிறந்த நாடு இன்று நிறவெறிச் சேற்றில் சிக்கித் தவிக்கிறது. அமெரிக்காவின் 15 நகரங்களில் இந்த இனக்கலவரம் பரவியிருக்கிறது. எனினும் இனக்கலவரத்தில் அதிகம் பாதிக்கப்பட்டது. 'டெட்ராயிட்' நகர்தான். கலவரத்தை அடக்குவதற்காக அங்கு அமெரிக்க ராணுவமும் அழைக்கப்பட்டது. நவீன ஆயுதங்கள் பலவும் கையாளப்பட்டன. இதிலிருந்தே இனக்கலவரம் எவ்வளவு வேகமாக ஏற்பட்டிருக்கிறது என்பது தெளிவாகிறது.

இந்த இனக்கலவரத்தில் ஈடுபட்டவர்கள் கறுப்பு முஸ்லிம்கள் என்று அழைக்கப்படும் நீக்ரோக்கள். வெள்ளையர்களும் கலவரத்தில் ஈடுபட்டுள்ளனர். இக்கலவரங்களால், பலர் இறக்கவும், ஆயிரக்கணக்கானோர் காயமடையவும், பலகோடி டாலர்கள் பணம் பாழாகவும் வேண்டியேற்பட்டது. நாகரீகத்தின் உச்சியில் நிற்பதாகக் கூறிக் கொள்ளும் அமெரிக்கர்களே உங்கள் நாரீகம் இதுதானா என்று இன்று உலகின் ஏனைய நாடுகள் கேட்கின்றன. அமெரிக்காவின் எதிரிநாடுகள் எல்லாம் இக்கலவரங்களைச் சுட்டிக்காட்டி சிரிப்பாய்ச் சிரிக்கின்றன. இப்படியொரு நிலையேற்பட ஜோன்சன் அரசாங்கம் இடம் கொடுத்திருக்கலாமா?

கறுப்பு முஸ்லிம்களுக்கு எதிராக காட்டப்படும் பாரபட்சமான நடவடிக்கைகளுக்கெதிராக அப்போதைக்கப்போது அமெரிக்காவில் பல இடங்களில் கிளர்ச்சிகள் நடைபெற்று வந்திருக்கின்றன. அந்தக் கிளர்ச்சிகளுக்கான காரணங்களைக்கண்டு பிடித்து அவற்றை நிவர்த்திக்க அமெரிக்க அரசாங்கம் தவறியதனாலேதான், இப்போது இனக்கலவரம் பூதாகாரமாக உருவெடுத்துள்ளது.

கட்டாய ராணுவ சேவையில் சேர மறுத்தற்காக நீக்ரோ குத்துச்சண்டை வீரரான முகம்மதலி கிளேக்கு அமெரிக்க அரசாங்கம் சிறைத்தண்டனை விதித்தது, நீக்ரோக்களிடையே உணர்ச்சியையும் வெறியையும் கிளப்பி விட்டிருக்கிறது.

முகம்மதலிக்கு சிறைத்தண்டனை வழங்கினால் அதன் விளைவுகள் பாரதூரமாக இருக்கும் என்று நீக்ரோக்களின் தலைவரான மாட்டின் லூதர் சிங் அப்போதே எச்சரிக்கை செய்திருந்தார். ஆனால் அமெரிக்க அரசாங்கம் விடாப்பிடியாக கிளேயை சிறைக்கு அனுப்ப முடிவு செய்தது. இது எரிகிற தீயில் எண்ணெய் வார்ப்பது போன்ற புத்திசாலித்தனமற்ற நடவடிக்கையாகும், இதன் காரணமாக நீக்ரோக்களிடையே உணர்ச்சி கொந்தளித்தது. இந்த உணர்ச்சிதான் இனக்கலவரமாக வளர்ச்சிடைந்திருக்கிறது என்று கூறினால் அதில் தவறு இருக்க முடியாது.

அமெரிக்காவில் நடைபெற்ற இனக்கலவரத்தில் நீக்ரோக்களின் இயக்கம் எதுவும் நேரடியாக ஈடுபட்டதாகத் தெரியவில்லை, மக்களே பொங்கி எழுந்து கிளர்ச்சியை நடத்தியிருக்கிறார்கள். அமெரிக்க ராணுவத்துக்கும் நீக்ரோக்களுக்குமிடையே மூண்ட ஒரு உள் நாட்டுப்போர் அது என்று கூடச் சொல்லலாம்.

கலவரத்தின் போது நடைபெற்ற பலாத்கார சம்பவங்களையெல்லாம் நீக்ரோக்களின் தலைவரான மாட்டின் லூதர் சிங் கண்டித்திருக்கிறார். கிளர்ச்சிகள் ஏற்படும் போது பலாத்கார சம்பவங்களைத் தடுப்பது இலேசானதல்ல.

இக்கலவரங்களின் பின் அமெரிக்க அரசாங்கம் ஒரு பெரிய நெருக்கடியை எதிர்நோக்குகிறது. வெள்ளையர்களுடன் தமக்கு சம அந்தஸ்து கோரிவந்த நீக்ரோக்கள், அக்கோரிக்கையில் வெற்றிபெறாத காரணத்தால், இப்போது அமெரிக்காவையே இரண்டாகப் பிளக்கும்படி கேட்கிறார்கள். வெள்ளை அமெரிக்கா, கறுப்பு அமெரிக்கா என அமெரிக்காவை இரண்டாகப் பிளந்து கறுப்பு அமெரிக்காவை தங்களிடம் தரும்படி கோருகிறார்கள். நீக்ரோக்களின் நீதியான கோரிக்கைகள் தொடர்ந்து நிராகரிக்கப்பட்டு வந்ததன் பயனாக இந்தப் புதிய கோரிக்கை எழுந்துள்ளது. இதனால் அமெரிக்காவுக்கு ஒருபெரிய தலையிடி ஏற்பட்டிருக்கிறது.

அமெரிக்க நாட்டைப் பிளவுபடுத்த ஜோன்சன் அரசாங்கம் முன்வராவிட்டாலும் நீக்ரோக்களுக்கென அமெரிக்க சமஷ்டியின் கீழ் ஒரு தனிய ரசு அமைத்துக் கொடுத்தே தீரவேண்டும். இல்லாவிட்டால் நீக்ரோக்கள் பிரச்சினை என்றும் தலைவலியாகவேயிருக்கும்.

அமெரிக்காவிலும் சமஷ்டி தானே இருக்கிறது! அங்கு இவ்வளவு பெரிய இனக்கலவரங்கள் நடைபெறுகின்றனவே, நீக்ரோக்கள் கொடுமைப்படுத்தப் படுகின்றனரே, இலங்கையில் மட்டும் சமஷ்டி ஏற்பட்டால் எப்படி சிறுபான்மையின் உரிமைகளைப்பாதுகாக்க முடியும் என்று சிலர் கூக்குரலிடலாம். அமெரிக்காவில் சமஷ்டியரசு இருந்தாலும், நீக்ரோக்களுக்குத் தனியரசு கிடையாததே அங்கு தோன்றிய இனக்கலவரங்களுக்குக் காரணம் என்பதே அப்படிப்பட்டவர்கள் உணர்ந்து கொள்வார்களா

நீக்ரோ பிரச்சினையில் அமெரிக்க அரசாங்கம் என்ன செய்யப் போகிறது? இப்பிரச்சினையில் எப்படி நடந்து கொள்ளப் போகிறதோ அதைப் பொறுத்துத்தான் உலகமக்களால் அமெரிக்காவின் பெருமையும் சிறுமையும் கணிக்கப்படும்.

கானடவில் பிரஞ்சுஸ்தான்

உலகின் பெருந்தலைவராக விளங்கினாலும், இன உணர்ச்சி மொழியுணர்ச்சியற்றவராக ஒருவர் வாழமுடியாது என்பதை உலகுக்கு தெட்டத்தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார், பிரரெஞ்சு ஜனாதிபதி டீகால்.

கனடா அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் கனடாவில் சுற்றுலா மேற்கொண்டிருந்த டிகால், மொண்ட்ரிஸ் நகரில் பேசும் போது 'சுதந்திரக் குவிபெக்'கோரிக்கையை ஆதரித்து முழக்கமிட்டதன் மூலம் சென்றவாரம் உலகின் கவனத்தை ஈந்தார், அத்துடன் அக்கோரிக்கைக்கு, பிரெஞ்சு அரசாங்கம் ஆதரவளிக்கும் என்று இப்பொழுது அறிவித்துள்ளார். டிகாலின் இந்தச் செய்கை கனடா அரசாங்கத்துக்குப் பேரதிர்ச்சியை கொடுத்திருக்கிறது, கனடாவுக்கு மட்டும் மல்ல மேற்கு வல்லரசுகள் எல்லாம் ஜெனரல் டிகாலின் அறிவிப்புக் கேட்டு அதிர்ச்சியடைந்துள்ளன. உலகத்துப்பத்திரிகைகள் எல்லாம் ஜெனரல் டிகாலை 'திட்டித்' தீர்த்திருக்கின்றன.

பிரஞ்சு அதிபரான டிகால் ஒரு அதிசய மனிதர். அவரது எண்ணங்களையும், செயல்களையும் யாரும் எளிதில் எடைபோட்டு விட முடியாது. அப்படிப்பட்டவரே இன உணர்ச்சி வசப்பட்டு, 'குவிபெக்' சுதந்திரக் கோரிக்கையை ஆதரித்துள்ளார். கனடா அரசாங்கத்தின் விருந்தாளியாகச் சென்ற இடத்தில் அவர் இப்படி நடந்து கொண்டது ஒரு முறையற்ற நெறியற்ற செயல் என்று கூறப்பட்டாலும், டிகாலின் இன உணர்வை நாம் பாராட்டத்தான் வேண்டும்.

கனடா சமஷ்டியில் பிரஞ்சு பேசும் மக்களும், ஆங்கிலம் பேசும் மக்களும் இணைந்திருக்கின்றனர். பிரஞ்சு மொழி பேசும் கனேடியர்கள் வாழும் பகுதிதான் 'குவீபெக்' என்று அழைக்கப்படுகிறது. இந்தப் பிரதேசத்தில்சுமார்8இலட்சம் பிரஞ்சு பேசும் னேடியர்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

பிரஞ்சு மொழிபேசும் கனேடியர்கள் கனேடிய சமஷ்டியிலிருந்து பிரிந்து தனியாக 'குவிபெக்' என்ற சுதந்திர நாட்டை நிறுவ வேண்டுமென்று கோரிவருகிறார்கள். பிரஞ்சு மொழி பேசும் மக்களின் இத்தனிநாட்டு கோரிக்கையை ஆதரித்ததன் மூலம் டிகால் இன்று மேற்கு நாடுகளின் தலைவலியாகமாறியிருக்கிறார்.

டிகால் தெரிவித்த ஆதரவின் பின்னர் 'குவிபெக்' சுதந்திரக் கோரிக்கை வலுவடைய வழிபேற்படுகிறது. அங்குள்ள பிரஞ்சு மக்களுக்கு புதிய உற்சாகம் ஏற்பட்டிருக்கும்.

'குவிபெக்' சுதந்திரக் கோரிக்கையை ஆதரித்ததன் மூலம், மேற்கு வல்லரசுகளின் எதிர்ப்பைச் சம்பாதித்துள்ளடிகால் தன் சொந்த நாட்டிலுள்ள அரசியற் கட்சிகளின் எதிர்ப்பையையும் சம்பாதிக்க நேரிடலாம். பிரான்சில் உள்ள அமெரிக்கா பிரிட்டன் போன்ற நாடுகளுடன் சார்புள்ள அரசியற் கட்சிகள், இப்பிரச்சினையை டிகாலுக்கு எதிராக கொண்டுவரலாம். அதே நேரத்தில் டிகாலின் முடிவை ஆதரிக்கும் பெருந்தொகையில் பிரஞ்சு மக்களும் இருக்கவே செய்வர்.

டிடிகாலின் இன உணர்வுக்கும் துணிச்சலுக்கும் ஒரு சபாஷ் போடுவோமா?

அமெரிக்க சின்டிகேட்டின் கடைசித் தூணும் சரிந்தது

மத்தியப் பிரதேசத்தில் காங்கிரஸ் ஆட்சி தோல்வியடைந்து எதிர்க்கட்சிகளின் ஆட்சியேற்பட்டுள்ளது. காங்கிரஸ் கட்சிக்கு இது ஒரு பெரிய அடி.

இந்தியாவில் உள்ள 17 மாநில அரசுகளில் 9 அரசுகள் எதிர்க்கட்சி வசமாகி விட்டன. 8 மாநில அரசுகள் மட்டுமே காங்கிரஸ் கட்சியின் ஆதிக்கத்தில் உள்ளன. மத்தியில் ஆளும் கட்சியாக விளங்கினாலும் காங்கிரசுக்கு இது ஒரு மகத்தான தோல்வியே.

மத்தியப் பிரதேசத்தில் தோல்வியடைந்த காங்கிரஸ் முதல்வர் மிஸ்ரா மத்திய பிரதேச சட்டசபையைக் கலைத்து விடும்படி கூறிய யோசனையை காங்கிரஸ் தலைமைப் பீடம் நிராகரித்துவிட்டு ஆட்சி பொறுப்பை எதிர்க்கட்சிகளிடம் ஒப்படைக்க முடிவு செய்தது ஒரு நல்ல ஜனநாயமுடிவு. காங்கிரஸ் கட்சியின் மதிப்பையும், ஜனநாயக தாத்பரியங்களையும் இம் முடிவுகாப்பாற்றி விட்டது.

இன்று இந்தியாவில் குழப்பங்கள் இன்றி அமைதியாக ஆட்சி நடைபெறுவது தென்னக மாநிலங்களில்தான். வட இந்தியாவில் உள்ள மாநிலங்களில், ஆங்காங்கே குழப்பங்கள் மலிந்துள்ளன. அதிகாரத்துக்காக அடிக்கடி கட்சி மாறுவதும், உறுப்பினர்களைக் கடத்தி மறைத்துவைப்பதும் சகஜமாக நடைபெற்று வருகிறது.

மேற்கு வங்காளத்தில் 'நக்சல்பாரி' பிரச்சினை தீராத தலைவலியாக இருக்கிறது. [illegible] ராஜஸ்தானிலும் அமைதி கிடையாது.

இந்நிலைகளைப் பார்க்கும் போது இந்தியாவில் சனநாயகம் எவ்வளவு காலம் நிலைக்க முடியும் என்ற கேள்வி எழுகிறது.

காங்கிரஸ்கட்சி தோல்வியடையும் அதே நேரத்தில்அவ்விடத்தை நிரப்ப அகில இந்திய ரீதியில் வேறு ஒரு பலம் வாய்ந்த சனநாயகக்கட்சி கிடையாதிருப்பதால், சனநாயகத்துக்கு பயங்கர விபத்து ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகி வருகிறது.

இந்தியாவில் இராணுவ ஆட்சி ஏற்படும்என்று இரண்டு அமெரிக்க செனட்டர்கள் எச்சரிக்கை விடுத்திருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க செனட்டர்களின் எச்சரிக்கை உண்மையாகக் கூடிய சாத்தியக்கூறுகள் நிறைய இருக்கின்றன. இந்தியாவில் தொடர்ந்தும் குழப்பங்களும், அராஜகர்களும் ஏற்படுமானால் ஒரு இராணுவப் புரட்சி ஏற்பட்டே தீரும்.

இராணுவப் புரட்சி யேற்படுவதிலிருந்து இந்தியா தப்பிப்பிழைக்க வேண்டுமானால் காங்கிரஸ் கட்சிக்கு எதிராகவுள்ள கட்சிகளெல்லாம் சேர்ந்து அகில இந்திய ரீதியில் பலம் வாய்ந்த ஒரு கூட்டு முன்னணியை அமைத்துக்கொள்ள வேண்டும்.

இதுவும் இன்று சாத்தியமல்ல. காரணம் அவற்றின் கொள்கை ஒன்றுக்கொன்று மாறுபட்டிருப்பதுதான். முரண்பட்ட கொள்கைகளைக் கொண்ட கட்சிகள் கூட்டு முன்னணி அமைத்து மாநில அரசாங்கங்களில் குழப்ப நிலைமையும், பலத்த கருத்து மோதல்களும்ஏற்பட்டுள்ளன.

மத்திய பிரதேச ஆட்சி தீவிர வலதுசாரிகளின் கைக்குப் போய் இருக்கிறது. ம. பிரதேசம் தீவிர வலதுபக்கம் திரும்பியதின் விளைவைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

மத்தியபிரதேச மாஜி முதல்வர் திரு. மிச்ரா டில்லி ஆட்சியை முன்பு ஆட்டிப்படைத்த 'அமெரிக்கக் குழந்தைகள்" என்று கூறப்பட்ட பழைய 'சின்டிகேட்டின்' உறுப்பினர். சின்டிகேட்டின் உறுப்பினர்கள் அனைவரும் வீழ்ச்சியடைந்து விட்டனர். மிச்ரா மட்டும் எஞ்சியிருந்தார். அவரும் வீழ்ச்சியுற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபாலகிருஷ்ணன் ஸ்ருடியோ கட்டுகிறார்

ஸ்டுடியோ கட்டுகிறார் டைரக்டர் கே. எஸ். கோபாலகிருஷ்ணன்.

கற்பகம்

"கற்பகம்" என்ற படம் டைரக்டர் கே. எஸ். கோபாலகிருஷ்ணனுக்கு புகழ்தந்த படம் என்பது தேரிந்ததே.

ஆகவே 'கற்பகம்' என்ற பெயரிலேயே "ஸ்டுடியோ" ஒன்றை சென்னை கோடம்பாக்கத்தில் உருவாக்குகிறார்.

படப்பிடிப்பு நிலையம்

இப்போது பாட்டு பதிவு செய்யும் அறையும், படம் போட்டுப் பார்க்கும் கூடமும் உருவாக்கப்பட்டு உள்ளது. தொடர்ந்து படப்பிடிப்பு நிலையமும் அமைக்கிறார். சகல வசதிகளும் உள்ளதாக படப்பிடிப்பு நிலையத்தை உருவாக்கி திட்டமிட்டு வேலைநடக்கிறது.

சரோஜாதேவியின் கனவு பலித்தது

"பக்தையாக நடிப்பதால் கனவு பலித்தது" என்று பரவசம் அடைந்தார் சரோஜாதேவி.

ஸ்ரீலலிதகலாமந்திர் படப்பிடிப்புக் கம்பெனியினர் "ஸ்ரீ சங்கரர்' என்ற படத்தை தயாரிக்கிறார்கள். இதில் சரசுவதி வேடத்தில் நடிக்கிறார் சரோஜாதேவி. பக்திப்படம் ஒன்றில் சரசுவதி வேடம் தாங்கி நடிப்பது பற்றி சரோஜாதேவி கூறியதாவது:—

'எனக்கு சிறு வயது முதல் சிருங்கேரி சாரதா மடத்தில் உள்ள ஸ்ரீசாரதாதேவி (சரசுவதி) மீது அளவு கடந்த பக்தி உண்டு. சாரதாதேவியின் வேடம் தாங்கி எப்போது நடிப்பேன் என்றுகனவுகண்டு வந்தேன் அந்தக் கனவு இப்போது நிறைவேறி விட்டது. என் இதயத்தில் குடிகொண்ட சாரதாதேவி வேடம் தாங்கி நடித்து பக்தியை வெளிப்படுத்த வாய்ப்பு கிடைத்து விட்டது!' என்று கூறினார்.

அந்தப் பர-தேசி யார்?

சென்னை நுங்கம்பாக்கத்தில் ஒரு வீடு. அதற்குள்ளே தூசி படிந்த ஒரு அறை. அந்த அறைக்குள்ளே தாடி முளைத்த ஒரு பித்தன்!

வாழப் பிறந்தவன் அவன், நாளைக்குஒரு காரும் வேளைக்கு ஒரு உடையும் மாற்றும் வசதி படைத்தவன். ஆனால் அதற்கும் கொடுத்துவைக்க வேண்டுமல்லவா? துன்பம் அவனைத் தொடர்ந்தது. அவன் மீது உயிரையே வைத்திருந்த அவன் மனைவி உயிரை விட்டு விட்டாள். அவள் பெற்ற குழவியும் மாண்டது. மறுமணம் அவன் வாழ்வை மலரச்செய்யவில்லை. அவளும் போனாள். அவன் அப்பனும் போனான். இடிமேல் இடி. அவன் சினிமாக் கம்பெனி நடத்த முற்பட்டான். அண்டிவந்த அவன் நண்பன் அவனை ஆண்டியாக்கி விட்டு தானும் போனான்.

எல்லாம் இருந்தது. ஆனால் இப்போது எதுவும் இல்லை. மனத்திலே அமைதி அழிந்தது. உயிர் போகவில்லை.

மனம் வெறுத்து அன்ன ஆகாரமின்றி, அந்த அறையிலே அவன் உண்ணாவிரதம் ஆரம்பித்தான். கந்தல் ஆடைகள், ஒட்டிய வயிறு, குழி விழுந்த கண்கள், பரட்டைத் தலை. யாராவது அவனைப் பார்த்திருந்தால் 'ஓ' என்று அலறியடித்துக்கொண்டு ஓடி இருப்பார்கள்.

பசி அவனை வாட்டியது; மனம் இறைவனைத் துதித்தது.

வாய் திறந்து மூடியது. இதயத்தின் அடித்தளத்திலிருந்து நாதவெள்ளம் பிரவாகித்தது. அங்கே திருப்பதி வெங்கடாசலபதி வந்தார். ராமபிரான் வந்தார். கண்ணன் வந்தார். பக்தனின் அபயக்குரல் கேட்கும்போது வருவதைத் தவிர வேறென்ன வேலை அவர்களுக்கு?

இவர்களோடு...

ஹட்சின்ஸ் இசைத்தட்டுக் கம்பெனி முதலாளி அச்சுத நாயுடுவும் வந்தார்.

ஏதோ வேலையாக அந்தப் பக்கம் சென்ற அச்சுதநாயுடுவும் "கேட்ட குரல் போலிருக்கிறதே!' என்று நினைத்து அங்கிருந்தவர்களை விசாரித்து விட்டு உள்ளே போக, அங்கே தன்னை மறந்து கானம் பொழியும் அந்தப் பரதேசியைக் கண்டார். கண்ணீர் வடித்தார். கையோடு அழைத்து வந்து ஆதரித்தார்.

அந்தப் பரதேசி யார் தெரியுமா? நடிப்புக்கு இலக்கணம் வகுத்தவர் என்று பாராட்டக் கூடிய குணசித்திர நடிகர் சித்தூர் வி. நாகையாதான்.

சௌகார்ஜானகியின் "ஆலிவுட் ஆயில்"

சௌகார் ஜானகியின் வீட்டுக்குநாட்டுப் புறத்தார் ஒருவர் அவரைப் பார்க்க வந்திருந்தார்.

இருவரும் பேசிக் கொண்டு இருக்கையில் சௌகாரின் முகத்தில் ஏதோ எண்ணெய் தடவப்பட்டது போலிருந்ததைக் கவனித்த அவர் 'நான்

வரும் போது எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்குச் சென்று கொண்டு இருந்தீர்களா?' என்று கேட்டார்.

அதற்கு சௌகார் 'இல்லையே' என்று கூறினார்.

'உங்கள் முகத்தில் எண்ணெய் இருக்கிறதே!' என்றார் வந்தவர்.

'ஓ...அதுவா....! அது ஆலிவ் ஆயில்!' என்று சௌகார் ஜானகி கூறியவுடன் அவர் ஆச்சரித்துடன் "ஆலிவுட் ஆயிலா! நீங்கள் தருவித்தீர்களா! என்று கேட்டார்.

சௌகார் ஜானகிக்குச் சிரிப்பு பொறுக்க முடியவில்லை சிரித்துக் கொண்டே, ஆலிவ் ஆயில்! ஆலிவுட் ஆயில்இல்லை: என்று கூறினார்.

தன்னுடைய அறியாமையை நினைத்து வந்தவருக்கு வெட்கமாகப் போய்விட்டது.

'அவருடைய முகம்வாடிவிட்டதைக் கவனித்த சௌகார் ஜானகி 'நீங்கள் சொல்வதும் கூட ஒரு வகையில் சரிதான். முகம் பளபள என்றிருப்பதற்காக இந்த ஆலிவ் ஆயிலைத் தேய்த்துக் கொள்வது வழக்கம். அநேகமாக இந்த ஆயிலை சினிமா நட்சத்திரங்கள் தான் தேய்த்துக் கொள்வார்கள். ஆலிவுட், சினிமாத் தயாரிப்புக்குப் பெயர் பெற்ற இடம். அதனால் அங்கு அதிக அளவில் உபயோகப்படுவதும் ஆலிவ் ஆயிலை ஆலிவுட் ஆயில் என்று நீங்கள் கூறியது சரிதான்' என்றுசமாதானமாகக் கூறியவுடன் வந்தவர் 'இடி இடி' என்று சிரித்தார். அவருடைய முகத்தில் சிறிது நேரத்திற்கு முன்னால் வழிந்து கொண்டிருந்த அசடு மறைந்து வெற்றியின் சாயல் படர்ந்தது.

வாத்தியாரம்மாள் மாணவியான அதிசயம்

இலட்சுமி ஒரு வாத்தியாரம்மாள். அவளுடைய வீட்டிலே குடியிருந்தான் ரவி என்ற வாலிபன். அவன் சர்க்கார் வேலை பார்ப்பவன்.

கீழ் வீட்டில் ரவி-மேல் வீட்டில்லெட்சுமி! ஆனால், மேலும் கீழும் பார்க்கிறதா காதல்! லெட்சுமியின் கண்கள் கீழ் நோக்கின-ரவியின் கண்கள் மேல் நோக்கின. ஒன்றையொன்று கவ்வின.

அதன் விளைவு தோட்டத்தில் இருவரும் சந்தித்தனர்.

கிளார்க் வேலை பார்ப்பவன் போலும் ரவி. லெட்சுமியின் கன்னத்திலேயே எழுதட்டுமா என்று பாடினான். அதாவது:-

'எழுதட்டுமா எழுதட்டுமா
ஏடுபோன்ற கன்னத்திலே
எழுதாத காவியங்களை
எழுதட்டுமா எழுதட்டுமா'?

என்று பாடினான்.

வாத்தியாரம்மாள் லெட்சுமியோ ஒரு மாணவியாகி விட்டாள்.

'படிக்கட்டுமா
படிக்கட்டுமா
பார்த்து நின்ற
பார்வையிலே
படிக்காத பாடங்களைப்
படிக்கட்டுமா
படிக்கட்டுமா?'

என்று பாடினாள்.

இந்தக் காதற்காட்சி, சாந்தி மூவீஸாரின் 'குடும்பம் ஒரு கோயில்' படத்திற்காக சாரதாவில் மூன்று நாட்களாகப் படமாக்கப்பட்டது.

பாடலை வாலியும் இசையை விஸ்வநாதனும் அமைத்திருந்தனர்.

மற்றும் எஸ். வி. ரெங்கா ராவ், கே. ஏ. தங்கவேலு, எம். சரோஜா, நாகேஷ், மனோரமா, பேபி மகாலெட்சுமி, ஜி. சகுந்தலா ஆகியோரும் நடிக்கின்றனர்.

படமாக்கப்பட்ட காதற் காட்சியில் ஜெமினி கணேசனும் தேவிகாவும் நடித்தனர்.

கதை-உரையாடல்களை மா. லெட்சுமணன்எழுதியுள்ளார். ஜி. ராமகிருஷ்ணன் டைரக்ட் செய்கிறார்.

இன்னும் இரண்டு மாதங்களில் [illegible] திரையில் எதிர் பார்க்கலாம் என்று உறுதியுடன் கூறப்படுகிறது.

திரைவாணன் பதில்கள்

ஆர். பாலகிருஷ்ணன்
மாத்தனை

கே: சிவாஜிகணேசனும் ராஜசுலோசனாவும் எந்தப் படத்திலாவது ஜோடியாக நடித்திருக்கிறார்களா?

ப: நீங்கள் 'படித்தால் மட்டும் போதுமா' பார்க்கவில்லையா?

கே: அதிகமான வர்ணப் படங்களில் நடித்தவர் சிவாஜியா, எம். ஜி. ஆரா?

ப: சிவாஜிதான்!

ஜே. சூட்டி
கருக்குப்பனை

கே: சிவாஜி அண்ணனின் விலாசம்?

ப: 11, போக்ரோடு, சென்னை, 17

கே: எம். ஜி. ஆரை விட சிவாஜி அண்ணன் நல்லவர் தானே?

ப: என்னைப் பொறுத்த வரை இருவருமே நல்லவர்கள் தான்!

கௌசல்யா
யாழ்ப்பாணம்

கே: கே. ஆர். விஜயாவின் முகவரி என்ன?

ப: 'முதல்மெயின் ரோடு ராமகிருஷ்ணாநகர், ராஜா அண்ணாமலைபுரம், சென்னை-26

மா. குலேந்திரன்
இரத்மலானை

கே: அன்பே வா தமிழகத்தில் 25 வாரங்கள் ஓடிய படமா?

ப: ஆம், சென்னை காசினோ தியேட்டரில் 25 வாரங்கள ஓடியது.

சு. மனோகரன்
இறத்தோட்டை.

கே: 'அரசகட்டளை' சென்னையில் 10 நாட்கள் கூட ஓடவில்லையே, இந்தப்படுதோல்விக்குக் காரணம் என்ன?

ப: இராசா, இராணிக் கதைகளை இக்கால இரசிகர்கள் விரும்பாதது தான்!

கே: பட்டணத்தில் பூதம் தமிழ் நாட்டில் வெள்ளி விழாக் கொண்டாடுமா?

ப: கொண்டாடலாம்!

கே: அதேகண்கள், அன்பே வா, பட்டணத்தில் பூதம் என்னும் இப் படங்களில் எதற்கடுத்து எது சிறந்தது என வரிசைப்படுத்துங்கள் பார்ப்போம்.

ப: அன்பேவா, பட்டணத்தில் பூதம், அதே கண்கள்சரிதானா?

ஞா. சந்திரசேகரம்
ஏறுவூர்

கே: தங்கைபடம் பாலாஜியின் வெற்றிப்படமா?

ப: ஆம்.

ஏ, சி. எம். ஜிவா
சீனக்குடா

கே: கலைக்குரிசில் கணேசன் நடித்த 'ஊட்டிவரை உறவு' 'காலமெல்லாம்காத்திருப்பேன்' ஆகியவை என்னவாயின?

ப: 'ஊட்டிவரை உறவு' முடியும் தறுவாயிலுள்ளது. ஆகஸ்ட் 15ல் திரையிட முயற்சிகள் நடைபெறுகின்றன; 'காலமெல்லாம் காத்திருப்பேன்' இன்னும் சிறிது காலம் காத்திருக்க சொல்லுகிறது!

தாழையூர், 'நாகராஜன்'
தாளங்குடா

கே: சென்னையில் ஏற்பட்ட தீவிபத்துக்கு சிவாஜிகணேசன் உதவி செய்யாதது எம் போன்ற ரசிகர்களுக்கு வேதனையாக இருக்கிறது?

ப: உங்களைப் போன்றவர்களின் வேதனையை உணர்ந்து தான் போலும் சிவாஜிகணேசன் தீ விபத்து நிதிக்கு ரூபா 10,000 த்தை தமிழக முதலமைச்சரிடம் செலுத்தி விட்டாரே!

ஜே. ஈ. அரியரெத்தினம்
13, இங்கினியாகலை

கே: சிவாஜிபிக்சர்ஸாரின் 'ரகசியப் பெண் 117' என்னும் படத்தில் நடிகர்திலகம் சிவாஜி கணேசன் நடிக்கிறாரா?

ப: இல்லை.

கே: எம்.ஜி.ஆரின் சத்யாஸ்டுடியோவை நடிகர் திலகம் சிவாஜி கணேசன் வாங்கி அதை சாந்தி ஸ்ருடியோவாக மாற்றப் போகிறாரென குணசேனப் பத்திரிகை யொன்று செய்தி வெளியிட்டதே இச் செய்தியை யாவது நம்பலாமா? அல்லது இதுவும் ஒரு சிலோன் வெடிப் புழுகா?

ப: இதுவும் ஒரு புழுகுதான்! சத்தியா ஸ்டுடியோவின் ஒரு பகுதியை எம். ஜி. ஆர். விற்றது உண்மை! ஆனால் சிவாஜி அதை வாங்கவில்லை. வாங்காத போது சத்தியா ஸ்டுடியோ எப்படி சாந்தி ஸ்டுடியோவாக முடியும்?

எஸ். மக்கள்தாசன்
உருத்திரபுரம்

கே: எம். ஜி. ஆர். பிக்சர்சின் சொந்தத்தயாரிப்பான அடிமைப் பெண்ணை மக்கள் திலகம் ஸ்டுடியோவை விட்டு வெளிவிடாமல் இருக்கின்றாரே ஏன்? எப்பொழுது வெளியிடுவார்?

ப: 1968 ம் ஆண்டுப் பொங்கலுக்கு அடிமைப் பெண்ணை விடுதலை செய்யப் போவதாக எம். ஜி. ஆர். அறிவித்திருக்கிறாரே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நால்வருடன் விஜயா பெற்ற முதல் அனுபவம்

மக்கள் திலகம் எம். ஜி. ஆருடன் நான் தேவர் பிலிம்சாரின் தொழிலாளி படத்தில் நடித்தேன். பல ஆண்டுகளாக பல வேடங்களில் எண்ணிக்கையற்ற படங்களில் நடித்து கலை வாசலில் நிலையாக நிற்கும் அவர் புதிய கலைஞர்களுக்கு ஆசானாகத் திகழ்வதுதான் நான் அவரிடம் கண்ட முதல் அனுபவம்.

முதன் முதலில் அவருடன் நடிக்கப் போவதையிட்டு,

என் உள்ளம் எல்லையில்லா இன்பத்தில் மிதந்தது. ஒப்பனையுடன் படப் பிடிப்பு நிலையத்துள் நுழைந்ததும், என்னையறியாமல் என்னுள் பயம் பிறந்தது. அவர் பார்த்த பார்வையும், பழகிய முறையும் என் பயத்தை இருந்த இடம் தெரியாமற் செய்துவிட்டது. தொழிலில் ஏற்றத் தாழ்வுகள் இல்லை அனுபவம்தான் புதுமை என்பதை அவர் செயலில் கண்டேன். மக்கள் திலகம் தென்னகக் கலைக்கோயிலின் தங்கக் கவசமாக என்றும் என்னுள் காட்சியளித்துக் கொண்டிருக்கிறார்.

●

நடிகர்திலகம் பத்மஸ்ரீ சிவாஜி கணேசனுடன் நான் நடித்த படம் 'கை கொடுத்த தெய்வம்'. அவருக்கு தங்கையாக நடித்தேன். நடிப்புலகில் பல பட்டங்கள் பெற்று சிறந்து விளங்கும் அவர் பார்ப்பதற்கு பசுவாக — பலருக்கு நடிப்புலகில் குருவாக திகழ்

வதை நான் அவரிடம் கண்டேன்.

'கை கொடுத்த தெய்வம்' படத்தில் எனக்குஅவர் பின்னல் போடும் காட்சியை இப்பொழுது நினைத்துப் பார்த்தாலும், உடன் பிறவா ஒரு அண்ணனாக அவர் காட்சியளிக்கிறார். திரு. சிவாஜி கணேசன், கலைக் குடும்பத்தின் கண்களாக என் உள்ளத்தில் காட்சியளித்துக்கொண்டிருக்கிறார்.

●

நடப்பதெல்லாம் நன்மைக்கே என்னும் எண்ணம் கொண்டு, நாமெல்லாம் ஒரே குடும்பம் நமக்குள் பிரிவுகள் இல்லை. நாம் காண்பது கலையை அதில் குறைகள் இல்லாதிருக்கவேண்டும் என்று கலை வழியில் செல்பவர் திரு. ஜெமினி கணேசன்.

எனக்குப் புகழ் தந்த கற்பகம் கதா பாத்திரத்தை ஏற்று நடித்த முதல் படத்தில் அவருடன் நான் நடித்த போது எனக்கு புது அனுபவம் அல்லவா?

எதிரில் இருப்பவரின் எண்ணம்தான் பக்கத்தில் இருப்பவரின் செய்கையாகிறது என்பதைத்தான் அவரிடம் முதன்முதலாக கண்டேன். நான் புதியவள் என்ற எண்ணத்துடன் கற்பகம் படத்தில் நடிக்கச் சென்றபோது அவர் பார்த்த பார்வை "ஏற்றத் தாழ்வுகள் என் உள்ளத்தில் இல்லை; நீயும் நானும் கலைத் தாயின் செல்வங்கள்" என்னும்பொருள் கண்டேன். புதியவள் என்று என்னுள் எழுந்துநின்ற அச்சம் என்னை விட்டு மறைந்தது.

நடிக்கும்பொழுது 'செட்டில்' இவர் தன்னுடன் நடிப்பவர்களையும் சிரிப்பில் ஆழ்த்திச் சுறுசுறுப்பாக இருக்கும்படி செய்வார். இது இவருடைய குணம்.

செய்யும் தொழிலே தெய்வம், அதில் வரும் சிறப்பே

'மகாகவி காளிதாஸ்' படத்தில் பத்மஸ்ரீ சிவாஜிகணேசன்

பெருமை என்னும் எண்ணத்தில் கலைத்தாயின் செல்மகளாக என் உள்ளத்தில் என்றும் காட்சியளித்துக்கொண்டிருப்பவர் திரு. ஜெமினி கணேசன்."

●

அவரே சொல்கிறார்

இலட்சியநடிகர் எஸ்.எஸ். இராசேந்திரனுக்கு ஆண்டவன் அளித்த அழியாச்செல்வம் சிரித்த முகம். அதைக்கொண்டே மற்றவர்களின் துன்பத்தைப் போக்குவதில் வல்லவர். நடிப்புலவாழ்க்கையில் நாமெல்லம்க ஒரே குடும்பம் என்பதே அவர் செயலில் நான் கண்ட உண்மை.

அவருடன் நான் நடித்த முதற் படம் 'கை கொடுத்த தெய்வம்' வெள்ளை உள்ளம் கொண்ட அவர் நடிப்பிலும் நடைமுறை வாழ்க்கையிலும் நல்லவராகவே திகழ்ந்து கொண்டிருக்கிறார். அவரிடம் குழந்தையுள்ளத்தைத்தான் நான் கண்டுவருகிறேன்.

கலைக்கடலில் மிதந்து வரும் கப்பல்களுக்கு கலங்கரை விளக்கத்தைப்போல என்றும் என் உள்ளத்தில் காட்சியளிப்பவர் திரு. எஸ். எஸ். ஆர்."

தமிழ்த் திரையுலகில் [illegible] கொண்டிருக்கும் [illegible]

ராஜஸ்ரீ-காஞ்சனா ஒற்றுமைகள்

"காதலிக்க நேரமில்லை" படம் ஒன்று சேர்த்த இரு உள்ளங்கள் எவை தெரியுமா?

முத்துராமனின் ஜோடியாக நடித்த காஞ்சனாவும், ரவிசந்திரனின் ஜோடியாக நடித்த ராஜஸ்ரீயும்தான்!

காஞ்சனாவுக்குக் 'காதலிக்க நேரமில்லை' படம் பெருமளவில் புகழைத் தேடித் தந்திருந்தாலும் அது அவருக்கு முதல் படமல்ல. காஞ்சனா சின்னஞ் சிறுமியாக இருந்த போதே 'மல்லீஸ்வரி' என்ற படத்தில் தோன்றி நடனம் ஆடியிருக்கிறார். காஞ்சனாவின் குடும்பப் பெயர் 'வசுந்தராதேவி' பிறகுதான் வானவெளியில் விமானப் பணிப் பெண்ணாகப் பறந்து படவுலகில் நுழைந்து இப்போது திரைவானில் பறக்கிறார்!

இன்னொரு சம்பவம், 'காதலிக்க நேரமில்லை' படத்தின் ஷூட்டிங் நடந்து கொண்டிருந்தசமயம் ஒரு தினம் எதிர்பாராத விதமாக வாஹினி ஸ்டூடியோவில் சரோஜாதேவியை இவர் சந்திக்க நேர்ந்தது. அப்போது சரோஜாதேவி இவரிடம் "சினிமா வானிலும் நீ கொடிகட்டிப் பறக்கலாம்" என ஆசீர்வதித்திருக்கிறார். இதேபோல பட்டு பிலிம்ஸ் 'நீலவானம்' படத்தில் நடிக்கும்போது பத்மஸ்ரீ சிவாஜியிடம் ஆசீர்வாதம் பெற்ற பெருமையும் ராஜஸ்ரீக்கு உண்டு.

காஞ்சனா, ராஜஸ்ரீ இருவரும் வசிக்குமிடம் மாம்பலம். இருவருடைய தாய் மொழியும் தெலுங்கு! காஞ்சனாவுக்குத் தங்கையிடம் உயிர். ராஜஸ்ரீக்கு அக்காவிடம் பாசம் அதிகம்.

புராணப் படமான "வீர அபிமன்யு,வில் காஞ்சனாவுக்கு உத்தரை வேடம், "பூம்புகாரி"ல் ராஜஸ்ரீக்கு மாதவி வேடம்! இருவருக்கும் இன்னொரு ஒற்றுமை என்னவென்றால் பல படங்களில், பலதரப்பட்ட குணசித்திர

பாகங்களை ஏற்று நடித்துவருவதாகும். இருவருடைய அபிப்பிராயமும் நடிகை என்றால் அவர்பலவிதமான குணசித்திரங்களைப் பிரதிபலிக்கும் பாத்திரங்களை ஏற்று நடிக்க வேண்டும் என்பதாகும்!

"காதலிக்க நேரமில்லை" படம் தமிழ், தெலுங்கு, ஹிந்தி, ஆக மூன்று மொழிகளிலும் தயாரிக்கப்பட்டது; மூன்றிலும் நடிக்கக்கூடிய பெருமையைப் பெற்றவர், ராஜஸ்ரீ.

அதேபோல 'வீரஅபிமன்யு' படத்தின் தமிழ், தெலுங்கு, இரண்டுபாஷை படங்களிலும் நடித்த பெருமை காஞ்சனாவுக்கும் உண்டு!

இருவரும் இணைபிரியா சிநேகிதிகள்!

திரை விமர்சனம்.

கறுப்புப் பணம்

அரசாங்கத்தை ஏமாற்றி கறுப்புப்பணத்தைப் பதுக்கி வைக்கும் சில சமூக விரோதிகள், அவர்களின் கறுப்புப்பணத்தை திருடி ஏழைகளுக்கு வாரிவழங்கும் ஒரு வள்ளல்; இவர்களை வைத்துப் பின்னப்பட்ட கதைதான் "கறுப்புப் பணம்"

அரசாங்கத்தையும், சமூகத்தையும் ஏமாற்றி சுரண்டிவாழும் பணக்கார முதலைகளுக்கு நல்ல அடி கொடுக்கும் படம் இது.

இதன் தயாரிப்பாளர், கவிஞர் கண்ணதாசன். அவர் இதில் நடிக்கவும் செய்கிறார். சொல்லப் போனால் அவர்தான் கதாநாயகன்; வள்ளல் தணிகாசலமாக வருகிறார். அவரே உரையாடல்களையும் பாடல்களையும் எழுதியிருக்கிறார். பொருள் பொருந்திய வசனங்கள்!

பாலாஜி, விஜயா, காதலர்கள்.

பாலையா, சாரங்கபாணி, குலதெய்வம் ராஜகோபால் இருக்கும் போது சிரிப்புக்குப் பஞ்சமேது!

பாடல்கள் இனிமையாக உள்ளன.

சிறந்த பொழுது போக்குப் படமான 'கறுப்புப்பணம்' இப்போது கொழும்பு ஜெசிமாதிரையில் 2வது வாரமாக காட்சிதருகிறது.

பத்மினிக்கு எம். ஜி. ஆர். விருந்து

சென்னைக்கு வந்த ரஷிய சினிமா குழுவினர்களுக்கு எம். ஜி. ஆர். சிறப்பான முறையில் வரவேற்பளித்து ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் விருந்து நடத்தினார்.

இந்த விழாவுக்கு சினிமா அதிபர் ஏவி. மெய்யப்பசெட்டியார் தலைமை வகித்தார். எம். ஜி. ஆர். வீரப்பன் எல்லோரையும் வரவேற்றார்.

எம். ஜி. ஆர். ரஷிய நடிகர்களுக்கு ஒரு வெள்ளித்தட்டில் திருக்குறள் புத்தகத்தை வைத்து பரிசாகக்கொடுத்தார். தந்தத்தால் செய்த கோயில் பொம்மைகளும் கொடுக்கப்பட்டன.

வரவேற்புக்குப்பிறகுநடந்த விருந்தில் மாம்பழம் பரிமாறப்பட்டது.

விருந்தில் நடிகை பத்மினியும் கலந்து வரிசையில் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு மாம்பழத்தை எடுத்துக் கொண்டுவந்து தோல்களைச் சீவிவிட்டுஎம்.ஜி.ஆரே.நறுக்கி பத்மினியின் தட்டில் போட்டார். பத்மினி அந்த மாம்பழத்துண்டுகளை எடுத்துக் சுவைத்துச் சாப்பிட்டார்.

எம். ஜி. ஆரும் பத்மினியும் ஒருவரையொருவர்பார்த்துச் சிரித்துக் கொள்ளவும் செய்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த வாரம் உங்களுக்கு வெற்றியா?

திருமதி. அன்னலெட்சுமி மானிக்கம்

5-8-67—12-8-67

மேடம்

இன வழியில் மனஸ்தாபம். காலில் வலி. முரணான வழிகளில் குடும்ப நிலை மாறுதல் அடைதல். செல்வம் சீர் கெடுதல். பிள்ளைகளினால் நன்மை தோன்றல். பிரயாணம், கைப் பொருள் செலவாகுதல். நன்றி மறப்பது வாழ்க்கையில் திருப்பம். அயலவருடன் பகை கொள்தல். கிழமையின் இறுதியில் திரவியப் பேறும் சுகமும் உண்டு.

இடபம்

இளைய பெண் சகோதரத்தினால் மகிழ்ச்சி. தீர்மானம் மனதிற்கு விருப்பக் குறைவை உண்டாக்குதல். பெரியவர்கள் ஈடு. ஒற்றுமையை நிலைநாட்டுதல். சென்ற காலம் நிகழ்ந்த கருமம் திடம்பவும் மனதைச் சோக முண்டாக்குதல். பெற்றாரின் வருகை சந்தோஷம். வெற்றி ஈற்றில் உண்டு. குடும்ப அன்னியோன்னிய வழி நன்மைபயக்கும்.

மிதுனம்

நிலையற்ற மனம். பெரியவர்களின் ஆசி. தெய்வ வழிபாடு கல்வியிலும், தொழிலிலும் உன்னத நிலையடைதல். உறவினர் உதவி கோரல். பொது விஷயங்களில் அயராத சுறுசுறுப்பு. நன்மைபயக்கும் கருமங்களில் செலவு அதிகம். வறுமை அகலுதல். பொன், பொருள் சேருதல். பிரயாணம் சென்றவிடத்தில் மதிப்பு நற்சுகம். வல்திரலாபம் உண்டு.

கடகம்

அவமானம். வியாபார முனேற்றம். அந்நியரின் தொல்லை. நிலைமாறுதல். களத்திர சுகம். பிள்ளைகளின் உதர நோய். சினேகிதர் விரோதம். வருமான முறையில் புதிய முறை கையாளுதல். வசிக்குமிடம் புதுப்பித்தல். வாகன முடை, சகோதர மனமிடி. உற்றநேரத்தில் நம்பிக்கை இழத்தல். திடமான தோற்றமுண்டு.

சிங்கம்

கலை விருத்தி. போசனசுகம், வயிற்றில் ரோகம். நினையாப் பிரகாரமாக மற்றவர் களை அனுசரித்து உதவி கொடுத்தல். பெரியோர் சன்மானம். குடும்பத்தில் மகிழ்வு. வாகன விருத்தி. செய் தொழிலில் லாபம். அந்நியரின் உறவு. கெடுதியென எண்ணிய கருமம் மகிழ்ச்சி கொடுத்தல். இளைய சகோதரத்தினால் போற்றல். பொன் ஆபரணம் வாங்குதலும் உண்டு.

கன்னி

வரவின் மிஞ்சிய செலவு. பிள்ளைகளினால் மனஸ்தாபம். இல்லச்சூறை. சினேகிதரின் உதவி. எதற்கும் மனம் தளராமை. வருமானப் பெருக்கு வசிக்குமிடத்தில் நாற்கால் ஜெந்துக்களினால் பயம். பொருட்கள் சேகரித்தல். நடை பாதையில் விழுந்து நோவடைதல். கிழமையின் முடிவில் அதிஷ்டமுண்டு.

துலாம்

நிலையான இடமின்மை. பொருள் விரயம். குடும்பத்தில் பிள்ளைகளின் சேர்க்கை விஷயம். மனை மாற்றம். மிருகத்தின் உதவியால் பொருள் கையில் கிடைத்தல். பெண் பாலரின் பொருள் உதவி வீணே காலம் கடத்தல். தருணத்தில் நம்பிக்கை தளராமை. தெய்வ உதவியுண்டு.

விருச்சிகம்

இல்லற வாழ்வில் கசப்பு. முடிந்த விஷயத்தை முன் வைத்து உறவினரைப் பகைத்தல், பிள்ளைகளினால் மனஞ் சந்தோஷமடைதல். கடன் தொல்லை. பொருளைக்குறித்து இடையறு யோசனை. தொழிலில் முன்னேற்ற மின்மை. நாள் பட்ட நோய் சிறிது தோன்றல். மருந்துண்ணல். கிழமையின் முடிவில் அந்நிய தேசமிருந்து மகிழ்வானவிஷய மறிதல். வெற்றியுமுண்டு.

தனு

பெற்றார் சுகக்குறைவு. வியாகூலம். தொழில் ஊக்க மிகுதி. வியோதியரின் தொல்லை. சினேகிதருள் விசுவாசம்குறைதல். வாகனத்தினால் துன்பம். உறவினர் தருணத்தில் உதவுதல். அன்னியர் உறவு கொண்டாடுதல். பிரயாணத்தில் சுகம். எவ்வித துன்பமும் மனதைப் பாதிக்காமை. அதிகாரம். செழிப்பு. ஆறுதல் உண்டு.

மகரம்

பந்துக்கள் கூட்டம். குடும்ப மகிழ்ச்சி. அதிஷ்ட லாபம். பிள்ளைகளின் மகிமை. பெற்றார் அகமகிழ்வு. பொதுக் கருமத்தில் ஈடுபடுதல். பிரயாணம். ஆரோக்கியச்சிதைவு மனதிலிருப்பதை இளைய சகோதரத்தினருக்கு அறியச் சொல்லல். எதிர்கால வாழ்க்கை வழி தேடல் உண்டு.

கும்பம்

ஜலதோஷம். குடும்பத்தில் சச்சரவு. எண்ணிய கருமங்கள் கைகூடாமை. பெற்றாரின் வெறுப்பு. தெய்வ வழிபாட்டில் மனக் குறை. எல்லாம் திருப்திக் குறைவு. பெரியவர்களின் ஆசி. செல்வச் சிதைவு. வாங்கிய பொருளைக் கொடுக்கத் தவணை தப்புதல் உண்டாம்.

மீனம்

சந்தோஷம். அன்னியர் சகவாசம் முதலிடம் பெறுதல். நிலைபேறு. அதிகாரம். செய் தொழில் நன்மை பயக்கல். வீரியம். வெற்றி. பிரயாணத்தில் மகிழ்ச்சியடைதல். சுகம். போசனப் பிரியம். பெற்றாரினதும், குடும்பத்தினதும் அன்பளிப்பு. பிள்ளைகளினால் நன்மையுமுண்டு.

ஆட்டிப்....

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

பிடித்தல் கடினம். ஆனால் நாளாக இருக்கும் நோயில் குழல் போன்ற இருதய அமைப்பைக் காணலாம். மேலும் க்ஷய நோய், நுரையீரல் புற்று நோய் போன்றவற்றையும் அறியலாம்.

குணப்படுத்தும் முறை

1. தடுப்பு முறை—நோய் வர ஏதுவான காரணத்தை அறிய வேண்டும். மனோநிலை மாற்றத்திற்கு ஓய்வும், தூக்கத்திற்கு பினோபார்பிடோன் போன்ற மாத்திரைகளும் கொடுக்கலாம்.

அலெர்ஜிக்குக் காரணமான பொருளைக் கண்டுபிடித்து, அதை நோயாளி உண்ணுவதிலிருந்தோ அல்லது சுவாசிப்பதிலிருந்தோ தடுக்கவேண்டும்.

2. சிகிச்சை முறை-நோயினால் கஷ்டப்படுபவர்கள் மருத்துவரை நாடல் அவசியம். மருத்துவர் நோயின் தன்மைக்கு ஏற்ப, அட்ரினலின் ஊசி மருந்தை ஏற்றுவார்.

என்ன இருந்த போதிலும், இந்நோயாளிகளுக்குப் பூரண சிகிச்சை இல்லாததால், அவர்கள் எவ்வாறு இந்த நோயோடு தங்கள் வாழ்நாளைத் துன்பமின்றிக் கழிக்கலாம் என்று கற்றுக்கொள்ளுதலே நலம்.

—'நல்வழி'

பாலூட்டும் தாய்மாருக்கு

தாயின் உடல் நிலையும் மன நிலையும் குழந்தையைப் பாதிக்கும். மனக் கவலை, தூக்கமின்மை, அதிகமான வீட்டு வேலை முதலியவற்றால் அவதியுற்றால், பால் நன்றாகச் சுரக்காது.

தாய் எவ்வளவு சாப்பிடுகிறாள் என்பதைவிட என்னசாப்பிடுகிறாள் என்பதுதான் முக்கியம். சத்துள்ள ஆகாரங்களைச் சாப்பிடுவது அவசியம். புழுங்கல் அரிசிச்சோறு, பருப்பு, பழங்கள், காய்கறிகள், கீரை முதலியவை உணவில் சேர்க்கப்படவேண்டும். பசும்பால் பருகுவது நல்லதுதான். ஆனால் அதையும்விட போதுமான தண்ணீர் குடித்தல் அவசியம். மலச்சிக்கல் இல்லாது பார்த்துக்கொள்ளவேண்டும். வாயுப் பதார்த்தங்களை விலக்கவேண்டும்.

குழந்தைக்கு ஒரு மார்பில் குடிப்பது போதாமல் போகலாம். இரண்டு பக்கத்திலும் பாதிப்பாதி நேரம் ஊட்டுதல் நல்லது. குழந்தையால் பால் முழுவதையும் உறிஞ்சமுடியாவிட்டால், அதைக் கையால் அழுத்தியோ அல்லது அதற்குரிய பம்பினாலோ எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படலாம்.

தாய் படுத்துக்கொண்டு பால் கொடுப்பது சிறந்த முறையல்ல. ஒரு நாற்காலியிலோ, அல்லது சுவரில் சாய்ந்தபடியோ, சௌகரியமாக உட்கார்ந்துகொண்டு குழந்தையை மடியில் வைத்து மார்புடன் அணைத்தபடி ஊட்டவேண்டும்.

குழந்தை பால் குடிக்கத் தொடங்கிய ஐந்து அல்லது 10 நிமிடங்களில் பசி அடங்கி விடலாம். ஆயினும் அது மேலும் 10, 15 நிமிடங்களுக்கு சுவைத்தபடி இருக்க விரும்பும்.

குழந்தைக்கு இது சாப்பாட்டு நேரம்மட்டுமல்ல, உடற்பயிற்சி நேரமும் விளையாட்டு நேரமுமாகும். தாயும் அதனோடு விளையாடவேண்டும். நிம்மதியாக, மகிழ்ச்சியாக இருக்கவேண்டும்.

மரண தேவன் வருகின்றான்

கவிஞர். செ. சுந்தரம்பிள்ளை

மரண தேவன் வருகின்றான்
மனிதா மமதை கொள்ளாதே
சரணம் சரணம் என்றாலும்
தயவோ சற்றும் காட்டானே

நாளை நடக்கும் சம்பவங்கள்
நமக்கோ ஒன்றும் தெரியாது
பாழும் உலகில் வீணாகப்
பாவப் பயிரை வளர்ப்பானேன்.

காலை மென்னும் கட்டாறு
கணமும் நில்லா தோடிறது
ஞாலமிசையாம் வாழ்கின்ற
நாட்கள் இதிலோர் துளியாகும்.

காலையில் உதிக்கும் ஆதவனும்;
கட்டவிழ் கின்ற மலரியாவும்
மாலையில் மடியக் காண்கின்றோம்
மறுநாட் புதுமை புதுமையடா.

பொன்னும் பொருளும் வீணாகும்
போகும் உன்பின் வாராது
என்று மிருப்ப தொன்றுண்டு
இதுவே ஈட்டும் புகழாகும்.

தூய நெறியிற் புகழீட்டு
துன்பம் செய்து வாழாதே
காயம் வாழ்ந்தாற் போதாது
கடமையு முண்டு மறவாதே.

தேயம் வாழப் பாடுபடு
சிறந்த புகழை நிலைநாட்டு
தீய யாவும் நீக்கிவிடு
செகத்தில் நீயே சிரஞ்சீவி.

சில சமயலறைக் குறிப்புகள்

"அடுப்பில் பாலை வைத்து விட்டு வந்துவிட்டேன்" என்ற அவசரம் வேண்டாம். கொதிக்க வைகும் பாலில் ஒரு சிறிய கண்ணாடிக் கோலியை போட்டுவிடுங்கள். பால் பொங்கி வழியாது.

●

நறுக்கி வைத்த வாழைத் தண்டு கறுத்துவிடுகின்றதா? நறுக்கிய துண்டுகளை மோரில் போட்டு வையுங்கள். கறுக்காதது மட்டுமல்ல, சுவையுடனுமிருக்கும்.

●

உரிக்கக் கடினமாக இருக்கும் சின்ன வெங்காயங்களை உரிக்க இதோ ஒரு சுலப வழி! பொடி வெங்காயங்களின் மேல் எண்ணெய் தடவி வெய்யிலில் உலர்த்திய பின், கைகளுக்கிடையில் வைத்துத் தேய்த்தால், எளிதில் தோல் உரிந்துவிடும்.

●

அடுப்பில் வைக்கும் பாத்திரங்களின் அடிப்பாகம் கரிபடிந்து கெட்டுவிடுகிறதா? அடுப்பில் வைப்பதற்கு முன் பாத்திரத்தின் அடிப்பாகத்தில் சுண்ணாம்பு பூசி வையுங்கள். பிறகு கழுவினால் எளிதில் கரி போய்விடும்!

●

வெண்ணெய் சுத்தமானதா இல்லையா என்பதைங் கண்டுபிடிக்க ஒரு வழி! சிறிது வெண்ணெயை எடுத்து ஒரு தாளில் தடவி, தீவைத்து எரியுங்கள். தாள் எரியும் போது 'கமகம' என்று மணம் வந்தால், நல்ல நெய். கெட்ட நாற்றம் வந்தால் கெட்ட நெய் என்று தெரிந்து கொள்ளலாம்.

விவசாயி....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

யடைந்து விட்டன வென்றே நான் உணருகிறேன். இந்த கமத்தொழிற் குழுக்கள் சீராயமைக்கப்பட வேண்டும். அன்றேல் கமத்தொழில் கமிஷனரால், கமத்தொழிற் குழுக்களுக்கு பதிலாக விசேட சபை நிறுவப்பட வேண்டும்.

"கமத்தொழிற் குழுக்களின் நிர்வாகமும் சீர்கேடாக உள்ளன. சேர்ந்த பணத்தின் சரியான கணக்கு வழக்குகள் அவர்களிடம் கிடையாது.

"ஆகவே, கமத்தொழில் அபிவிருத்தியடைய கமத்தொழிற் குழுக்கள் புனரமைக்கப்படவேண்டும். இது சிறந்த மாகாணத்தைப் பொறுத்தளவில் மிக முக்கியமானதாக உள்ளது".

'சுதந்திரன்'
புதிய சந்தா விபரம்
ஒரு வருடம் ரூபா 14-00
ஆறு மாதம் ரூபா 7-00
நிர்வாகி
சுதந்திரன்

பஸ் பிரயாணிகள் அவதி

கோப்பாய் சந்தியிலிருந்து கல்வியங்காடு வரை பருத்தித்துறை — யாழ்ப்பாணம் பிரதான வீதிகளில் பஸ் நிறுத்தப்படும் இடங்கள் குறிக்கப்படவில்லை. இதனால் பஸ் பிரயாணிகள் பெரிதும் அவதிக்குள்ளாகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீளமான மண்புழு

மிகசாதாரணமான மண்புழுக்களை நாம் கண்டிருக்கின்றோம். ஆனால் மிகப் பெரியதும், நீளமுமான மண்புழுக்கள் அவுஸ்திரேலியாவில் காணப்படுகின்றது. அதில் ஒரு அடிமொத்தமும், பன்னிரண்டு அடி நீளமுமான மண்புழுவே மிகப் பெரியதாகும்.

இப்புழுக்கள் மலைகள் போன்ற மேடைகள் அமைத்து அதன் உச்சியிலிருந்து கீழே செல்லும் துவாரங்களில் பெரும்பாலும் வாழ்கின்றது. ஏனைய நாடுகளில் இருக்கும் புழுக்கள் 5 முதல் 8 அங்குலம் நீளம்வரையில் காணமுடியும். இவற்றுக்கு கண்ணுமில்லை, காதுமில்லை. இப்புழுக்களை சில மீன்கொத்தி என்னும் பறவைகள் உணவாக கொத்தி உண்ணுகின்றது. இது பெரும்பாலும் அவுஸ்திரேலியா போன்ற வெளிநாடுகளிலே காணப்படுகின்றது.

வி. கே. மூர்த்தி.
மட்டக்களப்பு.

உங்களுக்கு தெரியுமா?

1. ஒரு தலை முறை என்பது பொதுவாக எத்தனை ஆண்டுகளைக் குறிக்கும்?
2. இன்று வழங்குகிற கால அட்டவணை யாரால் கொண்டு வரப்பட்டது?
3. கோகினூர் என்பது என்ன?
4. எப்போது நீதிபதி கறுப்பு தொப்பி அணிவார்?
5. விட்டமின் என்றபெயரை முதலில் தொடங்கியவர் யார்?
6. 13 என்ற எண் நன்மை இல்லாத எண்ணாக ஏன் கருதப்படுகிறது?
7. 'ஒலிம்பிக்' விளையாட்டுகளை ஆரம்பித்தவர் யார்?
8. வெள்ளை அறிக்கை என்பது என்ன?
9. மயிர் ஏன் நரைக்கிறது?
10. நயாகரா நீர் வீழ்ச்சி எங்குள்ளது?
11. வச்சிரம் என்னும் பசை எப்படி செய்யப்படுகிறது?

விடை

1. 33 ஆண்டுகளை.
2. 13-ம் போப் கிரிகரியால் 1582-ம் ஆண்டில்.
3. ஆங்கில அரசரது முடியில் 1849-ல் பதிக்கப்பட்ட பெரிய இரத்தினக் கல்.
4. குற்றவாளிக்கு மரணதண்டனை விதிக்கும் போது.
5. பங்க் விட்டமின் என்பவர்.
6. கிருஸ்துவும் அவர் சீடரும் கடைசி இராபோஜனத்துக்கு இருந்தபோது பதின்மூன்றுபேராக இருந்தனர் என்பதால்.
7. கிரேக்கர்.
8. அரசாங்கம் குறிக்கப்பட்ட கேள்வி அல்லது செயலைப் பற்றித் தெளிவுபடுத்தி வெளியிடும் அறிக்கை.
9. மயிர் வேரில் பிக்மெண்ட் என்னும் ஒருவகை நிறம் இருக்கிறது. அதுகெட்டுப் போகும் போது மயிர் நரைக்கிறது.
10. அமெரிக்காவில் உள்ளது.
11. மாட்டின் குளம்பு, தோல்களை பக்குவமாகக் காய்ச்சி செய்யப்படுகிறது.

பெரிய கடிகாரம்

அமெரிக்காவில் நியூயார்க் நகரில் உள்ள 'கால்கேட்' கடிகாரம் தான் உலகிலேயே மிகப்பெரியது. இந்த கடிகாரத்தில் முகப்பு விட்டம் 50 அடி. பரப்பு 1,963 சதுரஅடி. பெரியமுள் 27 அடி 3 அங்குலமும், சிறியமுள் 19 அடி 8 அங்குலமும் இருக்கின்றன. இரண்டு முட்களின் நிறையும் 2 தொன். இக்கடிகாரத்தின் பெண்டுலம் 8, அடி நீளமுடையது. பெரிய முள்ளின் முனை நிமிடத்திற்கு 31 அங்குலம் வீதம் நகருகிறது. இது மின்சாரத்தால் இயக்கப்படுகிறது. கடிகார எண்கள் 7 அடி உயரமும் இரண்டரை அடி அகலமும் உள்ளவை. 1924-ம் ஆண்டு டிசம்பர் முதல் ஓடிக்கொண்டு செய்து வருகிறது. இதை வாரனடேவி என்ற அமெரிக்கர் உருவாக்கினார்.

செவி உணவிற் கேள்வி உடையார்
அவி உணவின்
ஆன்றோரோடு ஒப்பர் நிலத்து

இலங்கையின் பாழடைந்த பழைய நகரங்கள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

3. அனுராதபுரத்தை எடுத்துக்கொண்டால் பாழடைந்து கிடக்கும் கட்டடங்கள் மன்னர்களினதும் மக்களினதும் செல்வவிருத்தியுடன் சமையப் பற்றையும் எடுத்துக் காட்டுகின்றன. அங்கு வாழ்ந்த மன்னர்கள் பௌத்தமதத்திற்கோ அன்றிச் சைவசமயத்திற்கோ தனிச்சலுகை காட்டாது எல்லோரும் ஏகனொருவனையே வணங்குன்றனர் என்ற பரந்த மனப்பான்மையுடன் சகல மதத்தினரையும் ஒரே நிரையில் வைத்து ஆட்சிசெய்தனரென்பதை அங்கமைந்துள்ள பல சமய சமாதிகள் எடுத்துக்காட்டுகின்றன. துட்டகைமுனுவால் அன்றமைக்கப்பட்ட ஆயிரங்கால் மண்டபத்தின் இன்றைய நிலை எவ்வளவு மனஎழுச்சியையும், மகிழ்ச்சியையும் ஏற்படுத்துகின்றது.

தன் தந்தையைச் சுவரினுள் வைத்துக் கட்டிவிட்டு சகோதரனின் கண்ணிற்படாமல் மறைந்து வாழ்வதற்காக பயங்கரமான மலையிலும் பாதையமைத்து அதனுச்சியிலே கோட்டை கட்டினான் காசியப்பன். சிங்கத்தின் முகவுருவில் அமைந்த அம்மலைக் கோட்டை சிங்ககிரி என்றும் பெயர் பெற்றது. காசியப்பன் மலையின் மேல் அமைத்த கோட்டையும், தடாகங்களும், சிற்ப சித்திரங்களும் என்னே! அஜந்தாக்குகை ஓவியத்தைக் கூட மலைக்குகையில் வரைந்துள்ளானென்றால் அம்மன்னனின் கலையார்வம் எப்படிப்பட்டதென்பதை ஊகித்தறிந்து கொள்ளலாம்.

இப்படியெல்லாம் புகழ் ஓங்கிச் செல்வங்கொழித்த இடங்கள் இன்று காடடர்ந்து கரடி புலி வாழும் இடங்கள் போல் ஆகிவிட்டதென்றால் எவ்வளவு துக்கிக்க வேண்டியிருக்கின்றது. அன்று பல்லாயிரக் கணக்கிற் செலவழித்துக் கட்டிய கோட்டை கொத்தளங்கள் இன்று மண்ணிலேயே மண்டியடடுக்கிடக்கின்றது. இனறும் தன்னெழில் குன்றாச் சிற்ப சித்திரங்களின் அழகே ஓர் தனியளகு. அந்நிலையிற் கிடக்கும் போதும் அதன் புதிய நிலைகள் நம் கற்பனைக் கண் முன் தோன்றித்தரும் மகிழ்ச்சியோ எண்ணிலடங்காது.

அந்தக்காலத்திலே ஆட்சி புரிந்த மன்னர்களும் வாழ்ந்த மக்களும் எவ்வளவு சமயப் பற்றும் கலை ஆர்வமும் கொண்டு வாழ்ந்துள்ளார்களென்பது நிலைக்கண்ணாடி போற் புலப்படுகின்றது.

இது மட்டுமா? அன்று மன்னர்களின் குன்றாச்சமையப்பற்றால் அமைந்த தேவலாயங்களே இன்று ஓரளவிற்கேனும் மக்கட் செல்வத்தைத் தினந்தோறும் ஏகனைத் தரிசிக்கச் சந்நிதி செல்லவைக்கின்றது. அன்று மன்னர்கள் தேவலயங்களுங்கட்டாது மதத்தை அவமதித்திருந்தால் என்றோ இக்கட்டடமெலாம் இருந்த விடம் தெரியாது மண்ணோடு மண்ணாய் மங்கி மறைந்திருக்கும். அன்று அம்மன்னர்கள் செய்த பெருஞ் சேவையே இன்று அவர்களின் செல்வத்தை நிர்ணயிக்கவும், திருநாமங்களை நினைவுறுத்தவும் ஏதுவாக இருக்கின்றதென்பது யாமறிந்த உண்மையே.

பண்டைய மன்னர்களையும், அவர்கள் ஆட்சியையும், சமயத்திற்களித்த அந்தஸ்தையும் விவசாயத்தில் எவ்வளவு ஆர்வங் கொண்டு குளந்தொட்டு வளம்பெருகினர் என்பதனையும் நினைக்குந்தொறும் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்துவதுடன், இன்றைய நிலையை நோக்கித் துக்கிப்பதற்கும் எடுத்துக் காட்டாக இருந்து கொண்டிருப்பவை இன்று பாழடைந்த நிலையிற் கிடக்கும் பழைய நகரங்களும் தூர்ந்த குளங்களும் என்பதில் எள்ளளவேனும் ஐயமுறுவதற்கில்லை.

எஸ். எம். இப்ருகிம்

வள்ளுவர் வாழ்விலே....

திருமாலைப் போன்று இரண்டு அடிகளால் இவ்வுலகை யளந்த வள்ளுவர் வாழ்விலே, அறிவுக்கு சுவையூட்டும் பல சம்பவங்கள் பொதிந்துள்ளன. பகவன், தன்னால் வெறுத்தொதுக்கப்பட்ட பெண்ணையே, பின் விதி வலியால் மணந்து கொண்டமையால், 'தமக்கு பிறக்கும் பிள்ளைகளை பிறந்த இடத்திலே விட்டு செல்லுவர்—தன்னந்தனியே அல்ல, பிள்ளைகள் இல்லாமல் வாடும் பெற்றோரிடம் விட்டு செல்வர்.

இவ்வாறு—திருமலையிற் பிறந்த மகவை, வேளாளன் ஒருவன் பிள்ளைப் பேறின்றி வாடுதல் கண்டிரங்கி அவனிடம் விட்டு சென்றனர். இவ் வேளாளனின் சுற்றத்தார் இது குறித்து, அவனை இழிவாய் பேச, அவன் தனக்குக் கீழே பணி செய்யும் பறைக் குடும்பத்தினரின் தலைவனிடம் அம் மகவை விட்டு விட்டான். பறை வாசிப்போருக்கு வள்ளுவர் என்ற பெயருண்டு. எனவே அக் குழந்தைக்கு வள்ளுவர் என்ற பெயர் நிலைத்து விட்டது.

பின், வள்ளுவர் இளமைப் பருவத்தே தமிழை கசடற கற்றுத் தேர்ந்தார். பின் வாசுகியை மணந்த வரலாறும் யாவரும் அறிந்ததே. இவர் தமது இல் வாழ்வை நடாத்தும் பொருட்டு, நெசவு தொழில் செய்து சுருங்கிய செலவோடு விரிந்த உள்ளத்தோடும் விருந்தோம்பி வந்தார். இவ்வாறிருக்கையில்—ஒருவன் அவரை அணுகி இல்லறமோ துறவறமோ விழுப்பம் வாய்ந்தது என்று வினவினான். வள்ளுவர் அவனை தம் இல்லத்தில் அமர்த்தி—தம் இல்லாளின் குண நலன்களை கூறாது கூறி அன்பிற் சிறந்த—கற்புடைய மனைவி வாயக்குமாயில் இல்லறமும்-அன்றேல் துறவறமுமே சிறந்தது' என்று கூறினார்.

இவரது பொறுமையை சோதிக்க எண்ணிய ஒரு முரடன்-அவர் விற்கசென்ற சேலை ஒன்றின் விலையை கேட்டான். பின்அதை வாங்கி பாதிப் பாதியாக கிழித்துக் கொண்டே அதன் விலையை வினவினான். வள்ளுவரும் மனம் வெகுளாது விலையை பொறுமையுடன் கூறினார்.

அவன் வள்ளுவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். பின்னொருகால் ஒரு சிறுவன் வள்ளுவர் தாம் வகுத்த குறளின்படி நடக்கிறாரோ என்று சோதிக்க எண்ணி அவர் இல்லத்திலில்லாத வேளை பார்த்து—வாசுகியுடன் வீண் வம்பு செய்தான். அது கண்ட வள்ளுவர் அவனைத் தூணில் கட்டி, நன்றாக அடித்தார். அப்போது அவன் 'ஐயனே' அகழ்வாரை தாங்கும்நிலம் போல்.

தம்மை—இகழ்வாரை
பொறுத்தல் தலை'—(151)

— தமிழழகன் —

என்ற குறளின் படி நீரே நடக்கவில்லையே' என்றான். அது கேட்டு வள்ளுவர் நீ குறள் முழுவதையும் சரியாக படிக்கவில்லை. 'தெரிந்து செயல் வகை' குறளைபடிக்கவில்லையோ—

'செய்தக்க அல்ல செயக்
கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்'

சிறுவன் வெட்கி தலை குனிந்தான். இனி ஏலேல சிங்கர் எவ்வாறு வள்ளுவரின் மாணவராவார் என்பதைப் பார்ப்போம்.

ஏலேல சிங்கரை காண சென்ற போது—அவர் சுவாமி கும்பிடுகிறார் என்று சொல்ல; 'இல்லை அவர் வரவு செலவு கணக்கு பார்க்கிறார்' என்றார் வள்ளுவர். ஏலேல சிங்கர் தன் தவறை உணர்ந்து, அவரை வீழ்ந்து வணங்கினார். பின் அவருடைய மாணவனாக தன்னை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று, இரந்து கேட்டார். உடனே வள்ளுவர் அவரை ஒரு மரக்கிளையில் தொங்கச் செய்து— பின் இரு கைகளையும் விடுமாறு பணித்தார். அவரும் குருவின் கட்டளை [illegible] நின்றார். அன்றிலிருந்து அவர் வள்ளுவரின் மாணவருள் ஒருவரானார்.

இயற்கைப் பாடம்

நாயும், யானையும்.

ஊர்ந்து, செல்லும் அற்பப் பிராணியான எறும்பிடமிருந்து சுறுசுறுப்பையும். எச்சில் இலை நக்கி வாழும் நாயிடமிருந்து நன்றியையும், பசுவிடமிருந்து சாதத குணத்தையும் கற்றுக் கொள்கிறோம். யானை பழிக்குப்பழி வாங்கும் குணமுடையது. 'யானை அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும். எறிந்தவேல்மெய்யதாக வால் குழைக்கும் நாய்' எனவே, யானைக்குணம் வாய்ந்தவரோடு நாம் நட்புக் கொள்தல் தகாது. நாய்க்கு எறிந்த அம்பு உடம்பில் தைத்திருக்குகும் போதே எஜமான் அழைத்தால் வாலை ஆட்டிக் கொணடு ஓடிவரும். ஆகையால், நாம் நன்றிக்குணம் வாய்ந்தவரோடு நட்புக் கொள்வதே நலம்.

காகம்.

காகம் காலையில் துயிலெழுகின்றது. ஏதாவது ஒரு உணவைக் கண்டால் தன்னலமின்றி 'காகா' வென்று கத்தித் தன்னினத்தை அழைத்துக் கூடி உண்கிறது. 'மருந்தே யாயினும் விருந்தோடுண்' என்பதற்கொப்ப நாமும் சுயநலத்தை ஒளித்து,காகததைப் போலச் சுற்றத்தாரோடு அருந்தி இன்புறுதல் கடமையாகும்.

நிலம்.

'அகல்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை இகழ்வார் பொறுத்தல் தலை' என்று திருக்குறள கூறுவது போலத் தன்னைத் தோண்டுகின்றவனைப் பொறுமையோடு தாங்கிக்கொண்டிருக்கும் பூமியைப் போலத்தம்மை இகழ்ந்து பேசுகின்றவர்களைப் பொறுப்பது மிக நல்ல பண்பு என்ற பாடத்தைப் பூமி நமக்குக் கற்பிக்கிறது.

இயற்கையில்...

நமதுகடமைகளையும், பழக்க வழக்கங்களையும், இயற்கையை ஆராய்ந்து பொருத்திக் கொள்ளலாம். இயற்கையை ஆராய்ந்து அதன வனப்பையும், நுட்பங்களையும் இயல்பினையும் உணர்ந்தே சித்திரக்காரர் சித்திரிக்கின்ற

க. அ. பரிமளா

னர். சிற்பிகள் தொழிலில் மேம்படுகின்றனர். கவிஞர்கள் இயற்கையைப் பருகி அதன் எழிலைப் பாடினாலே ஏற்றமுண்டு. காவியம், ஓவியம் இவற்றிற்கு உயிர் நாடி இயற்கை அழகேயாகும்.

இயற்கைப் பொருட்களை ஆராயும் ஆற்றல் நமக்குஇருக்குமாயின நாம் மேனமையடைவோம். இயற்கை, ஆராய்ச்சி செய்யும தோறும் நம் சுயநலம் குன்றிப் பொது நலச்சிந்தனை உடையவராவோம். நமதறிவு வளரும்; ஆற்றல் பெருகும்;மனக்கவலை மாறும்; சோம்பல் நீங்கிச் சுறுசுறுப்பு ஏற்படும். பிறரால் போற்றப்படுவோம். புத்துணர்ச்சி ஏற்பட்டுப் புதிய பணியில் ஈடுபட்டு என்றும் அழியாப்புகழுடம்படைவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில்செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது

ஆகஸ்ட் மாதம் 10-ம் தேதி முதல்

செல்லமஹால் (கொழும்பு) ஈரோஸ் (பாமன்கடை) இம்பீரியல் (மட்டக்களப்பு) நெல்சன் (திருமலை)
காசினோ (மாத்தளை) ரீகல் (கண்டி) ஸ்ரீ முருகன் (வவுனியா)

தற்பொழுது வின்சர் (யாழ்ப்பாணம்) காண்பிக்கப்படுகிறது

'சிவாஜி கணேசன், சௌகார்ஜானகி,
கே. பி. சுந்தரம்பாள், நாகேஷ், எஸ். வி. சுப்பையா'
வி. கே. ராமசாமி எல். விஜயலட்சுமி நடிக்கும்

மகாகவி காளிதாஸ்

செல்லமஹாலில்

ஐந்தாவது ஜனத்திரள் வாரமாக

எம். ஜீ. இராமசந்திரன், ஜெயலலிதா நடிக்கும்

தனிப்பிறவி

2வது மனங்கவர் மாதம்!

சென்ட்ரல் (மருதானை) ஈரோஸ் (பாமன்கடை) ராணி (யாழ்ப்பாணம்)
ராஜேஸ்வரா (மட்டுநகர்) லிபர்ட்டி (அட்டன்) ஜோதி (திருமலை)

வியப்பும் விறுவிறுப்பும் மிகுந்த பல புதுப்புது அம்சங்களைக் கொண்டு ஆரம்பம் முதல் இறுதிவரை துடிப்புடன் விளங்கும் புதுமுறை நடனம்!

சாரதா புரொடக்ஷன்ஸ்

பட்டணத்தில் பூதம்

ஈஸ்ட்மென் கலர்

* ஜெய்சங்கர் * கே. ஆர். விஜயா
* நாகேஷ் மற்றும் பலர் நடித்தது!

3-வது வெற்றி வாரம்



கிங்ஸ்லி (கொழும்பு) காமினி (மருதானை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) ராஜ் (நீர்கொழும்பு)
ஸ்ரீகிருஷ்ணா (திருமலை) விஜயா (மட்டுநகர்) பிளாசா (வெள்ளவத்தை)

- மக்கள் திலகம் எம். ஜி. ஆர்,
- கன்னடத்துப் பைங்கிளி சரோஜா தேவி,

நாகேஷ், மாதவி, டி. ஆர். ராமச்சந்திரன் மற்றும் பலர் நடிக்கும்

ஏ. வி. எம். அளிக்கும்

அன்பே வா

(ஈஸ்ட்மன்கலர்)

★ கண்ணைக்கவரும் வண்ணக்காட்சிகள்.
★ கருத்தைக் கிளறும் காதற் கட்டங்கள்
★ மயிர்க்கூச்சலிடும் சண்டைக்காட்சிகள்

கதை வசனம் டைரக்ஷன்: திருலோகசந்தர்,
பாடல்கள்: வாலி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கிளேரன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் சார்பாக [illegible] கொழும்பு, பண்டாரநாயக்கா வீதி, 194, ஏ. இலக்கத்தில் 1967-ம் வருடம் ஒகஸ்ட் மாதம் 5-ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.